Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily


மழைக்கான சாத்தியம் உண்டு.
27.°c 26.°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 345 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 21, வியாழன் 07.11.2013

## காணாமற்போனோரின் விவரங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ.07
மன்னார் பிரஜைகள் குழுவினரால், காணாமற்போனவர்கள் தொடர்பில் வடக்கில் பதிவு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 301 பேரின் ஆவணங்களும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் நேற்றுப் புதன்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன.
1990 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற் கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக் குழு நியமிக்கப் பட்டது.
இந்த ஆணைக்குழுவுக்குத் தகவல்களை வழங்கும் பொருட்டு, மன்னார் பிரஜைகள் குழு வடக்கு மாகாணம் முழுவதும் காணாமற்போனோர் தொடர்பில் பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டது.
யாழ். மாவட்டத்தில் 904 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 610 பேரும், வவுனியா மாவட்டத்தில் 181 பேரும், மன்னார் மாவட்டத்தில் 138

21

## முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் தஞ்சாவூரில் நேற்றுத் திடீர் திறப்பு

### குறித்த தினத்துக்கு முன்கூட்டியே திறந்தார் பழ.நெடுமாறன்





சென்னை, நவ.07
தஞ்சாவூரில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் நேற்றைய தினம் திடீரெனத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. முன்னதாக நாளை வெள்ளிக்கிழமை திறந்து வைக் கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நினைவு முற்றத்தை நேற்று பழ.நெடுமாறன் திடீரெனத் திறந்து வைத்தார்.
2009 ஆண்டு இலங்கையில் நடந்த இறுதிப்போரின் இனப்படுகொலையை நினைவு படுத்தும் விதமாக தஞ்சாவூர் அருகே வாலூரில் 'முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்' அமைக்கப்பட்டிருந்தது. உலகத் தமிழர் பேரமைப்பு அறக்கட்ட

21

சாவுக்கு நீதி கோரி நேற்று ஆர்ப்பாட்டம் 03
இந்தியாவின் நிலை என்ன? 06
தலிபான் அமைப்புடன் பேச்சுக்கள் தொடரும் 07
இணுவில் யூத் வென்றது 22
தென்னாபிரிக்காவுக்கு செல்கிறது பாகிஸ்தான் 23

# மன்மோகன் வருகை உறுதியாகவேயில்லை

## எந்த அறிவிப்பும் வரவில்லை என்கிறது இலங்கை



கொழும்பு, நவம்பர் 07
பொதுநலவாய மாநாட்டில் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பதை அந்நாட்டு அரசு இன்னும் இலங்கையிடம் உறுதிப்படுத்தவில்லை என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம நேற்றுத் தெரிவித்தார்.
எனினும், பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பார் என்ற நம்பிக்கை இலங்கைக்கு இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.
கொழும்பு மாநாட்டில் பிரதமர் பங்கேற்கவேண்டும் என டில்லி வெளிவிவகார அமைச்சு பரிந்துரை செய்துள்ளது என 'த இந்து' நாளிதழ் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது. அத்துடன், பொதுநலவாய மாநாடு தொடர்பில் பிரதமரே இறுதி முடிவெடுக்கவேண்டும் என மத்திய கூட்டணி அரசின் பிரதான கட்சியான காங்கிரஸ் ஆலோசனை வழங்கியுள்ளது என்று ஏனைய இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனவே, மாநாட்டுக்குச் செல்லும் முடிவையே மன்மோகன் எடுப்பார் என டில்லி அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.
இந்நிலையில், கொழும்பு மாநாட்டில் இந்தியப் பிரதமரின் பங்குபற்றல் தொடர்பில் வெளிவிவகார அமைச்சிடம் நேற்று வினவப்பட்டது.
பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்பதை டில்லி அரசு இலங்

21

## இசைப்பிரியா ஒரு புலி

### அவரைப் போருக்கு அனுப்பாமல் விட்டிருப்பாரா பிரபாகரன் கேள்வி எழுப்புகிறார் இராணுவப் பேச்சாளர் வணிகசூரிய



யாழ்ப்பாணம், நவ.07
"அப்பாவிச் சிறுவர்களையே இறுதிக்கட்டப் போருக்காகக் களத்துக்கு அனுப்பிய பிரபாகரன் லெப்டினன்ட் கேணல் தரத்திலிருந்த இசைப்பிரியாவைப் போருக்கு அனுப்பாமல் விட்டிருப்பாரா?" என்று கேள்வியெழுப்பினார் இராணுவப் பேச்சாளர்.
'சனல் - 4' இயக்குநர் கெலும் மக்ரேயின் கருத்துத் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இசைப்பிரியா இராணுவத்தினரால் உயிருடன் பிடித்துச் செல்லப்படும் காணொலியை இலங்கை

21

## மன்மோகன் புறக்கணித்தால் அன்சாரியும் வரமாட்டார்

கொழும்பு, நவ.07
கொழும்பில் நடைபெறவுள்ள மாநாட்டைப் புறக்கணிக்க இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் முடிவெடுத்தால், இந்தியக் குழுவுக்குத் துணைக் குடியரசுத் தலைவர் ஹமீத் அன்சாரியும் தலைமை

21

## பொதுநலவாய பக்க நிகழ்வை புறக்கணிக்கிறது பிரிட்டன்

லண்டன், நவ.07
பொதுநலவாய மாநாட்டின் பக்க நிகழ்வாக நடைபெறும் வர்த்தகப் பேரவை மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாகப் பிரிட்டன் அறிவித்துள்ளது.
பிரிட்டன் நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில், வர்த்தக அமைச்சர் பலோன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவிக்கையில், பிரதமரின் வர்த்தகத் தூதுவர்களின் தலைவரான மார்லன் பிரபு, பொதுநலவாய வர்த்தகப்பேரவையின் அழைப்பின் பேரில் இலங்கைக்குச் செல்கின்றார்.
ஆனால் அந்தக் கூட்டத்தில், பிரிட்டன் வர்த்தகப் பிரதிநிதிகள் பங்கேற்கமாட்டார்கள் என்று கூறினார்.
பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் பங்கேற்கக்

21

## அரசுக்கு பொறி

கொழும்பு, நவ.07
பொதுநலவாய மாநாடு என்பது இலங்கைக்கு வைக்கப் பட்டுள்ள பொறி. இது குழப்படிக் கார மாணவனை வகுப்புத் தலைமை (மொனிற்றர்) மாணவனாக்குவது போன்றது என்கிறார் மனோகணேசன்.
இந்தப் பதவியை

21

## வடக்கு மாகாணத்துக்கு வருவார் கனேடிய நாடாளுமன்றச் செயலர்



மொன்றியல், நவ.07
கனேடிய வெளிவிவகார மற்றும் அனைத்துலக மனித உரிமை விவகாரங்களுக்கான நாடாளுமன்றச் செயலர் தீபக் ஒப்ராய், பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க இலங்கை வரும்போது வடக்கு மாகாணத்துக்கும் பயணம் மேற்கொள்வேன் என்று தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
மனித உரிமைகள் விவகாரத்தில் தற்போது உள்ள நிலைப்பாட்டில் தொடர்ந்து இருக்க முடியாது என்ற மிகத் தெளிவான செய்தி இலங்கை அரசுக்கு ஏற்கனவே வழங்

21

## இலங்கைக்கு வருவதற்கு கெலும் மக்ரேக்கு 'விஸா'



கொழும்பு, நவ.07
இலங்கையின் போர்க்குற்றங்களை அம்பலப்படுத்தி வரும் 'சனல் -4' தொலைக்காட்சியின் ஆவணப்பட இயக்குநர் கெலும் மக்ரே, பொதுநலவாய மாநாட்டில் செய்தி சேகரிப்பதற்காக இலங்கை வருவதற்கு நுழைவிசைவு

21

உதயன் 07/11/2013

# வடமராட்சியில் கல்வி நிலை பற்றி ஆராய்ந்தார் மாகாண அமைச்சர்

வடமராட்சி, நவ.07

வடமாகாண கல்வி அமைச்சர் க.குருகுலராஜா நேற்று முன்தினம் பருத்தித் துறைக்கு வருகை தந்து உத்தியோகபூர்வக் கடமைகளில் ஈடுபட்டதுடன் தான் படித்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியையும், சகோதரப் பாடசாலையான மெதடிஸ்த மகளிர் உயர்தர பாடசாலையையும் பார்வையிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறைக்கு வந்த மாகாண கல்வி அமைச்சரை பருத்தித்துறை நகரசபை வாசலில் வைத்து பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபாரவீந்திரன், சபை உறுப்பினர்கள், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் தலைவர் பா.இரகுநாதன் ஆகியோர் மாலை சூடி வரவேற்றார்கள். சபைத் தலைவர் மாகாண கல்வி அமைச்சருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

அங்கிருந்து பருத்தித் துறை மெதடிஸ்த மகளிர் உயர் தர பாடசாலைக்கு மாணவிகளின் பாண்ட் வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் அங்கு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அவர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் களை வழங்கினார்.

விழா முடிவில் மெதடிஸ்த மகளிர் உயர்தர பாட சாலையையும், தான் பயின்ற ஹாட்லிக் கல்லூரியையும் அமைச்சர் பார்வையிட்டார்.

தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சி கல்வி வலயத்தில் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற அதிபர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு அதிபர்களுடன் கலந்துரையாடினார். (ஐ-8)

# 80 லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா மன்னாரில் மீட்பு



மன்னார், நவ.07

மன்னார் சௌத்பார் கடற்கரைப்பகுதியில் வைத்து நேற்று புதன்கிழமை காலை 80 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவை மன்னார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்கு நேற்று காலை கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி விஜய சேன தலைமையிலான போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் சௌத்பார் கடற்கரைப்பகுதிக்குச் சென்று 19 பொதிகளைக் கொண்ட 40 கிலோ கிராம் கேரள கஞ்சாப் பொதியை மீட்டுள்ளனர்.

இதன் போது அங்கிருந்த இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டதோடு கஞ்சாவை ஏற்றிச் செல்வ தற்காக வைத்திருந்த ஓட்டோ ஒன்றையும் மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ஐ-12)

# அதி விரைவுத் தபால் சேவை வடக்குக்கு இன்று முதல்

யாழ்ப்பாணம், நவ.07

வடக்கு மாகாணத் துக்கான அதிவிரைவுத் தபால் சேவை இன்று வியாழக்கிழமை 10 மணிக்கு சுபவேளையில் வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா தபாலகத்தில் இருந்து முற்பகல் 10.01 மணிக்கு புறப்படும் வாகனம் பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.பிரதம தபால கத்தை வந்தடையும்.

மீண்டும் இங்கிருந்து பிற்பகல் 1.30 மணிக்கு விரைவுத் தபால்களுடன் இந்த வாகனம் வவுனியா நோக்கிப் பயணமாகும். நாடு முழுவ தும் ஒரே சமயத்தில் தெரிவு செய்யப்பட்ட தபாலகங்களில் இந்த சேவை இன்று ஆரம்பிக்கப் படுகிறது. (த-17)

# பிக்குவுக்கு விளக்கமறியல்

வவுனியா அட்டம்பஸ் கடை பகுதியில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் பௌத்தபிக்கு ஒருவரால் சிறுவன் ஒருவன் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வழக்கில் குறித்த பிக்குவை விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குறித்த பிக்குவுக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்திருந்தது. இதன் போது சந்தேக நபரான கல்யாண திஸ்ஸ தேரர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப் பட்டார். வழக்கை விசாரித்த வவுனியா மாவட்ட நீதிவான் வி.இராம கமலன் சந்தேக நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ-400)

# நட்டத்தில் இயங்கிய நல்லூர் சங்கத்தை நிமிர்த்தியது நியமன இயக்குநர் சபையே

## *சங்கப் பணியாளர்கள் அறிக்கை*

வடமராட்சி, நவ.07

மிகப்பெரியநட்டத்தில் இயங்கி வந்த நல்லூர் ப.நோ.கூ. சங்கம் நியமன இயக்குநர் சபையின் வழி காட்டலில் தொடர்ச்சியாக இலாபம் ஈட்டும் ஒரு சங்கமாக முன்னேற்றம் அடைந்துள்ளது. அத்தோடு பணியாளர்களுக்கான சம்பளம், விசேட ஊக்குவிப்புப்படிகள் என்பனவும் சீராக மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர் சங்கத்தின் பணியாளர்கள்.

குறித்த சங்கத்தின் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் சார்பில் அதன் உப தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் அண்மையில் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள அறிக்கை ஒன்றின் நல்லூர் சங்கத்தின் நெறியாளர் குழு பக்கச்சார்பாக செயல்படுவதால் தமக்கு ஒரு ஜனநாயக ரீதியாக நெறியாளர் குழு தேவை என்ற சாரப்பட தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை மறுத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் சார்பில் 44 பேர் கையொப்பம் இட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

கூட்டுறவு ஊழியர் சங்கத்தின் நல்லூர் கிளை சார்பில் வெளியிடப்பட்டதான குறித்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்ட விடயங்கள் முற்றிலும் தவறானவை. உண்மையில் குறித்த தொழிற் சங்கம் உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்யப்படாத ஒன்றாகும்.

ஆனால் சங்கம் 2009 ஆம் ஆண்டு 19 இலட்சம் ரூபாவுக்கு அதிகமாக நட்டத்தை எதிர்நோக்கிய போதே கூட்டுறவுக் திணைக் களத்தால் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நியமன இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட் டது. அதன் பின்னர் சங்க நடவடிக்கைகள் சீரானதுடன் சங்கம் தொடர்ச்சியாக இலாபத்திலும் இயங்க தொடங்கியுள்ளது. இதன் மூலம் பணியாளர்களுக்கான மாதாந்த வேதனம் சீராக வழங்கப் படும் நிலை ஏற்பட்டது. இது தவிர வாழ்க்கைச் செலவுப் படி, ஊக்கு விப்பு, விசேட படிகள், விடுமுறைநாள் சம்பளம் என்பவற்றையும் பணியாளர்களுக்கு வழங்க கூடிய அளவுக்கு சங்கத்தின் நிதி நிலைமை வலுப்பெற்றது. இது தவிர கூட்டுறவு சட்டங்களுக்கு அமைவாக பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். இதில் எந்தவொரு மோசடியும் இடம்பெறவில்லை என்பதை அனைவரும் அறிவார்கள்.

எனவே அர்ப்பணிப்போடு தமது நேரத்தையும் தியாகம் செய்து சங்கத்துக்கும் மக்களுக்கும் சேவையாற்றிவரும் பிரதேச செயலர் பா.செந் தில் நந்தனன் தலைமையிலான நியமன இயக்குநர் சபைக்கு எதிராக ஒரு சிலர் எழுப்பியுள்ள ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களை பணியாளர்கள் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றுள்ளது. குறித்த அறிக்கையின் பிரதிகள் வடமாகாண முதலமைச்சர், தவிசாளர், அரச அதிபர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, யாழ். மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்திஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பூட்டியிருந்த கடையில் தீ பொருள்கள் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், நவ.07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி. வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் கடை நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மருதனார்மடம் சந்தியிலிருந்து, வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் கடையில் களவாடப் பட்டிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அளவெட்டி அருணோதய ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் வீட்டுடன், வர்த்தக நிலையம் அமைந்துள்ளது. குறித்த வர்த்தக நிலையம் தற்போது பூட்டப்பட்டுள்ளது.

வர்த்தக நிலைய கட்டத்தினுள் வீட்டுத் தள பாடங்கள் மற்றும் பழைய புத்தகங்கள் என்பவற்றுடன் பட்டாசுகளும் இருந்தன.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் திடீரென வெடிச் சத்தம் கேட்டதால் வீட்டார் எழுந்து சென்று பார்த்த போது கடை எரிவதை அவதானித்துள்ளனர்.

உடனே அவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இருப்பினும் பெருமளவான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

வீட்டின் கேற்கதவு பூட்டி விட்டுப் படுக்கைக்குச் சென்ற நிலையில், அசம்பாவிதம் நடக்கும் போது திறந்த நிலையில் காணப்பட்டதால் இனந்தெரியாதோர் வீட்டினுள் வந்தே இதனைச் செய்திருக்க வேண்டும் என்று பிரதேச சபை உறுப்பினர் மயூரதன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5)

# குழந்தைகளின் இறப்புக்கு காரணமான தாய்க்கு பிணை

யாழ்ப்பாணம், நவ.07

புங்குடுதீவில் இரண்டு குழந்தைகளை கிணற்றில் வீசி தானும் கிணற்றில் விழுந்து உயிர் துறக்க முற்பட்ட சம்பவத்தில், இரண்டு குழந்தைகளையும் கொலை செய்த குற்றச்சாட்டில் சுமார் எட்டு மாதங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த தாயார் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக் கப்பட்டார்.

யாழ். மேல் நீதிமன்றில் அவர் தொடர்பான பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் பிணை அனுமதி வழங்கினார்.

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி இரவு ஒரு மணியளவில் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சகாயநாதன் தேனுஷா (வயது- ஆறு மாதங்கள்) சகாயநாதன் குயின்ஷா (வயது- ஒன்றரை) ஆகிய குழந்தைகளே கிணற்றில் வீசப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

தனது இரண்டு குழந்தைகளையும் கிணற்றில் வீசி விட்டு தாயாரான டிலானியும் கிணற்றில் குதித்து உயிர் துறக்க முற்பட்டுள்ளார். கிணற்றின் ஆழம் குறைவாக இருந்ததனால் தாயார் உயிரிழக்கவில்லை. கிணற்றினுள் கல் ஒன்றைப் பிடித்த வண்ணம் தாயார் இருந்துள்ளார். அவர் வைத்திருந்த (ரோச் லைற்) ஒளிர்ந்த நிலையில் கிணற்றுக்கு வெளியே காணப்பட்டிருந்தது.

அதிகாலை விழித்துக் கொண்ட கணவர் மனைவியையும் பிள்ளைகளையும் காணாது வெளியே தேடி வந்த போது கிணற்றடியில் ரோச் லைற் ஒளிர்ந்த நிலையில் இருக்கக் கண்டு கிணற்றின் உள்ளே பார்த்த போது சம்பவம் தெரியவந்தது.


உடனடியாக கிணற்றிலிருந்து மனைவியை வெளியே தூக்கி விட்டார் கணவர். குழந்தைகளைக் காப்பாற்ற உதவியாக கணவர் அயலவர்களை அழைத்த போது மனைவி மீண்டும் கிணற்றில் விழுந்து உயிர் துறக்க முற்பட்டுள்ளார். அவர் மீண்டும் காப்பாற்றப்பட்டார். குழந்தைகளை வெளியே தூக்கிய போது அவை ஏற்கனவே உயிரிழந்து விட்டமை தெரியவந்தது.

கணவன் மனைவிக்கு இடையிலான முரண்பாடே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் எட்டு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கபட்டிருந்த மனைவி சார்பாக அவரது கணவனான சகாயநாதன் சட்டத்தரணி ஊடாக யாழ். மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அதன்படி 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தலா இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார். (ஐ-4)

### புத்தூரில் கிணற்றில் இருந்து யுவதியின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம்:

# சாவுக்கு நீதி கோரி நேற்று ஆர்ப்பாட்டம்







அச்சுவேலி, நவ.7

"எனது மகளின் சாவுக்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்தித் தண்டிக்கத் தவறினால் நானும் மகளின் சடலம் மீட்கப்பட்ட கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வேன். குற்றவாளிகள் தண்டிக்கப்படாமவிடில் இந்த நிலை எதிர்காலத்தில் எல்லோருக்கும் ஏற்படலாம்".

புத்தூரில் கொலை செய்யப்பட்ட நிலையில் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட மைதிலி (வயது-26) யின் வயோதிபத் தாயார் கண்மணி அழுது குழறிய நிலையில் மேற்கண்டவாறு கூறினார்.

புத்தூரில் கடந்த 29 ஆம் திகதி சடலமாக கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட இளம் பெண்ணான அமிர்தலிங்கம் மைதிலியின் சாவை அடுத்து அதற்கு நீதிகோரி, கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

சடலம் மீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் உள்ள யாழ்ப்பாணம்- பருத்தித்துறை பிரதான வீதியோரத்தில் நேற்று புதன்கிழமை காலை இந்தப் போராட்டம் நடைபெற்றது. ஆண்களும் பெண்களும் வயது வேறுபாடு இன்றி பெருந்திரளாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட உறவினர்கள் ஒப்பாரி வைத்து ஒப்புக்கூறி அழுது புலம்பியமை வீதியால் சென்றவர்களின் கவனத்தை ஈர்த்ததோடு அவர்களும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து சிறிது நேரம் தரித்து நின்றனர். பொலிஸாரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை அவதானித்துக்கொண்டு நின்றனர். அவர்கள் எந்தவிதமான தலையீடும் மேற்கொள்ளவில்லை.

உயிரிழந்த யுவதியின் வயோதிபத் தாய், தந்தை இருவரும் மகளின் ஆடைகள் மற்றும் சுலோக அட்டைகளைத் தாங்கிய நிலையில் காணப்பட்டனர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட இளம்பெண்கள் கறுப்பு நிற உடைகளுடன் காணப்பட்டனர். அவர்கள் தங்களது நெற்றி மற்றும் முகங்களில் சிவப்பு மையினால் குறியீடுகள் மற்றும் சுலோகங்களை வரைந்திருந்தனர்.

காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகிய கவனவீர்ப்புப் போராட்டம் 9.30 மணியளவில் முடிவடைந்தது. முடிவில் எல்லோரும் சடலம் மீட்கப்பட்ட கிணற்றடியில் ஒன்று கூடி உயிரிழந்த பெண்ணின் ஆத்ம சாந்திக்கு மௌன அஞ்சலி செய்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் தந்தையாரான ஓய்வு பெற்ற கச்சேரி ஊழியர் அமிர்தலிங்கம், "எனது மகள் திறமையாக நீந்துவாள். அவள் உயிரோடு கிணற்றில் போடப்பட்டிருந்தால் நீந்தித் தனது உயிரைக் காப்பாற்றி இருப்பாள். அவள் கொலை செய்யப்பட்டே கிணற்றில் போடப்பட்டிருக்க வேண்டும். நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்" எனத் தெரிவித்தார். (ஒ-11-17)

## சுண்ணக்கல் அகழ்வை தடுக்க உடன் நடவடிக்கை அவசியம்

வலி. வடக்கு பிரதேச சபைச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.7

வலி.வடக்கில் சட்ட விரோதமான முறையில் சுண்ணக் கல் அகழ்வு தொடர்வதாகவும், அதனைத் தடுக்க முடியாதிருப்பதாகவும் வலி.வடக்கு பிரதேச சபைச் செயலாளர் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரணைமடு குடி தண்ணீர் திட்டம் தொடர்பான கலந்துரையாடல், யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் யாழ். மாவட்டத்தின் நிலத்தடி நீர் மாசடைவதற்கான காரணிகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் இதனைத் தடுப்பதற்கான பாதுகாப்பதற்கான வழி முறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வலி.வடக்கில் சுண்ணக்கல் அகழ்வதால் நீர் மாசடைவது தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசசபையின் அனுமதியின்றி சுண்ணக்கல் அகழப்படும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க முடியாமலிருப்பதாக சபைச் செயலாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை அரியாலைப் பகுதியில் தொடர்ந்தும் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்வதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்தார். (ஐ-5)

## தொண்டையில் பேனா குத்தி மாணவன் காயம்

வலி.வடக்கு, நவ.7

மாணவன் ஒருவன் பேனாவை வாயில் வைத்திருந்த நிலையில் அவர் மீது மற்றொரு மாணவன் விழுந்ததால் பேனா தொண்டையில் குத்திய நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் அந்த மாண்வன் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டார். தெல்லிப்பழையில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தெல்லிப்பழை துர்க்காபுரத்தைச் சேர்ந்த ஜெயராஜ் டானியல் (வயது-8) என்ற மாணவனே காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவராவார். எனினும் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். (வ-86)

### சங்கிலியன் பூங்கா அமைந்துள்ள காணியை

# இராணுவத்துக்கு வழங்க முடியாது

மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.7

நல்லூர் சங்கிலியன் பூங்கா அமைந்துள்ள காணியை காணி ஆணையாளரின் பணிப்புக்கமைய இராணுவத்தினருக்கு வழங்க முடியாதென யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நல்லூர் பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த காணியைப் பாதுகாப்புப் படையின் 27ஆவது பிரிவின் 'சி' குழுவினருக்கு பாரப்படுத்துமாறு காணி ஆணையாளர் திணைக்களத்தால் நல்லூர் பிரதேச செயலருக்கு அனுப்பப்பட்ட கடிதம் பிரதேச செயலரால் மாநகர சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தக் கடிதத்துக்கு முதல்வர் அனுப்பி வைத்துள்ள பதிலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பாரம்பரியங்களோடு இணைந்த சங்கிலியன் பூங்கா அமைந்துள்ள காணியை இராணுவத்தினரின் தேவைக்கு வழங்க முடி யாது. 80 மில்லியன் ரூபா செலவில் பூங்காவைப் புனரமைக்கத் திட்டமிடப்பட்டு அதற்கான பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் முதல்வர் குறிப்பிட்டுள்ளார். (வ-7)

## மாணவிக்கு கைபேசியில் 'படம்' காட்டிய சித்திரப் பாட ஆசிரியர் மறியலில்

மன்னார்,நவ.7

பாடசாலை மாணவி ஒருவருக்கு கைத்தொலைபேசியிலுள்ள ஆபாசப் படங்களை காண்பித்தார் என்ற குற்றச்சாட்டில் விடத்தல் தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சித்திர பாட ஆசிரியர் ஒருவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில், சித்திரப் பாடம் கற்பிக்கின்ற ஆசிரியர் ஒருவர் கடந்த மாதம் 28 ஆம் திகதி தனது கையடக்கத் தொலைபேசி யில் பதிவு செய்து வைத்தி ருந்த ஆபாசப் படங்களை அந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் 15 வயதுடைய மாணவி ஒருவருக்கு காண்பித்ததாகக் கூறி விடத்தல் தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் குறித்த ஆசிரியரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை கைது செய்து மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

விசாரணை நடத்திய நீதிவான் குறித்த ஆசிரியரை இம்மாதம் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அவரிடம் இருந்து மீட்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி மற்றும் 'மெமரி சிப்' ஆகியவற்றை பரிசீலிப்பதற்காக மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பிரிவுக்கு அனுப்புமாறும் நீதிவான் பணிப்புரை விடுத்துள்ளார். (ஓ-12)

## முகமாலை வடக்கில் உட்கட்டுமானப் பணிகள்

'சோஆ' நிறுவனத்தின் ஏற்பாட்டில்

கிளிநொச்சி முகமாலை வடக்குப் பகுதியில் பல்வேறு உட்கட்டுமானப் பணிகளையும் வாழ்வாதார வேலைத் திட்டங்களையும் 'சோஆ' நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. போர் காரணமாக இடம்பெயர்ந்த முகமாலை வடக்கு பகுதி மக்கள் கடந்த ஜனவரி முதல் மீள் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது சுமார் 100 குடும்பங்கள் இங்கு மீள் குடியமர்ந்துள்ளன. இந்த நிலையில் குறித்த பகுதியில் உட்கட்டுமான வேலைகளை மேற்கொண்டு வரும் 'சோஆ' நிறுவனம் 85 குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகளை அமைத்து வழங்கியுள்ளது.

இதனைவிட 35 குடும்பங்களுக்கு நிரந்தர மலசல கூடங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளதுடன் 40 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் காசுக்கான வேலைத்திட்டத்தினையும் மேற்கொண்டுள்ளது. இதனைவிட 12 தனியார் கிணறுகளையும் துப்புரவு செய்துள்ளது. இந்தக் கிராமத்தின் 5 கிலோ மீற்றர் நீளமான வீதியொன்றும் இந்த நிறுவனத்தினால் தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. (க-6)

# பொதுநலவாய மாநாட்டால் பல்கலை சிலவற்றுக்கு பூட்டு?

யாழ்ப்பாணம், நவ.07

பொதுநலவாய மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் சில பல்கலைக்கழகங்களை மூடி வைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 9 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரை சில பல்கலைக் கழங்களுக்கு விடுமுறை வழங்குமாறு அவசர கடிதங்கள் அந்தந்தப் பல்கலைக்கழங்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் இருந்து அனுப்பப்பட்டுள்ளன.

**எதிர்வரும் 9 ஆம் திகதியிருந்து 17 ஆம் திகதி வரை சில பல்கலைக் கழங்களுக்கு விடுமுறை வழங்குமாறு அவசர கடிதங்கள் அனுப்பப் பட்டுள்ளன.**

பொதுநலவாய மாநாடு நடைபெறும் நேரத்தில் ஆர்ப்பாட்டங்கள் கவன வீர்ப்பு ஒன்றுகூடல்களை குறித்த பல்கலைக்கழங்களை சேர்ந்தவர்கள் நடத்தலாம் எனவும் இதனை தடுக்கும் முகமா கவே இந்த அவசர அறிவிப்பு வெளியாகியுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.


பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைக்கு அமையவே விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக் கப்பட்டதாக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

எனினும் இந்த அறிவிப்பு குறித்து யாழ். பல்கலைக் கழக நிர்வாகத்திடம் வினவிய போது. தமக்கு வந்த அறிவிப்பின் படி பல்கலைக் கழக கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படாத வகையில் பல்கலைக்கழக விடுதிகளை குறித்த தினத்தில் மூடிவிடுமாறு அறிவிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. எனினும் இது குறித்து இன்று கூடி ஆராய்ந்து முடிவெடுக்கபடும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4-400)

கடற்றொழிலாளர் நலன்கருதி

# விரைவில் நவீன மீன்பிடி திட்டம் செயற்படுத்தப்படும்



யாழ்ப்பாணம், நவ.7

தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையில் மீனவர்கள் தங்களது தொழிலை நவீனப்படுத்த வேண்டும். அதற்காக நவீன மீன்பிடி முறைகளை அறிமுகம் செய்யும் திட்டத்தைச் செயற் படுத்தவுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி, போக்கு வரத்து, வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

அமைச்சருக்கான வரவேற்பு விழா மன்னார் மாவட்டத்தின் எல்லைக் கிராமமான தேவன்பிட்டியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது சேவையானது கிராமங்களில் ஆரம்பித்து நகரங்களுக்குச் செல்லும் . 30 வருட காலப் போர் மற்றும் ஏனைய இயற்கை இடர்களால் துவண்டுள்ள எமது மக்களுக்கு உடனழத் தேவையாக அபிவிருத்தி காணப் படுகின்றது.

எனவே தென்பகுதி மக்கள் அனுபவிக்கின்ற அனைத்து உரிமைகளை யும் எனது தமிழ் பேசும் மக்களும் அனுபவிக்க வேண்டும். அதற்கான அனைத்து நகர்வுகளையும் வடமாகாண சபை மேற்கொள்ளும்.

அடிமட்டத்திலுள்ள கிராமங்கள் அனைத்தும் மற்றைய கிராமங்கள் போன்று வருகின்ற காலங்களில் தரம் உயர்வது உறுதி. அதற்கான அபிவிருத்திகளை எமது அமைச்சினூடாக வழங்கக் கூடியதை வழங்குவேன். மீனவக் கிராமங்களுக்கு எதிர்காலத்தில் நவீன மீன்பிடி முறைகளை அறிமுகம் செய்யவுள்ளதாகவும் தொடர்ந்து எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் அபிவிருத்திக் கும் அப்பால் செல்ல வேண்டும்- என்றார். அதனையடுத்து வெள்ளாங்குளம் கிராம மக்களை, வெள்ளாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சந்தித்துக் கலந்துரையாடினார். தொடர்ந்து பாலியாறு, மூன்றாம்பிட்டி கிராமங்களுக்கும் அவர் பயணம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (வ-5)




மதுரா அழகுக் கலைப் பயிற்சி நிலையம்

(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

புதிய பிரிவு ஆரம்பம் 11.11.2013 காலம் 3 மாதம்

கடந்த 5 வருடத்தில் 250 க்கு மேற்பட்ட அழகுக் கலைஞர்களை உருவாக்கிய பயிற்சி நிலையம் தனது 5ஆவது ஆண்டு நிறைவையொட்டி 20ஆவது பிரிவினை மிக குறைந்த கட்டணத்தில் பயிற்சியினை வழங்கவுள்ளது. இதில் பயிற்சிபெற விரும்பும் மகளிர் 09.11.2013 அன்று மு.ப. 10.00 - 1.00 மணிவரை பயிற்சி நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பயிற்சி விவரம்: அழகுக்கலை டிப்ளோமா (ஸ்கின், ஹெயார் & பியூட்டி) கேக், ஐசிங், சாறிவேர்க், ஹான்ட் வேர்க், தையல்.

மகளிர் மட்டும்

0779362642 (39791)(10.14) பழைய வீதி, கோப்பாய்.


### வேலணையில் பயனாளிகளுக்கு பழமரக்கன்றுகள்

வேலணை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பயனாளிகளுக்கு கடந்த திங்கட் கிழமை பழமரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவிசதீசன், தேசி, மாதுளை, கொய்யா, முருங்கை, மா போன்ற பயன்தரு மரக்கன்றுகளை வழங்கினார். (வ-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 . 06 . 1919



மறைவு 08 . 10 . 2013

### அமரர் இராயப்பு ஆரோக்கியம்

பாசக்கட்டின் தாய்ப்பறவை விண்ணோக்கிப் பறந்ததுவோ
நேச உறவுகள் நீள் துயரில் ஆழ்ந்திடவோ
பெரு விருட்சம் வீழ்ந்ததினால் பாலைவன நிலையானோம்
அருகிருந்து நீர் உரைத்த அன்பு மொழி மறந்திடுமோ
திருமகனாம் இயேசுவில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

சாரையடி, புலோலி தெற்கு R.அன்ரன் (மகன்-டென்மார்க்)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111


## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மைப்பிள்ளை பரராசசிங்கம்

(இரத்தினாம்பிகை)(ஓய்வுபெற்ற ஆசிரியை உடுவில் மகளிர் கல்லூரி)



வேலணை கிழக்கை பிறப்பிடமாகவும் உடுவில். கனடா ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளியம்மைப்பிள்ளை பரராசசிங்கம் கடந்த (02.11.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசாமி-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், பரராசசிங்கத் தின் (ஓய்வு பெற்ற வேலைப்பரிசோதகர்) அன்பு மனைவியும், குலராசசிங்கம் (கனடா), தயாநிதி (கனடா), டிவிபராஜசிங்கம்(இங்கிலாந்து), அகிலராஜசிங்கம் (கனடா), யமுனாநிதி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயும், சாந்தி (கனடா), இரவீந்திரன் (கனடா), சுகன்ஜா ( இங்கிலாந்து), சீவமதி (கனடா), செல்வகுமரன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியும், ஷாணு, சாஙணுகா, தமிழருவி, ஈழ மகள், புலிமகள், சோபினி, ஆரணி, மகீரன், வானிகா, கௌதமன், சஞ்சீவன், நிவாஷினி, வாஷினி ஆகியோரின் அருமைப் பாட்டியும், காலஞ் சென்ற வடிவேலு (அதிபர்), பசுபதி (செல்வம்-பிரான்ஸ்), கமலாம்பிகை (இந்தியா), நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (09.11.2013) சனிக்கிழமை OGDEN FUNERALHOME MIDLAND SHEPPAR 4164 SHEPPARD AVE E SCABOROUGH ONTARIO MIS IT3 CANADA இல் வைக்கப்பட்டு 10.11.2013 ஞாயிற்றுக்கிழமை கனடா நேரப்படி மு.ப. 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். இவ் அறிவித்தல் லங்காஸ்ரீ இணையத்தளத்திலும் உள்ளது.

கு. பரராசசிங்கம் - கனடா 0014162899758
ப.குலராசசிங்கம்- கனடா-0014169097446

தகவல்: சோ.பசுபதி (செல்வம்-பிரான்ஸ்),செ.சந்திரசேகரம்
20, அங்கசந்திர ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.


### விற்பனைக்கு

Gu-xxxx
HONDA CD90 Benly
தொடர்பு:- 078 5828984

### தேவை

பருத்தித்துறை வீதி, (நல்லூர்- கோப்பாய்) or கோயில் வீதி or பழைய டச்சு வீதி or செட்டித்தெரு வீதிக்கு அருகாமையில் 3பரப்புக் காணி or வீட்டுடன் கூடிய 2பரப்புக்காணி உடன் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 0267619

உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும் (யோவான் 16:20)

## விடுதலைப் பெருவிழா



இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

காலம் : 8,9,10 ம் திகதிகளில் நவம்பர் 2013 வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்

நேரம் : தினமும் மாலை 4.00 மணிக்கு

தீராத வியாதிகள், பிசாசின் பிடி, சாபக்கட்டுகள், பாவங்கள், கண்ணீர், கஸ்ரம் யாவற்றிலிருந்தும் விடுதலை பெற அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

பிரவேசம் இலவசம்

Fr. அருட்தந்தை. மைக்கல் ஞானராஜ்
போதகர்
ஹற்றன், இலங்கை.

யாழ் கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்கள் ஐக்கியம்

# பிரதேச மருத்துவமனைகளில் இனிமேல் சிகிச்சை பெறலாம்

## போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ.7

யாழ்.போதனா வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காகச் செல்லும் நோயாளர்கள் இனிமேல் தத்தமது பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளிலேயே சிகிச்சை பெற முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மருத்துவர்களே இவ்வாறு நோயாளர்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

கடந்த 28 ஆம் திகதி போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக நோயாளர்கள் பெரும் எண்ணிக்கையில் காத்திருந்தனர். அங்கு சென்ற வைத்தியர், நோயாளர்களைப் பார்த்து "உங்கள் பகுதிகளிலுள்ள வைத்திய சாலைகளில் இனிமேல் சிகிச்சை பெற முடியும்.

போதனா வைத்தியசாலையிலிருந்து அனுபவம் மிக்க வைத்தியர்கள் கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து ஆதார, பிரதேச மருத்துவமனைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். எனவே பணத்தைச் செலவு செய்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருவதை நீங்கள் தவிர்க்க முடியும். இங்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய தேவையும் இல்லை. உங்கள் பிரிவு வைத்தியசாலைகளில் வடிவமைக்கப்படும் சிகிச்சைக்கும் நோய் குணமடையவில்லையாயின் வைத்தியர்கள் போதனா வைத்தியசாலைக்குச் செல்லுமாறு அறிவுறுத்துவார்கள்" என்று தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் யாழ்.பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-


இங்கு அனைத்து வைத்தியசாலைகளிலும் நிரந்தர மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர். 11 வைத்தியசாலைகளில் மட்டும் ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே நோயாளர்கள் தத்தமது பகுதி வைத்தியசாலைகளிலேயே சிகிச்சை பெற முடியும்.

இதேவேளை ஆனைக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் சென்ற நோயாளி ஒருவருக்கு குறித்த வகை மருந்து இல்லை என்பதால் வெளியே மருந்தகங்களில் அதனை விலைக்கு வாங்குமாறு கோரி மருத்துவரால் மருந்துச்சிட்டை வழங்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது தொடர்பில் கேட்டபோது,

ஆரம்பப் பிரிவு வைத்திய சாலை, பிரதேச வைத்திய சாலை, ஆதார வைத்திய சாலை என ஒவ்வொன்றினதும் தரத்துக்கு ஏற்பவே மருந்துகள் அந்தந்த வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சில வகை மருந்துகளை அத்தகைய வைத்தியசாலைகளில் பெற முடியாது. நோய்க்கு ஏற்ற வகையில் யாழ்.போதனா வைத்தியசாலை யிலேயே சிலவகைமருந்துகளைப்பெற முடியும்-என்றார். (வ-4-100)

> "-"
>
> ஆரம்பப் பிரிவு வைத்திய சாலை, பிரதேச வைத்திய சாலை, ஆதார வைத்திய சாலை என ஒவ்வொன்றினதும் தரத்துக்கு ஏற்பவே மருந்துகள் அந்தந்த வைத்திய சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

# மின்சார நிலைய வீதியை கவனிப்பாரில்லை



யாழ்ப்பாணம், நவ.7

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அவ்வீதியால் பயணிப் போர் விசனம் தெரிவிக்கின்றனர்.

வாகனப் போக்குவரத்தும், பொதுமக்கள் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படும் குறித்த வீதியைப் புனரமைக்க இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்தும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மத்திய பஸ் நிலையத்தின் அருகில் அமைந்துள்ள குறித்த வீதிப் பகுதிகள் குன்றும் குழியும் நிறைந்துள்ள பகுதியாகக் காணப்படுகின்றன.

குழிகளில் மழைநீர் தேங்கி நிற்பதால் வாகனங்கள், பயணிக்கும் போது பாதசாரிகளின் ஆடைகளில் மழை நீர் தெறித்து அழுக்காவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரான்லி வீதிச்சந்தியில் இருந்து காங்கேசன்துறை வீதிச்சந்தி வரை புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ள இந்த வீதியைச் சீரமைக்க எவரும் அக்கறை எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-7-9)

# அம்பாள்புர மீனவர்கள் 90 பேருக்கு வலைகள்

வலி.தென்மேற்கு, நவ.7

அம்பாள்புரத்தைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்த முன்வந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் 90 பயனாளிகளுக்கு சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை வழங்கியுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் அம்பாள்புரத்தில் மீள் குடியமர்ந்த மீனவர்கள்பொருளாதார நெருக்கடியால் சிரமமுறுகின்றனர். அவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக மீன்பிடி உபகர ணங்களை வாங்க முடியா மல் திண்டாடினர்.

அவர்களின் நிலைப்பாடு குறித்து நன்னீர் மீன்பிடித் தொழிலாளர் சங்கம், குறித்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்குமாறு கோரியிருந்தது.

குறித்த நிறுவ னம் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக 90 பயனாளிகளுக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான 300 வலை களை வழங்கியுள்ளது. (வ-115)



யாழ்.பண்ணை சுற்றுவட்டப் பகுதிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் காப்பெற் போடப்பட்டது. ஆனால் மழை பெய்யும் வேளைகளில் நீர் வழிந்தோடக் கூடியதாக காப்பெற் போடப்படாததனால் சுற்றுவட்டப் பகுதியில் மழை நீர் தேங்கி நிற்கிறது. இதனால் போக்குவரத்துச் சிரமங்கள் ஏற்படுகின்றன என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# முதியோர் சங்க பேரவை



தென்மராட்சி, நவ.7

தென்மராட்சிப் பிரதேச முதியோர் சங்கங்களின் பேரவை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

பிரதேசத்திலுள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட முதியோர் சங்கங்களை உள்ளடக்கி இந்தப் பேரவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

தலைவராக மருத்துவர் எஸ்.எஸ். அரு ளானந்தம், செயலாளராக மா.லீலாவினோ தன் உட் பட பேரவைக்கு 15 முதியோர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். (வ-9)

# வீதி அதிகாரசபையால் நிறுவப்பட்ட பஸ்தரிப்பிடம் தகுந்த முறையில் பயன்படுத்தப்படுவதில்லை

தென்மராட்சி, நவ.7

ஏ-9 வீதி அகலிப்புக்குப் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நிறுவப்பட்ட பஸ் தரிப்பிடங்களை பயணிகளும், போக்குவரத்துச் சேவை வாகனங்களும் பயன்படுத்துவதில்லை.

வீதி அகலிப்புக்கு முன்னர் இருந்த பல பஸ் தரிப்பிடக் கட்டடங்கள் பல வீதி அகலிப்பின் போது முற்றாக அகற்றப்பட்டன. ஆனால் அந்த இடங்களுக்குப் பதிலாக பஸ் தரிப்பிட பலகைகள் வேறு இடங்களில் நடப்பட்டுள்ளன.

தூர இடங்களிலிருந்து வரும் போக்குவரத்துச் சேவை வாகனங்கள் குறித்த பஸ் தரிப்பிடப் பலகைகள் காணப்படும் இடங்களில் நிறுத்தப்படுகின்ற போதிலும், உள்ளூர் பயணிகள் வாகனங்கள், முன்னர் பஸ் தரிப்பிடங்கள் இருந்த இடங்களிலேயே நிறுத்திப் பயணிகளைஏற்றி இறக்கு கின்றன.

இதேவேளை பஸ் தரிப்பிடங்களுக்கு செல்லாமல் தமது வீட்டு வாசலிலும் சந்திகளிலும் நிற்கும் பயணிகளை உள்ளூர் தனியார் பயணிகள் வாகனங்கள் ஏற்றிச் செல்வதைக்காண முடிகிறது.

பயணிகளை பஸ் தரிப்பிடங்களில் வைத்து ஏற்றும் பணியை போக்குவரத்துச் சேவை வாகனங்களே நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நிலை நீடிக்குமாயின் எதிர்காலத்தில் பஸ் தரிப்பிடங்களென வீதிகளில் குறித்தொதுக்க இயலாது போகக் கூடுமென மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-9)

> "-"
>
> பஸ் தரிப்பிடங்களுக்கு செல்லாமல் தமது வீட்டு வாசலிலும் சந்திகளிலும் நிற்கும் பயணிகளை உள்ளூர் தனியார் பயணிகள் வாகனங்கள் ஏற்றிச் செல்வதைக் காண முடிகிறது.

# கொழும்புத்துறையில் திருடர்கள் கைவரிசை


கொழும்புத்துறை, நவ.7

கொழும்புத்துறைப் பகுதியில் ஒரேநாள் இரவில் பல கடைகள் திருடர்களின் கை வரிசைக்கு இலக்காகியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தில் கொழும்புத்துறை ஆனந்தன்வடலி வீதி, சென்.மேரிஸ் முதலாம் ஒழுங்கை மற்றும் பாண்டியன் தாழ்வுப் பகுதிகளில் உள்ள கடைகள் உடைக்கப்பட்டு பல்வேறு பொருள்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

ஆனந்தன்வடலி வீதிக் கடையில் களவாடப்பட்ட அரிசி மூடையில் இருந்து சிந்திய அரிசி வீதியின் பல இடங்களிலும் சிதறிக் காணப்பட்டது.

மற்றொரு கடை பல வாரங்களாக மூடப் பட்டிருந்தமையால் அங்கு பொருள்கள் எதுவும் கிடைக்காததால் திருடர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர். (வ-135)



இந்தியாவால் செவ்வாய் கிரக ஆய்வுக்காக அனுப்பப்படும் மங்கள்யான் செயற்கைகோள் பி.எஸ்.எல்.வி-சி 25 ரொக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. நாசா உதவியுடன் இஸ்ரோவால் இயக்கப்படும் இந்த செயற்கைக்கோள் முற்று முழுதாக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டது . ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ஏவப்பட்டுள்ள இந்தச் செயற்கைகோள் எதிர்வரும் 300 நாள்கள் செவ்வாய் கிரகத்தில் தனது ஆய்வை மேற்கொள்ளும். 1350 கிலோ எடை கொண்ட மங்கள்யான் செயற்கைக்கோள்

## அசாமில் நிலநடுக்கம்

கவுகாத்தி, நவ.7

அசாமில் நேற்றுக் காலை 5.4 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ற)

## தோட்டத்தை பராமரிக்கிறார் லாலு!

ராஞ்சி, நவ.7

கால்நடை தீவன முறைகேட்டுவழக்கில் பீர்சாமுண்டா சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் லாலுப் பிரசாத் யாதவுக்குச் சிறையில் தோட்டத்தைப் பராமரிக்கும் பணி கொடுக்கப்பட்டுள்ளது. அவர் நாள்தோறும் சிறையில் உள்ள பூந்தோட்டத்துக்கு நீர் ஊற்றுவதுடன், அவற்றைப் பராமரிக்கவும் வேண்டும்.

இது குறித்து சிறை அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கும்போது,

"லாலு சட்டம் படித்தவர் என்பதால் மற்ற கைதிகளுக்குப் பாடம் சொல்லித் தரும் பணியை அவருக்குத் தரலாம் என தொடக்கத்தில் நினைத்தோம். ஆனால்கைதிகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பால் லாலுவுக்கு பாதுகாப்புப் பிரச்சினை வரலாம். அத்துடன் லாலு அவர்களுக்கு அரசியல் பாடம் எடுக்கிறார் என முறைப்பாடுகள் வரவும் வாய்ப்புண்டு. எனவே செடிகளுக்கு நீர் ஊற்றும் பணியை அவருக்குத் தந்துள்ளோம்" என்று தெரிவித்துள்ளனர். (ற)

## 14 ஆண்டுகளாக தொடரும் உண்ணாவிரதம்

*புதுடில்லி, நவ.7*

*இந்தியாவின் வடக்கு மாநிலங்களில் இராணுத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு ஆயுதப் படைச் சட்ட அனுமதியை திரும்பப் பெற வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றார் இரோம் ஷர்மிளா என்ற பெண்மணி. அவரது போராட்டம் நேற்றுமுன்தினத்துடன் 14 ஆண்டுகளை எட்டியுள்ளது.*

*உண்ணாவிரப் போராட்டத்தை ஆரம்பித்ததை அடுத்துக் கைது செய்யப்பட்ட ஷர் மிளா தற்போது பொலிஸ் பாதுகாப்பில் இருந்துவருகிறார் உணவு உண்ண மறுத்து வரும் ஷர்மிளாவுக்கு, மூக்கு வழியாககுழாய் மூலம் கடந்த 13 ஆண்டுகளாகத் திரவ உணவு அவரது அனுமதியின்றி வழங்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (ற)*

# இந்தியாவின் நிலை என்ன?

## பொதுநலவாய மாநாடு குறித்து மன்மோகனிடம் விளக்கம் கேட்கின்றது பா.ஜ.க.

புதுடில்லி, நவ.7

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாடு குறித்து இந்தியாவின் நிலையைப் பிரதமர் மன் மோகன் சிங் தெளிவுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பா.ஜ.கவின் தேசிய பொதுச் செயலர் முரளீதர ராவ்.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்திய அரசு புறக்கணிக்க வேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. தமிழ் நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மாநாட்டைப்புறக்கணிக்கவேண்டும் என்று கோரியுள்ளனர். எனினும்இந்தியமத்தியஅரசு இது வரை பொதுநலவாய மாநாட்டில்கலந்து கொள்வது குறித்து எதுவித கருத்துக்களையும்தெரிவிக்கவில்லை.

> நழுவல் போக்கைக் கைவிட்டு பொதுநலவாய மாநாடு தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதைப் பிரதமர் மன்மோகன் சிங் தெளிவுபடுத்த வேண்டும்.



இந்தநிலையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பா.ஜ.க. பொதுச் செயலர் முரளீதர ராவ்,

"இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டை இந்திய அரசு புறக்கணிக்க வேண்டும் என்று தமிழகத்தில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழக மக்களின் உணர்வுகளை பா.ஜ.கவும் மதிக்கிறது. நழுவல் போக்கைக் கைவிட்டு பொதுநலவாய மாநாடு தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதைப் பிரதமர் மன்மோகன் சிங் தெளிவுபடுத்த வேண்டும். அதன்பின்னரே பா.ஜ.க. அது தொடர்பில் தனது நிலையை அறிவிக்க முடியும். ஆனால்தமிழக உணர்வுகளுக்கு எதிராக பா.ஜ.க. எந்த முடிவையும் எடுக்காது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## ராஜிவ் சிலை திருப்பூரில் உடைப்பு

அவினாசி, நவ.7

திருப்பூர் அருகில் உள்ள திருமுருகன்பூண்டியில் உள்ள ராஜிவ் சிலை உடைக்கப்பட்டதைக் கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்தி ஓர் இயக்கம் சிலை உடைப்பில் ஈடுபட்டதாக உரிமை கோரும் ஒரு கடிதம் சிக்கி உள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)

## கொளத்தூர் மணி மீது தேசிய பாதுகாப்புச் சட்டம்

சேலம், நவ.7

மத்திய அரசு அலுவலகமான வருமானவரித்துறை அலுவலகம் மீது பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டு சேலம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சேலம், அஸ்தம்பட்டியில் உள்ள மத்திய அரசு அலுவலகமான வருமான வரித்துறை அலுவலகம் மீது அண்மையில் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன. அது தொடர்பாக திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நால்வரையும் பெற்றோல் குண்டு வீசத்தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி கடந்த 2ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்டு சேலம் சிறையில் அடைக்கப்பட்டார். தற்போது அவர் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**திருமா கண்டனம்**

கொளத்தூர் மணி மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளமைக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாளவன் கண்டனம் தெரிவித்துள்ளார். கட்சித் தொண்டர்கள் செய்யும் செயல்களுக்குக் கட்சித் தலைவர்களைக் கைது செய்வது முறையற்ற செயல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## பொதுநலவாய மாநாட்டை வைத்து அரசியல் செய்கின்றது பா.ஜ. கட்சி

### தொல். திருமாவளவன் குற்றச்சாட்டு

சென்னை, நவ.7

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்திய அரசு புறக்கணிக்க வேண்டும் என்று நாம் போராட்டம் நடத்தி வரும் நிலையில், அதை வைத்து அரசியல் செய்கின்றது பாரதிய ஜனதாக் கட்சி -என்று குற்றஞ்சாட்டியுள்ளார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன்.



நேற்றுமுன்தினம் வள்ளுவர்கோட்டத்தில் 'இந்தியா பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது' என்று கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் கூறியதாவது:

"இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்று தெரிவித்து தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும்போராடி வருகின்றன. ஆனால் அந்தப் பிரச்சினையை வைத்து பா.ஜ.க. அரசியல் மட்டுமே செய்கின்றது. பொதுநலவாய மாநாட்டில் இந்திய கலந்துகொள்ள வேண்டும் என்ற நெருக்கடியை அந்தக் கட்சியே கொடுக்கின்றது. ஆட்சியில் இருந்த போது பாரதிய ஜனதாக் கட்சி அரசு ஈழத் தமிழர்களுக்காக எதையும் செய்யவில்லை. இந்த மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளவில்லை என்றால் இருநாடுகளுக்கிடையே உறவில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

மாநாட்டில் இந்தியா கலந்து கொண்டுதான் ஈழத் தமிழர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று இல்லை. இதில் பங்கேற்காமலேயே நன்மை செய்யலாம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

உதயன் 07/11/2013 

## பிரான்ஸ் ஊடகவியலாளர் கொலை: 35 பேர் கைது

மாலே, நவ.7

மாலியில் பிரான்ஸ் செய்தியாளர்கள் இருவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாலி அரசு கூறியுள்ளது.

விசாரணைகளில் முன்னேற்றம் காணப்படுகின்றது என்றும் 2011ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டவர்களை கடத்தியமைக்காக கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளவர்களின் உதவியுடன் முக்கிய தொலைபேசி எண்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் மாலி அரசு அறிவித்துள்ளது. (ற)



கொங்கோவில் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வரும் விதமாக ஆயுதங்களை ஒப்படைக்க எம்-23 கிளர்ச்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். நாட்டின் கிழக்குப்பகுதியில் கடந்த 20 மாதங்களாக நிலவி வந்த அமைதியற்ற சூழலை மாற்றி அமைக்கும் வகையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக அமைதிப் பேச்சுகளில் தாம் பங்கேற்க உள்ளனர் என்றும் அந்த அமைப்பினர் அறிவித்துள்ளனர்.(ற)

## இரசாயன ஆயுத ஒழிப்பில் சிரியா பூரண ஒத்துழைப்பு

நியூயோர்க், நவ.7

இரசாயன ஆயுதங்களை அழிக்கும் பணிகளுக்கு ஜனாதிபதி பசார் அல் அசாத் தலைமையிலான சிரிய அரசு பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றது என்று தெரிவித்துள்ளார் இரசாயன ஆயுத ஒழிப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் சிக்ரித் கொக்.

கடந்த ஒரு மாத காலமாக சிரியாவில் மேற்கொண்டு வரும் இரசாயன ஆயுத அழிப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை விரைவில் ஐ.நா. சபையிடம் அறிக்கையிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## இஸ்ரேல் செல்கிறார் ஜோன் கெரி



ஜெருசலேம், நவ.7

இஸ்ரேல் பலஸ்தீனம் இடையிலான அமைதி நடவடிக்கைகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்வது குறித்து இரு நாட்டு தலைவர்களிடமும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி பேச்சு நடத்தவுள்ளார். எகிப்து மற்றும் சவூதி அரேபியா பயணத்தை முடித்துக்கொண்டு இஸ்ரேல் சென்றுள்ள அவர் அந்நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூவை சந்தித்து இதுகுறித்துக் கலந்துரையாடவுள்ளார். (ற)

## ஈராக் குண்டு வெடிப்புகள்: 13 பேர் சாவு

காபூல், நவ.7

ஈராக்கின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். அதில் பெரும்பாலான தாக்குதல்கள் பாதுகாப்பு படையினர் மற்றும் அதிகாரிகளை குறிவைத்தே நடந்துள்ளதாக கூறப்படுகிறது (ற)

# தலிபான் அமைப்புடன் பேச்சுக்கள் தொடரும்

## பாகிஸ்தான் பிரதமர் தெரிவிப்பு

இஸ்லாமபாத், நவ.7

பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் தலைவர் ஹக்கி முல்லா மசூத் அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ள போதும், அந்த அமைப்புடனான அமைதிப் பேச்சுகள் திட்டமிட்டபடி நடைபெறும் என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்.



அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் ஹக்கி முல்லா மசூத் உயிரிழந்ததை அடுத்து பாகிஸ்தானில் அசாதாரண சூழ்நிலைஏற்பட்டிருந்தது. பாகிஸ்தானுக்கும் தலிபான் அமைப்புக்கும் இடையே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமைதிப் பேச்சுக்கள் தடைப்பட்க் கூடும் என்றும் சந்தேகம் எழுந்திருந்தது.

இந்தநிலையில் அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே நவாஸ் ஷெரிப் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

"நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. எந்தத் தடை வந்தாலும் திட்டமிட்டபடி தலிபான் அமைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அமைதிப் பேச்சுக்கள் நடைபெறும். ஆளில்லா விமானத் தாக்குதல்கள் பாகிஸ்தானின் இறைமையைப் பாதிக்கும் செயல். அதுகுறித்து எனது அமெரிக்கப் பயணத்தின்போது தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். இந்த விடயத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து நாட்டில் அமைதி ஏற்பட ஒத்துழைக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாகிஸ்தானில் நடத்தப்படும் அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்களுக்கு அந்த நாட்டில் பெரும் எதிர்ப்புக் கிளம்பி வருகின்றது. (ற)

## *ஆளில்லா விமானங்களை வீழ்த்தும் தொழில்நுட்பம்*

*வெற்றிகரமாக சோதனை செய்தது பாக்.*

*இஸ்லாமாபாத், நவ.7*

*ஆளில்லா உளவு விமானங்களை வீழ்த்தும் புதிய தொழில்நுட்பத்தை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது பாகிஸ்தான்.*

*அந்தச் செயன்முறை விளக்கம் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் மற்றும் அந்நாட்டு இர்ாணுவத் தளபதி அஷ்பக் பர்வேஷ் கயானி ஆகியோர் முன்னிலையில் செயற்படுத்திக் காட்டப்பட்டது. 'ஓர்லிகான் 35 எம்.எம்' துப்பாக்கியைப் பயன்படுத்தி ஆளில்லா விமானத்தின் மாதிரியை வெற்றிகரமான வீழ்த்திக் காண்பித்தனர் பாகிஸ்தான் இராணுவத்தினர்.*

*அங்கு இராணுத்தினர் முன்னிலையில் கருத்துத் தெரிவித்த அஷ்பக் பர்வேஷ் கயானி, "பாகிஸ்தானின் பாதுகாப்புக் கொள்கையில் வேறு எந்த நாடும் தலையிடுவதை அனுமதிக்க முடியாது." என்று தெரிவித்துள்ளார்.*

*பாகிஸ்தானில் அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்திவரும் நிலையில், பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையை ஓர் எச்சரிக்கையாக கொள்ள வேண்டும் என்று பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ற)*

# 152 பேருக்குத் தூக்கு

## பங்களாதேஷ் நீதிமன்று அதிரடி

டாக்கா, நவ.7

2009ஆம் ஆண்டு பங்களாதேஷில் இடம்பெற்ற கலவரம் தொடர்பான வழக்கில் 152 பேருக்கு தூக்குத் தண்டனை வழங்கியுள்ளது அந்த நாட்டு சிறப்பு நீதிமன்றம். அதில் 100க்கும் அதிகமானோருக்கு எல்லைப் பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் புகுந்து கொலை செய்தமை மற்றும் தீ வைத்தமை போன்ற குற்றச்சாட்டுக்ளின் அடிப்படையிலேயே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் வெடித்த கலவரம் பல நகரங்களுக்கும் பரவியது. அதில் 74க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

அது குறித்த வழக்கில் 835 பேர் மீது குற்றம்சாட்டப்பட்ட நிலையில், 152 பேருக்கு தூக்குத் தண்டனை வழங்கியுள்ள சிறப்பு நீதிமன்றம், 128 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.



அதேவேளை இந்த வழக்கில் இராணுவ விசாரணையின் போது குற்றம் உறுதி செய்யப்பட்ட 4 ஆயிரம் பேருக்கு 7 வருட சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# பயங்கரவாதத் தடுப்புப் பயிற்சி

## சீன - இந்திய இராணுவத்தினர் பங்கேற்பு

பீஜிங், நவ.7

இந்தியாவும் சீனாவும் இணைந்து பயங்கரவாதத் தடுப்புப் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளன.

சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் அதிகரித்து வரும் பயங்கரவாத நடவடிக்கைகளை அடுத்தே இரு நாடுகளும் இணைந்து பயங்கரவாத தடுப்பு பயிற்சியை ஆரம்பித்துள்ளன.

இருநாடுகளும் இணைந்து 2007ஆம் ஆண்டு இறுதியாக இந்தப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தன. எனினும் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினைகள் காரணமாக இந்தப் பயிற்சிகள் கைவிடப்பட்டிருந்தன. அண்மையில் சீனாவுக்கு இந்தியப் பிரதமர் பயணம் மேற்கொண்டு எல்லைப் பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டதை அடுத்தே இந்தப் பயிற்சிகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

**இருநாடுகளுக்கும் இடையேயான எல்லைப் பகுதி யில் பதற்றம் காணப்பட்டு வந்த நிலையில் இந்தப் பயிற்சி முக்கியம் வாய்ந்ததாகக் கருதப் படுகின்றது.**

சீனாவின் சிசுவான் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த 10 நாள் பயிற்சிகளில் இந்திய இராணுவத் தரப்பில் 150 பேர் பங்கேற்றுள்ளனர்.

பயங்கரவாதிகளை பிடிக்க கையாளும் சமிக்ஞைகள், பிணைக் கைதிகளை மீட்பது, பயங்கரவாதிகளை தாக்குவது, அவர்களை தேடுவது போன்ற பயிற்சிகளை அவர்கள் மேற்கொள்வார்கள் என்று கூறப்படுகின்றது. (ற)

## சுழிபுரத்தில் இலவச கண் பரிசோதனை முகாம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், நவ.7

நல்லூர் றோட்டறிக் கழகமும், கண்டி றோட்டறிக் கழகமும் இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாமும் கண்ணாடி வழங்கலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கண்டி போதனா வைத்திய சாலையிலிருந்து வருகின்ற வைத்திய குழாமினாலேயே கண் பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளது. தேவையானவர்களை கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## தொழில்நுட்பக் கல்வி விளக்க நிகழ்வு

தொழில்நுட்பக்கல்வி மற்றும் அதன் முக்கியத்துவம், வேலை வாய்ப்புகள் தொடர்பிலான விளக்கத்தை சமூக மட்டத்தில் ஏற்படுத்தும் "ஒப்பன் டே 2013" நிகழ்வு இன்று வியாழனும் நாளை வெள்ளியும் நடைபெறவுள்ளது.

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் மு.ப. 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பயிற்சி மற்றும் ஆய்வு கூடங்கள் காட்சிக்காகத் திறந்து வைக்கப்படும். அத்துடன் பயிற்சி நெறி பற்றிய விளக்கங்களும் அளிக்கப்படும்.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடம் கற்கவுள்ளமாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் இதில்கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளனர். (ஒ-10)




## பஜனை செய்வதன் நோக்கம்

பஜனை செய்வதன் நோக்கம் உங்களுக்குள் தெய்வீகம் மலர்வதற்காக மட்டுமல்ல. உங்களைச்சுற்றியுள்ளவர்களிலும் சூழலிலும் தெய்வீக எழுச்சியை ஏற்படுத்துவதற்காகவே. அகண்ட பஜனை செய்வதன் நோக்கம் எல்லாத் தெய்வங்களையும், தெய்வீக புருஷர்களையும் அழைத்து இந்த உலகம் முழுவதையும் தூய்மைப்படுத்தி தெய்வீக அலைகளை ஏற்படுத்துவதற்கே. அகண்ட பஜனையில் இரவும் பகலுமாக மிகுந்த பக்தியுடனும், ஈடுபாட்டுடனும் பாடப்படும் பாடல்கள் எல்லோருக்கும் நன்மையளிப்பதுடன், ஒவ்வொருவருள்ளும் தெய்வீகம் எழுச்சியை ஏற்படுத்தி வைக்கும்

நீங்கள் அகண்ட பஜனையில் பாடும் பொழுது நீங்கள் முழு உலகத்திற்குமாகப் பாடுகிறீர்கள். ஒவ்வொரு உயிர்களினதும் நன்மைக்காகப் பாடுகிறீர்கள். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் அகண்ட பஜனையில் கலந்து கொண்டு பாட வேண்டும்.

ஸ்ரீ சத்தியசாயிபாபா.

வவுனியா சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம்

# புத்த பிக்குவுக்கு விளக்கமறியல்

வவுனியா, நவ.7

வவுனியாவில் சிறுவன் ஒருவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட புத்த பிக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சில வாரங்களுக்கு முன்னர் வவுனியா அட்டமஸ்கட பகுதியில் இயங்கி வந்த சிறுவர் இல்லத்தில் வைத்து சிறுவன் ஒருவனைத் துஷ்பிரயோகம் செய்ததாக இந்தப் பிக்கு மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ஆனால் நீண்ட நாள்களாக இவர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை.

இந்த நிலையில் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையினால் தெரிவிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தது.

இதனடிப்படையில் கைது செய்யப்பட்ட புத்தபிக்கு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (க-402)

# சேதமடைந்து காணப்படும் பாரதிபுரம் முன்பள்ளி

## மாகாண சபை உறுப்பினரிடம் மக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் நவ.7

விசுவமடு பாரதிபுரம் முன்பள்ளி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் அங்கு கல்வி கற்கும் சிறார்கள் பாதிப்புக்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அண்மையில் பாரதிபுரம் கிராமத்துக்குச் சென்றிருந்தார். அங்கிருந்த மக்களுடன் அவர் கலந்துரையாடியபோது மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.



அங்கு உரையாற்றிய மாகாண சபை உறுப்பினர் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கு மக்கள் அளித்த பேராதரவுக்கு நன்றி தெரிவித்தோடு அந்தப் பகுதி மக்களின் குறைகளையும் கேட்டறிந்தார். அப்போது மக்கள் அங்கு இயங்கி வரும் முன்பள்ளி மற்றும் வீதிகள் தொடர்பாக எடுத்துக் கூறினர்.

அந்த முன்பள்ளியின் நிலை மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது. சுவர் மற்றும் கூரை என்பன சேதமடைந்த நிலையில் உள்ளதால் சீரான கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி முன்பள்ளிக்குச் செல்கின்ற பாதைகளும் சேதமடைந்து காணப்படுவதால் மழை காலங்களில் முன்பள்ளிக்கு எவருமே செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது என்றுமக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினை குறித்து வடமாகாண சபையில் எடுத்துக் கூறி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாகாண சபை உறுப்பினர் உறுதியளித்தார்.

இதன் பின்னர் விசுவமடு குளக்கட்டில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளை நேரில்சென்று பார்வையிட்ட அவர் அங்கு நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மக்களின் குறைகளையும் கேட்டறிந்தார். (க-5)

## யாழ்.இந்துவில் ஞாயிறு இரத்ததானம்

யாழ்ப்பாணம், நவ.7

யாழின் கரங்கள் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் ஒன்று எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உயிர்காக்கும் உன்னத சேவையில் இணைந்து சேவையாற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-10)


## மரண அறிவித்தல்

திருமதி
**பூபதி கந்தன்**



குரும்பசிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபதி கந்தன் நேற்று (06.11.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தனின் அன்பு மனைவியும், பரிசிலிங்கம், பற்பராசா (ஜேர்மனி), பாபு ஆகியோரின் அன்புத் தாயாரும், வனசா, அருந்தவநாயகி, அருளம்மா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நவநீதன், சந்திரலிங்கம் (டோகா), சிந்துஜா, நிரோசன் (டோகா), மேகலா (ஜேர்மனி), சதீஸ் (லண்டன்), கயூன் (இந்தியா), சுதர்சன், சந்திரிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2013) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நவரத்தினராஜா வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (39784)(12.6.3)

தகவல்:
குடும்பத்தினர்

## வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி
## மீதியை உறுதிப்படுத்தல்

கிராமிய வங்கி / வருமதியாளர் / சென்மதியாளர்

எமது சங்கத்தின் 31.05.2013இல் முடிவுற்ற ஆண்டுக்கான எண்பார்வை நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் தங்கள் கணக்கு மீதியினை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

காலம் : 08.11.2013, 11.11.2013 ஆகிய இரு தினங்கள்.

பொது முகாமையாளர்,
ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி.
(சி/13575) (7.6)

## கார் வாடகைக்கு



நாளாந்த, மாதாந்த அடிப்படையில் கார் வாடகைக்குண்டு.

தொடர்பு : 077 583 4770 (39779) (7.6)

## தவறிவிட்டது

சிவலிங்கம் கனிஸ்ரன் என்பவருடைய தே.அ.அட்டை (950022680V) கோண்டாவில் டிப்போவுக்கும் வசாவிளானுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

தொடர்பு : 077 959 6686 (39783) (7.6)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி றஜீனா குகனேஸ்வரன்
அவர்களின் மாமனார்
**கந்தன் பழனி**



அவர்கள் (02.11.2013) சனிக்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள். (29693) (7.6)

யா/மந்துவில் றோ.க.த.க பாடசாலை

## கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம், சிற்றுண்டி நிலையம் என்பன நடத்துவதற்கான கேள்விப் பத்திரம் கோரல்-2014.

மேற்படி விடயம் சார்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம் விண்ணப்பங்கள் கோரியுள்ளது. கேள்விப் பத்திர விண்ணப்பங்களை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவில் ரூபா 500/= செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வி பத்திர விண்ணப்பங்களை சரியான முறையில் பூர்த்தி செய்து எதிர்வரும் 2013.11.22ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக செயலாளர், ஆதார வைத்தியசாலை, நோயாளர் நலன்புரி சங்கம், சாவகச்சேரி என்ற விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

* தீர்மானம் எடுக்கும் முடிவு ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்திற்கு உரியதாகும்.

நிர்வாக சபை
நோயாளர் நலன்புரி சங்கம்
ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி.
(சி/2780) (7.6)

## ஏமாறாதீர்கள்!

போலி பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளிடமிருந்து •••

**Koyo** ®

சில எழுத்துக்களை மாற்றி Koyo போன்று போலி பொருள்களை சந்தையில் விநியோகித்து அதிக இலாபம் பெறும் விஷம நோக்கில் நுகர்வோரை ஏமாற்றுகிறார்கள். எச்சரிக்கையாக இருங்கள்.

ஏதாவது சந்தேகம் இருப்பின் உடன் தொடர்புகொள்ள வேண்டிய தொ.இல:- 0714137949, 071 4016387

ZERENDIB MOTOR ENTERPRISE (PVT) LTD
60-B, SRI SANGARAJA MAWATHA, COLOMBO -10

## துயர் பகிர்வு

திருமதி அமராவதி அமரசிங்கம்



புங்குடுதீவு மண்ணின் மங்கையும், கட்சன் வீதி - வட்டக்கச்சி, 450 திருநகர் கிளிநொச்சி, 176/3, திருவையாறு, அம்பாள் நகர் போன்ற இடங்களில் பிள்ளைகளுடன் வசித்து வந்தவருமாகிய திருமதி அமராவதி அமரசிங்கம் , பிள்ளைகளைக் காண வெளிநாடு சென்ற வேளையில் ஜேர்மனியில் கடந்த 01.11.2013 அமரத்துவ மடைந்தார்.

அன்னார் கதிரவேலு அமரசிங்கத்தின் அன்பு மனைவியும், ஆறுமுகம் - சுந்தரம்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும், சண்முகநாதன் (மிளகாய் நாதன்), அமிர்தவல்லி, முத்துலிங்கம், தங்கநாச்சி, சந்திரலிங்கம், ஜெயச்செல்வன், கனகாம்பிகை, சத்தியலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2013) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறுவதைத் தொடர்ந்து துயர்பகிர்வு நிகழ்வு இல.176/3, திருவையாறு, அம்பாள் நகர், பிரதான வீதி, அமிர்த வல்லியின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்போமாக!

தகவல்: எஸ்.எஸ். சிவசுந்தரி (விதானையார்)
750, சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி.

# நிரந்தர வீடுகளை எமக்கும் வழங்குக

## கேட்கின்றனர் துணுக்காய் மக்கள்

அக்கராயன், நவ.7

துணுக்காயில் சில பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமக்கு நிரந்தர வீடுகள் வழங்குமாறு முல்லைத்தீவு அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துணுக்காய் உயிலங்குளம், யோகபுரம் மேற்கு, அம்பலப் பெருமாள்குளம், புகழேந்திநகர், பாரதிநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நிரந்தர வீடுகள் கிடைக்காத மக்களே நான்காவது வீட்டுத்திட்டத்தில் தமக்கு நிரந்தர வீடுகளை வழங்குமாறு அரச அதிபரிடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

தாம் மீள்குடியமர்ந்து நான்கு ஆண்டுகள் நிறைவடையும் நிலையிலும் தமக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-18)

# நஞ்சுண்டான் குளத்தை உடனே புனரமையுங்கள்

## வடமாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு, நவ.7

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நஞ்சுண்டான் குளத்தை துரிதமாகப் புனரமைப்பதன் மூலமாக அந்தப் பகுதியில் வாழும் சுமார் 1300 க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைவார்களென வடமாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

முல்லைத்தீவு, றெட்பானாவுக்குத் தெற்குத் திசையில் அமைந்துள்ள நஞ்சுண்டான் குளத்தைப் புனரமைப்பதன் மூலமாக வள்ளுவர்புரம், தேராவில், மாணிக்கபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 1300 குடும்பங்கள் பயன்பெற முடியும். இந்தக் குளத்தை அண்டியதாக 6000 ஏக்கர் விவசாய நிலம் தரிசு நிலமாகவுள்ளது. முன்னைய காலங்களில் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்பட்ட இந்த நிலம், குளம் புனரமைக்கப்படாமையாலேயே கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இந்தப் பகுதி மக்கள் 1972 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின்போது இங்கு வந்து குடியேறியவர்களாவர். இவர்கள் தொடர்ச்சியான போர் நடவடிக்கைகளால் பாதிப்படைந்து தற்போது மீள் குடியமர்ந்துள்ள நிலையில் தொழில் வாய்ப்பின்றி தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே, இந்தக் குளத்தைப் புனரமைத்தும் தரிசு நிலத்தை தொழில் நடவடிக்கைக்காகப் பிரித்து வழங்குவதன் மூலம் தமது வாழ்வாதாரத்துக்கு வழியை ஏற்படுத்தித் தரு மாறும் அந்தப் பகுதி மக்கள் என்னிடம் கோரிக்கை விடுத் துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்திய போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனைக் கருத்திற் கொண்டு, எமது வடமாகாண சபையும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் கவனம் செலுத்தி அந்தப் பகுதி மக்கள் வாழ்வதற்கும், தொழில் செய்வதற்கும் வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்- என்றார்.

(க-421)

# ஒட்டுசுட்டானில் பனைவள நிலையம்

முல்லைத்தீவு, நவ.7

ஒட்டுசுட்டானில் பனை வளம் மற்றும் உற்பத்தி மேம்படுத்தல் நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மகளிர் குழுக்களால் தயாரிக்கப்படுகின்ற பனைசார் கைப்பணிப் பொருள்கள், பனம்பாணி, சுத்தமான தேன் ஆகியன இந்த நிலையத்தினூடாக விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த நிலையம் பாதிக்கப்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு பயனளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-500)

# தோணிக்கல், ஸ்கந்தபுரம் பகுதிகளில் மோதல்கள்

வவுனியா, நவ.7

தோணிக்கல், ஸ்கந்தபுரம் பகுதிகளில் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களில் பலர் காயமடைந்துள்ளனர்.

தீபாவளித் தினத்தன்று வவுனியா தோணிக்கல் பகுதியில் மதுபோதையின் உச்சத்தில் இரு குழுக்களுக்கிடையே வாய்த்தர்க்கம் முற்றி மோதலில் முடிந்தது. அண்மையில் இடம்பெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரே இந்த மோதலின் சூத்திரதாரியென தோணிக்கல் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தமோதலின்போது சிறுமி ஒருவரின் சட்டையைக் கிழித்து ஒரு குழுவினர் அட்டகாசம் புரிந்துள் ளனர். பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் இது தொடர்பாக வவுனியாப் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். அன்றைய தினம் வவுனியா ஸ்கந்தபுரம் பகுதியிலும் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் பலர் காயமடைந்துள்ளனர். இந்த இரண்டு மோதல்களுக்கும் இடையில் அரசியல் பின்புலம் இருந்தமை தெரியவந்ததால் அச்சமடைந்த அந்தப் பகுதி மக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்தனர். இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் இளைஞர் குழுக்கள் சந்திப் பகுதிகளில் ஒன்று கூடுவதைத் தடை செய்துள்ளனர்.

(க-402)

# வவுனியாவில் கல்வியமைச்சருடன் கலந்துரையாடல்

வவுனியா, நவ.7


வவுனியா தெற்கு கல்வி வலய அலுவலகத்துக்கு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நேரில் சென்று கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அண்மையில் வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குச் சென்ற அமைச்சர், கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, சிங்கள தமிழ்ப் பிரதேசங்களின் கோட்டக் கல்வி அதிகாரிகள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பல மணித்தியாலங்களாக இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது. மிகவும் பயனுள்ளதாக இந்தக் கலந்துரையாடல் இருந்ததாக அதில் பங்குபற்றியோர் தெரிவித்தனர்.

(க-402)





தீபாவளிப் பெருநாளை முன்னிட்டு நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றபோது ஆலயத்தின் பிரதமகுருக்களான ஜெயசுதக் குருக்கள் பூசைகளை மேற்கொண்டார். (க-435)

## விவசாயக் குழுக் கூட்டத்துக்கு

# அழைப்பு இல்லை

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக்கூட்டம் குறித்து தமக்கு உரிய வகையில் அறிவிக்கப்படவில்லையென ஸ்கந்தபுரம் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கணகசபாபதி தெரிவித் துள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்துக்கு கமக்கார அமைப்புகளுக்கு முறையான அழைப்புகள் விடுக்கப்படவில்லையெனவும் இதனால் தமது அமைப்பினால் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கிய குளமாகிய அக்கராயன் குளத்தின் கீழ் உள்ள கமக்கார அமைப்பான நாகதம்பிரான் கமக்கார அமைப்பு- குறித்த பகுதியிலுள்ள விவசாயிகளின் நலன் சார்ந்த செயற்பாடு களை முன்னெடுத்து வருவதாகவும் விவசாயக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாததால் தம்மால் அங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக அறிந்து கொள்ள முடியவில்லை யெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-18)

# பயனில்லாத முத்திரைகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் முத்திரைக்கு இதுவரை பொருள்கள் வழங்கப்படவில்லையென தேவிபுரம், வள்ளிபுனம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட முத்திரைகளுக்கே இவ்வாறு பொருள்கள் வழங்கப்படவில்லையென அவர்கள் கூறுகின்றனர். ஏற்கனவே மூன்று முத்திரைகளுக்குப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ள போதி லும் மீதியாகவுள்ள முத்திரைகளுக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (க-555)

# பொலிஸார் - சிவில் அமைப்புகள் சந்திப்பு

மன்னார், நவ.7

மன்னாரில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும், பொலிஸாருக்குமிடையில் விசேட சந்திப்பு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பெரிய கடை பொது மண்டபத்தில் இடம்பெற்றது. இதற்கு மன்னார் பொலிஸ் தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி துஸார தளுவத்த தலைமை வகித்தார்.

இந்தச் சந்திப்பின் போது மன்னார் பெரியகடை சிவில் அமைப்புகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. இதன்போது பல கோரிக்கைகள் சிவில் அமைப்புகளினால் முன்வைக்கப்பட்டன.

இவற்றை ஆராய்ந்த மன்னார் பொலிஸ் தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி குறித்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தார்.

இதன்போது சிவில் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் மன்னார் பெரியகடைப் பகுதியில் உள்ள சில வீதிகள் இரவில் மின் வெளிச்சமின்றிக் காணப்படுவதால் சமூக விரோதச் செயல்கள் நடைபெறுவதற்கு அது ஏதுவாக இருப்பதாகவும் குறித்த பகுதியில் மின் விளக்குகளைப் பொருத்துமாறும் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

குறித்த விடயத்தை மன்னார் பொலிஸ் தலைமை காரியாலய பொறுப்பதிகாரி அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மன்னார் மின்சார சபை அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

கூட்டத்தில் மன்னார் நகரசபைச் செயலாளர் எஸ்.பிரிட்டோ, மருத்துவர் கதிர்காமநாதன், பெரியகடை கிராம அலுவலர்,





மதத்தலைவர்கள், உயரதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-12)


# ராணுவ முகாம்களில் பௌத்த விகாரைகள்

## தமிழர் கலாசாரத்தை மாற்ற அரசு முயற்சி என்கிறது கூட்டமைப்பு

மட்டக்களப்பு,நவ7
மட்டக்களப்பு மாவட்டத்தில் பௌத்த விகாரைகள் இராணுவ முகாம்களில் முளைத்துக் கொண்டிருக்கின்றன. இராணுவம் வெளியேறும் போது அங்கு பௌத்த விகாரைகள் இருந்த இடங்கள் பௌத்தர்களின் வாழ்விடங்களாக மாற்றப்படப் போகின்றன.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தேனுகா கலைக்கழகம் நடத்திய தித்திக்கும் தீபாவளி விழா மட்டக்களப்பு. தேற்றாத்தீவு கிராமத்தில் திங்கட்கிழமை இரவு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



தீபாவளி தினத்தன்று நடைபெற வேண்டிய கலை நிகழ்வு தீபாவளி முடிந்து இரு நாள்களில் நடைபெறுகின்றது. நாட்டில் தமிழினத்துக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற துன்புறுத்தல்களால் மக்கள் சுதந்திரமான முறையில் பண்டிகைகளை கோலகலமாகக் கொண்டாடுவது பொருத்தமற்ற நிலையிலேதான் இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து ஆலயங்களைப் புனரமைப்பதில் கூட இராணுவம் தலையிடுகின்றது.

பல இந்து ஆலயங்களைப் புனரமைப்புச் செய்யச் செல்லும் போது அதனை ஏன் செய்கின்றீர்கள்? எதற்குச் செய்கின்றீர்கள்? உங்களது பதிவுச் சான்றிதழைக் காட்டுங்கள்? காணி உறுதிச் சான்றிதழைக் காட்டுங்கள்? என்று இராணுவத்தினர் சமய ரீதியாகவும் சமூகரீதியாகவும் மக்களை அடக்க முற்படுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எத்தனையோ பௌத்த விகாரைகள் இராணுவ முகாம்களில் முளைத்துக் கொண்டிருக்கின்றன. இராணுவம் வெளியேறும்போது அங்கிருக்கின்ற பௌத்த விகாரைகள் இருந்த இடங்கள் பௌத்தர்களின் வாழ்விடங்களாக மாற்றமடையப் போகின்றன. இந்து ஆலயங்கள் விஸ்தரிக்கப்படுவதில் இராணுவத்தினர் தலையிட்டு வருகின்றனர். நாட்டில் தமிழருக்கு பல வகைகளில் துன்பங்கள் ஏற்பட்டு கொண்டிருக்கின்றன. எங்களது கலாசாரத்தை ஒழிக்க வேண்டும் என்பதில் அரசு மறைமுகமாகச் செயற்படுகின்றது.
-என்றார். (ச-32)

# கிழக்கைக் கட்டியெழுப்ப அமெரிக்கா பங்களிப்பு

## தூதர் மிச்செல் ஜே சிசன் தெரிவிப்பு



மட்டக்களப்பு,நவ.7
கிழக்கு மாகாணத்தை மீண்டும் கட்டியெழுப்பி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அமெரிக்க அரசு தன்னாலான தொழில்நுட்ப உதவிகளையும், தனியார்துறைப் பங்களிப்பையும் தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளது.

இவ்வாறு இலங்கையில் உள்ள அமெரிக்க தூதர் மிச்செல் ஜே சிசன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதர் மிச்செல் ஜே சிசனை திங்கட்கிழமை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே தூதர் இவ் வாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சரோடு அமைச்சின் செயலர் கே.பத்மநாதன், திட்டமிடல் பணிப்பாளர் ஞானசேகரம், அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் சமந்த அபேவிக்கிரம ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச)

# புனரமைப்பு காணாத வீதி

கல்முனை,நவ.7
கல்முனை,அக்கரைப்பற்று, பழைய சலுசலா வீதி இதுவரை புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும் பயன்படுத்தி வருகின்றனர்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் அதிகளவு வீதிகள் புனரமைக்கப்பட்டும், குறித்த வீதி.புனரமைப்புச் செய்யப்



படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

இந்த வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)




கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் நிறைவாக வெள்ளி விழா நடை பவனியும் இடம்பெற்றது.

# மட்டக்களப்புக்கு நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்,நவ.7
ஊக்குவிப்பு உற்பத்தி திறன் விருத்தி அமைச்சர் பசீர் சேகுதாவூத் தனது நாடாளுமன்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 49 லட்சத்து 20,000 ரூபாவை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலர் பிரிவுகளில் 52 திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிதி ஏறாவூர், கோறளைப்பற்று மத்தி, ஓட்டமாவடி, கிரான், ஏறாவூர் பற்று, மண்முனை வடக்கு, காத்தான்குடி, மண்முனைப் பற்று, களுவாஞ்சிக்குடி, வவுணதீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தனது நாடாளுமன்ற பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து 50 லட்சம் ரூபா நிதியை 56 திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்தநிதி காத்தான்குடி, கோறளைப்பற்று வடக்கு, கோறளைப்பற்று மத்தி, ஓட்டமாவடி, ஏறாவூர், மண்முனை வடக்கு, மண்முனைப்பற்று, போரதீவுப் பற்று ஆகிய பிரதேச செயலகங்களுக்கும், மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (ச)

# மாடுகளைக் கடத்திய இருவர் மாட்டினர்

திருகோணமலை,நவ.7
திருகோணமலை, உப்புவெளிப் பகுதியில் சுமார் 100 மாடுகளை சட்டவிரோதமாக கடத்திச் செல்ல முற்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கண்டல்காடு பகுதியிலிருந்து மொறவெவ பகுதிக்கு மாடுகளை கொண்டு செல்ல முற்பட்டபோதே அவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

# கிழக்கு மாகாணத்தில் மிதிவெடி அபாயம்

## யுனிசெப் நிறுவனம் தெரிவிப்பு

மட்டக்களப்பு,நவ.7
மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு, திருப்பெருந்துறை, ஈரலக்குளம், கல்மடு, கொக்கட்டிச்சோலை, முறுத்தானை ஆகிய பகுதிகளிலும் திருகோணமலை மாவட்டத்தின் இறால்குளிப் பகுதியிலும் மிதிவெடி அபாயம் உள்ளது என்று இனங் காணப்பட்டுள்ளது.




இந்தத்தகவலை யுனிசெப் நிறுவனத்தின் கண்ணிவெடிச் செயற்பாட்டுத் திட்ட அதிகாரி ரி.யதார்த்தனி தெரிவித்தார்.

மிதிவெடி அபாயம் சம்பந்தமான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் யுனிசெப் ஆகியன இணைந்து நடத்தி வருகின்றன.

இது தொடர்பான அறிவூட்டல் பயிற்சிநெறி மட்டக்களப்பு சர்வோதய பயிற்சி நிலையத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். (ச)

# மஹிந்தவின் குற்றங்களை மறைக்கவே உச்சி மாநாடு

## டில்லி பங்கேற்றால் நாடாளுமன்றத் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவோம் என சீமான் எச்சரிக்கை



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குற்றங்களை மறைக்கவே கொழும்பில் பொதுநலவாய உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. எனவே, தமிழர்களின் உணர்வை மதிக்காமல் இந்த மாநாட்டில் இந்தியா பங்கேற்றால் நாடாளுமன்றத் தேர்தலில் சரியான பாடம் புகட்டுவோம்.

இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என வலியுறுத்தி புதுவை சிங்காரவேலர் திடலில் நாம் தமிழர் கட்சி சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது. பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக முத்தியால்பேட்டையில் இருந்து சிங்காரவேலர் திடலை நோக்கி நாம் தமிழர் கட்சியினர் ஊர்வலமாகச் சென்றனர். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே சீமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மனித உரிமை, பண்பாடு, கலை, சட்டம் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத்தான் பொதுநலவாய மாநாடு நடத்தப்படுகிறது. இவை எதுவும் இல்லாத இலங்கையில் எதற்கு பொதுநலவாய மாநாடு நடத்தப்பட வேண்டும்.

தென்னாபிரிக்காவில் இனவெறிப் போராட்டம் நடந்தது. அதற்காக அந்த நாடு பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்கப்பட்டது. பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி கொண்டுவரப்பட்டது. அதற்காக பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்கப்பட்டது.

இலங்கையில் ஒன்றரை வருடங்களில் ஒரு இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இலங்கையில் நடைபெற்றது போர்க்குற்றம் அல்ல. அந்தப் போரே குற்றம். எனவே, இலங்கையை பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்க வேண்டும்.

தங்கை இசைப்பிரியாவை போல ஆயிரக்கணக்கான சகோதரிகள் வன்புணர்வுக்குள்ளாக்கி கொல்லப்பட்டுள்ளனர். ஆயுதங்களை போட்டு விட்டு சரணடைந்த பலர் கொல்லப்பட்டனர். ஆனால் அவர்களுக்காக குரல் கொடுக்க யாரும் முன்வரவில்லை. இன்று தமிழன் அநாதையாக நிற்கிறான்.

இலங்கை இராணுவத்தால் 820 தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மத்திய அரசோ இலங்கை கடற்படைக்கு இரண்டு போர்க்கப்பல் பரிசாக வழங்குகிறது. இது எந்த வகையில் நியாயம்?

பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடந்தால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதன் செயல் தலைவராக இரண்டு வருடங்கள் இருப்பார். இதன் மூலம் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்களில் இருந்து தப்பி விடுவார். மஹிந்தவின் குற்றங் களை மறைக்கவே இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது. இது தொடர்பாக மத்திய அரசு இதுவரை எந்த ஒரு முடிவும் எடுக்கவில்லை. மாநாட்டில் கலந்துகொள்ள மத்திய அரசு முடிவு எடுக்கும்போது காங் கிரஸ் கட்சிக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒரு முடிவு எடுக்க வேண்டும் - என்றார். (வ - 14)

## கைதான இந்திய மீனவர்கள் 30 பேரும் விளக்கமறியலில்

காங்கேசன்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 30 இந்திய மீனவர்களையும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதி வான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்திய புதுக்கோட்டை மற்றும் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 30 மீனவர்கள் 7படகுகளில் வந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைப் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸாரிடமிருந்து மேற்படி மீனவர்களை பொறுப்பேற்ற கடற்றொழில் நீரியல் வளத்துறையினர் இவர்களை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியிருந்தனர்.

இதன்போது மேற்படி மீனவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (வ - 14-17)

## பண மோசடி செய்த வென்னப்புவ பிரதேச சபை உறுப்பினர் கைது

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வென்னப்புவ பிரதேச சபை உறுப்பினர் ருக்மன் கொலம்பக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தாலி நாட்டுக்கு தொழிலுக்காக அனுப்புவதாகக் கூறி நான்கு பேரிடம் சுமார் 9 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மோசடி தொடர்பில் சிலாபம் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதையடுத்தே சந்தேகநபரான பிரதேச சபை உறுப்பினர் வென்னப்புவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதேச சபை உறுப்பினரை விசாரணைகளின் பின்னர் மாராவில நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த வென்னப்புவ பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராமேஸ்வரம் மீனவர்கள் பணிப்புறக்கணிப்பு

இராமேஸ்வரம், நவ.7

இலங்கை கடலோரக் காவல் படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசு கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எல் லைக்குள் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை தாக்கும் இலங்கை கடற்படையினரை கண்டிக் கும் வகையில் நடவ டிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் 800 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் மீன்பிடிக்க செல்லாமல் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன.


## வாழைக்குலையைத் திருடிய இருவருக்கு ஒரு வருட சிறை

500 ரூபா பெறுமதியான வாழைக்குலையை திருடிய இருவருக்கு நுகேகொடை நீதிமன்றம் தண்டப் பணமும், சிறைத்தண்டனையும் விதித்துள்ளது.

இருவருக்கும் எதிரான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

நுகேகொடை பிரதான நீதவான் அஜித் எம். முனசிங்கவே இருவருக்கும் தலா 3000 ரூபா தண்டம் விதித்ததுடன் ஐந்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனையும் விதித்தார். (வ - 14)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு



தனித்து வாழ்ந்து வந்த குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நாத்தாண்டிய, கெவன - பனன் கொட பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் வேளையில் இந்த சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் நாத்தாண்டிய - பனன் கொட பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதான நபர் எனத் தெரியவந்துள்ளது.

இவரது மனைவி வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றுள்ள நிலையில் இந்நபர் கூலி வேலை செய்து வந்துள்ளார்.

உயிரிழந்த நபரது மகள் திருமணமாகி வேறு வீடொன்றில் வசித்து வந்தார் எனவும், இந்நிலையில் இந்நபர் தனித்து வாழ்ந்தார் எனவும் தெரியவந்துள்ளது.

சடலம் சிலாபம் வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மாரவில பொலிஸார் இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ - 14)



இஸ்லாமிய புத்தாண்டு முஹர்ரம் தினத்தை முன்னிட்டு முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் மற்றும் பொரல்லை அஹதியா பாடசாலை இணைந்து ஒழுங்கு செய்துள்ள முஹர்ரம் தின வைபவம் தெமடகொட சோனக இஸ்லாமிய கலாசார நிலைய பாஷா விழா மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம அதிதியாக கலந்துகொண்ட சிரேஷ்ட அமைச்சர் எ.எச்.எம்.பௌசி, புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் மாணவியொருவருக்கு அப்பியாச புத்தகங்களை வழங் குவதையும் பாடசாலை அதிபர் சிப்லி ஹாசிம் உடன் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

## கைப்பணித்துறை மாநாடு

தெங்கு தும்பு மற்றும் துகள்கள் சார்ந்த மெருகூட்டப்பட்டதும் பெறுமதி சேர்க்கப்பட்டதுமான கைப்பணித்துறை சார்ந்த மாநாடு கடந்த திங்கட்கிழமை காலை நீர்கொழும்பு ஜெட்வின் ஹோட்டல் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபி விருத்தி அமைச்சர் ஜகத் புஸ்ப குமார ஆகியோர் கலந்து கொண்டனர்.

தெங்கு அபிவிருத்தி தொடர்பில் திறைசேரியின் பிரதி செயலாளர் கலாநிதி பீ.எம்.எஸ். படகொட அவர்களால் இந்நிகழ்வில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

தெங்கு தும்பு மற்றும் துகள்கள் சார்ந்த கைப்பணித்துறை வளர்ச்சி தொடர்பில் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிமல் சோமவீர உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சர்களான விக்டர் அன்ரனி பெரேரா, லக்ஸ்மன் வசந்த பெரேராவும், தன்சானியா, இந்தியா, இலங்கை, பிரேசில், இத்தாலி, மலேசியா, இந்தோனேசியா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், சீனா, கொரியா, தாய்லாந்து உட்படப் பல நாடுகளைச் சேர்ந்த துறைசார் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (வ - 14)

## கனடாவுக்கு அனுப்புவதாகப் பொய் கூறி பண மோசடி செய்தவர் வசமாகச் சிக்கினார்

கனடாவுக்கு அனுப்பி வைப்பதாகப் பொய் கூறிபலரிடம் பண மோசடி செய்த சந்தேகநபர் ஒருவர் ஜா-எல பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 94 கடவுச்சீட்டுக்கள் 24 உடல்நல ஆவணங்கள், 146 புகைப்படங்கள், 5 வங்கிப் புத்தகங்கள் மற்றும் 4 கடனட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

இவர் பலரிடம் இலட்சக் கணக்கில் பண மோசடி செய்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கனடா செல்ல முயற்சித்து ஜா-எல பகுதியில் யாராவது பண மோசடிக்கு உள்ளாகியிருந்தால் உடனடியாக 0773917092 என்ற தொலைபேசிக்கு அழைத்து மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவு பரிசோதகர் உபுல் சமரசிங்கவிடம் முறையிடுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கேட்டுக் கொண்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீர்கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சட்டம் ஒழுங்கு வடக்கில் நிலைபெற பதின்மூன்று உதவ வகை செய்க

வடக்கில், யாழ்.மாவட்டத்திலும் வன்னி மாவட்டங்களிலும் துணிகரக் கொள்ளைகளும் பல வகையறாக்களில் திருட்டுகளும் மலிந்து வருகின்றன. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பெரும் கொள்ளைகளும் சராசரித் திருட்டுகளும் அதிகரித்திருப்பதனை ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

கடந்த வாரம் மட்டும் யாழ்.மாவட்டத்தில் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாவுக்கும் அதிகமான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று காங்கேசன்துறைப் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அதே வரிசையில், வலிகாமம் தென் மேற்கில், நவாலிப் பகுதியில் பட்டப்பகலில் இரண்டு லட்சம் ரூபா கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது. வங்கியிலிருந்து பணத்தைப் பெற்றுச் சென்ற பெண்மணியிடம் இருந்து அந்தப் பெருந்தொகை கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

மேலும் மின்மோட்டர்கள் திருட்டு, விற்பனை நிலையங்களில் திருட்டு. வீதியால் செல்லும் பெண்களிடம் கொள்ளை, கோயில் திருவிழாக்களின் போது நகைகள் திருட்டு. அரச அலுவலகங்களில் காவலாளிகளைத் தாக்கிவிட்டுப் பெறுமதியான உபகரணங்கள் திருட்டு என்று பட்டியல் நீண்டு, பருத்துச் செல்கிறது.

யாழ்.மாவட்டத்துக்கு நிகராக வன்னிப் பிரதேச மாவட்டங்களிலும் திருட்டுச் சம்பவங்கள் நாளாந்தம், அல்லும் பகலும் புடைத்துப் பெருகி வருகின்றன.

திருட்டு, கொள்ளை, வழிப்பறி போன்ற குற்றச்செயல்கள் அண்மைக் காலமாக, வடக்கில் அதிவேகமாகப் பெருகிப் பரவி வருவதற்கான காரணிகள் அல்லது உந்துதல்கள் குறித்து, சட்டம் ஒழுங்கைப் பேணும் தரப்புகள் தகுந்த நடவடிக்கை எடுப்பதில் அதீத அக்கறை கொள்ள வேண்டிய வேளை இது.

அந்தத் தரப்புகள் அதனை நாடிச் செயற்பட முனைந்திருப்பது நல்ல அறிகுறி. குறிப்பாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைத்து, அவற்றுடன் பொலிஸாரும் இணைந்து செயற்படும் திட்டம் ஒன்றை அப்பகுதி பொலிஸ் அதிகாரி சந்திரகுமார வீரசிங்க வகுத்துள்ளமை கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

கொள்ளை, திருட்டுப் போன்றவற்றை மட்டுமன்றி ஏனைய சமூகச் சீர்கேடுகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு மேற்படி திட்டம் உதவும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் இத்தகைய ஏற்பாடுகள் இல்லை என்றில்லை. யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் கிறீஸ்பூதம் பூதாகாரமாகத் தோன்றிய வேளை சிவில் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.

ஆயினும், பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்ட அக்குழுக்கள், கிறீஸ்பூதங்களின் அக்கிரமங்கள் அடங்கிப்போக செயலிழந்து போயின. சிவில் பாதுகாப்புக் குழுக்களை கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்திவிடாமல் ஏனைய வடக்கு மாவட்டங்களிலும் செயற்படுத்துவது அவசியமும் அவசரமும் ஆகும்.

மக்களுக்கும் மக்களின் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் கடமை ரீதியான விதிமுறைகளைப் பொலிஸார் உரிய முறையில் நிறைவேற்றினால், அவற்றைப் பிசிறின்றிச் செயற்படுத்தினால் குற்றச் செயல்களைக் குறைப்பதற்கு பெரியளவில் உதவலாம்.

ஆனால் பொலிஸாரே விதிமுறைகளை மீறி, மக்கள் நலன்களைப் போட்டுடைக்கும் தன்மை வடக்கில் வளர்ந்து வருவதனை அவதானிக்க முடிகிறது. இதனை மனதிற் கொண்டு போலும், பொலிஸாரின் விதிமுறை மீறல்கள் மற்றும் குற்றங்கள் குறித்துப் பாடசாலை மாணவர்கள் மிகுந்த துணிவுடன் தெரிவிப்பதாகவும், அதனைத் தாம் வரவேற்பதற்காகவும் காங்கேசன்துறைப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜேசிறி தெரிவித்திருக்கிறார்.

அதுமட்டுமன்றி, பொதுமக்களும் தமது பகுதிகளில் இடம் பெறும் குற்றச் செயல்கள் மற்றும் ஒவ்வாத செயற்பாடு களில் ஈடுபடுவோர் குறித்துத் தகவல் தரவேண்டும் என்று அவர் கோரியுள்ளார். பொலிஸ் அத்தியட்சகரின் இந்த முயற்சி பொதுமக்கள்-பொலிஸார் இடையே நல்லுறவை உண்டாக்கும். அதனூடு குற்றச் செயல்களைக் குறைக்க வழிவகுக்கும் என நம்பலாம்.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் பிரகாரம், மாகாணங்களில் பணியாற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், அவற்றின் முதலமைச்சர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுச் செயற்படுவதோடு சம்பந்தப்பட்ட மாகாணத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அந்த நிலை விரைவில் உருவாக்கப்பட்டால் மட்டுமே வடக்கில் குற்றச்செயல்களையும், சட்ட மீறல்களையும் தடுக்க இயலும். இது விடயத்தில் வடக்கு மாகாணசபை தாமதமின்றி விரைந்து வீச்சுடன் செயற்பட வேண்டும். நடைபெறுமா?

# இவர்களை நம்புமா ஈழத்தமிழர் மனம்?

ராஜராஜன்

இலங்கைத் தமிழ் மக்கள் மீது தமிழ்நாட்டைச்சேர்ந்த காங்கிரஸ் தலைவர்களுக்கு திடீரெனப் பாசம் பீறிட்டுக் கிளம்பியுள்ளது.

இதற்கு ஏற்றாற் போன்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இலங்கையில் நடைபெறவிருக்கும் பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதை எதிர்ப்பதாக தமிழ்நாட்டைச் சேர்ந்த முக்கிய காங்கிரஸ் தலைவரும், மத்திய அமைச்சருமான ஜீ.கே.வாசன் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். மாநாட்டுக்கென இலங்கைக்கு இந்தியப் பிரதமர் சென்றால் தனது அமைச்சர் பதவியைத் துறக்கப் போவதாக இவர் கூறியதாகவும் செய்திகள் வெளிவந்தன. இந்த நிலையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வேறு சில காங்கிரஸ் தலைவர்களும் இவரது கருத்துக்கு ஆதரவு தெரிவித்ததைக் காண முடிந்தது.

மேலும் இசைப்பிரியா தொடர்பாக வெளிவந்த காணொலியும் கண்டன அறிக்கை விடுமளவுக்கு காங்கிரஸ் காரர்களைத் தூண்டியுள்ளது. ஏன் இந்த மனமாற்றம் என தமிழர்கள் கேள்வி கேட்கும் அளவுக்கு இது முக்கியத்துவமும் பெற்றது.

ஆனால் இதிலும் ஏதோ சூது இருப்பதாகவே உள்மனம் கூறுகின்றது. நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர் தலை இலக்கு வைத்தே இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள் ளனவா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை. ஏனென்றால், அரசியல் வாதிகள் தமக்கு நல் வாய்ப்பைத் தேடிக் கொள்ள எதையும் செய்வதற்குத் தயங்க மாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே.

ஆனால் பழைய விடயங்களை இரை மீட்டுப் பார்க்கும்போது இவர்களது முன்னைய செயற்பாடுகளை மறப்பதற்கு மனம் மறுக்கின்றது.

இறுதிப் போரின்போது, 'பாதுகாப்பு வலயத்தினுள்' அகப்பட்டுக்கொண்ட ஈழத்தமிழர்கள் சீரழிக்கப்பட்டு கொன்று குவிக்கப்பட்டபோது இவர்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு மௌனம் காத்தார்கள். தற்போதைய இந்திய ஜனாதிபதியும் அப்போதைய வெளிவிவகார அமைச்சருமான பிரணாப் முகர்ஜி போரை நிறுத்துவதாகக் கூறி இங்கு வந்து அதனைத் தீவிரப்படுத்துமாறு இலங்கை அரசிடம் கேட்டுக் கொண்டதை மானமுள்ள எந்தத் தமிழனும் மறக்க மாட்டான். இவரது வருகையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட கருணாநிதி உண்ணாவிரத நாடகமொன்றையும் அரங்கேற்றினார். பின்னர் மத்திய அமைச்சர்கள் வாக்குறுதி வழங்கியுள்ளதாகக் கூறித் தமது உண்ணாவிரதத்தை நிறைவு செய்து கொண்டார். காலை உணவை உண்ட பின்னர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த கருணாநிதி மதிய உணவுக்காக வீடு சென்றதாகக் கூறப்பட்டதும் உண்டு. இவர்கள் எல்லோ ரும் ஈழத் தமிழர்களின் அழிவில் தமது அரசியல் இலாபத்தை நோக்க மாகக் கொண்டு செயற்பட்டனர். இன்று காங்கிரஸாரும் அதே உத்தி யைக் கடைப்பிடிப்பதாகவே தெரிகின் றது.

1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு தமிழ்நாட்டில் தலை தூக்குவதற்கான வாய்ப்பு அறவே இல்லாமல் போய் விட்டது. ஆனானப்பட்ட பெருந்தலைவரான காமராஜரே தமது சொந்தத் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டபோது காங்கிரஸ் கட்சியின் அஸ்தமனத்துக்கு வித்திடப்பட்டது. பின்னர் இடம் பெற்ற தேர்தல்களில் ஏதோவொரு திராவிடக் கட்சியின் தயவில் கூட்டுச் சேர்ந்து நிற்க வேண்டிய பரிதாபநிலை அந்தக் கட்சிக்கு ஏற்பட்டது. தற்போது தமிழ் நாட்டு மக்களால் முற்று முழுதாக ஓரம் கட்டப்பட்ட நிலையில் அந்தக் கட்சி உள்ளது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவத்துடன் விடுதலைப்புலிகளுக்குத் தொடர்புகள் இருப்பதாகக் கூறி சோனியா குடும்பத்தினர் ஆத்திரப்படுவதில் நியாயம் உண்டு. ஆனால் இதே ராஜீவ் காந்தியால் அனுப்பி வைக்கப்பட்ட இந்திய இராணுவத்தினர் ஈழத்தில் புரிந்த கொடுமைகளையும், படுகொலைகளையும் நியாயப்படுத்தியதுடன் நின்று விடாது அகமகிழ்ந்து புளகாங்கிதம் அடைந்தவர்கள் இந்த தமிழ் நாட்டு காங்கிரஸ்காரர்கள். இன உணர்வை விட காங்கிரஸ் கட்சியின் மேலிடத்தில் இருப்பவர்களுக்கு எடுபிடிகளாக சேவகம் புரிவதையே இவர்கள் பெருமையாகக் கொண்டிருந்தனர். இதன் காரணமாக எட்டும் தொலைவில் தமது உடன் பிறப்புக்கள் அழிக்கப்படுவது இவர்களது கண்களுக்குத் தெரியவில்லை.

தமிழ் நாட்டினுள்ள ஈழ ஆதரவாளர்களும், தன்மானமுள்ளவர்களும் ஈழத்திலுள்ள தமது உறவுகளுக்கு ஏற்பட்ட அவலங்கள் தொடர்பாக உரக்கக் குரல் கொடுத்த போது ஏற்பட்ட பலத்த ஓசையில் காங்கிரஸார் காணாமலே போயினர். மேலும் தமிழ்நாட்டு மக்கள் செல்லாக்காசாகவே காங்கிரஸாரை மதிக்கத் தலைப்பட்டு விட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில் இந்தச் சரிவு நிலையிலிருந்து மீண்டெழ வேண்டுமானால் ஈழத் தமிழருக்கு ஆதரவான நிலைப்பாட்டை கையில் எடுப்பதைத் தவிர வேறு வழியொன்றும் இவர்களுக்குத் தெரியவில்லை.

ஆனாலும் தமிழ்நாட்டு மக்கள் சகல உண்மைகளையும் அறிவார்கள். கடந்த தேர்தலின் போது கருணாநிதியின் கபட நாடகத்துக்குத் தக்க பதிலளித்த அவர்கள் காங்கிரசாரின் பொய் வேடத்துக்கு முன்னால் ஒரு போதுமே மயங்கப் போவதில்லை.

மேலும் இலங்கையின் வட பகுதியில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் தமிழர் தரப்பினர் அமோக வெற்றியை ஈட்டியதுடன் ஆட்சியையும் அமைத்துள்ளனர். ராஜீவ்-ஜே. ஆர்.இருவரும் இணைந்து கையெழுத்திட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் கீழ்தான் மாகாண சபைகள் இங்கு உருவாக்கப்பட்டன. 13 ஆவது அரசியல் திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப் பட்ட இந்த மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் ஏனைய மாகாண சபைகளில் இந்த அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஆளும் தரப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் இந்த எட்டு மாகாண சபைகளும் உள்ளதே இதற்கான காரணமாகும். ஆனால் ஒன்பதாவதாக அமையப்பெற்ற வடமாகாண சபையிலேயே இவை தொடர்பான பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.


மேலும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர் சகல அதிகாரங்களையும் கொண்டுள்ளார் எனவே, ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையும் அதன் முதலமைச்சரும் கைகள் கட்டப்பட்டுள்ள நிலையில் எதையுமே செய்ய முடியாது அவதிக்குள்ளாவதைக் காண முடிகின்றது. தம்மைத் தெரிவு செய்த மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியாத நிலையில் தாம் உள்ளதை எண்ணி மனம் புழுங்கு வதைத் தவிர கூட்டமைப்பால் வேறெதுவும் செய்ய முடியாத நிலைதான் காணப்படுகின்றது.


ஆகவே தமிழ்நாட்டு காங்கிரஸார் உண்மையிலேயே மனப் பூர்வமாக ஈழத் தமிழர்களுக்கு உதவி புரிவதற்கு விரும்பினால் முதலில் இந்திய மத்திய அரசுக்கு நெருக்குதல் கொடுத்து வடமாகாண சபை சகல அதிகாரங்களுடனும் இயங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமே அவர்களால் ஏற்கனவே தாம் இழைத்த தவறுகளுக்கு ஓரளவு பரிகாரம் கிடைக்கும். மேலும் போரினால் இடம் பெயர்ந்து இன்னமும் உரிய வகையில் மீள் குடியமர்த்தப்படாது அவலப்படும் இங்குள்ள மக்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் இந்திய அரசின் மூலமாக வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். மேலும் தமிழர்களின் காணிகள் பறிக்கப்படுவதும், தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுவதும் உடனடியாக நிறுத்தப்படுவதற்கு இவர்கள் முனைப்பு டன் செயற்பட வேண்டும்.

இதை விடுத்து வெறுமனே அறிக்கை விடு வதும், அனுதாபம் தெரிவிப்பதும், நீலிக் கண்ணீர் வடிப்பதும் ஈழத்தமிழர்களுக்கு உதவாது என்பதை மட்டுமல்ல தமிழ்நாட்டு மக்களும் இதைக் கணக்கில் எடுக்கமாட்டார்கள் என்பதையும் இவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு தமிழ்நாட்டில் தலை தூக்குவதற்கான வாய்ப்பு அறவே இல்லாமல் போய் விட்டது. ஆனானப்பட்ட பெருந்தலை வரான காமராஜரே தமது சொந்தத் தொகுதியில் தோற்கடிக்கப் பட்டபோது காங்கிரஸ் கட்சியின் அஸ்தமனத் துக்கு வித்திடப்பட்டது.

# இரைச்சலின்றி வாழ்ந்தால்......





பி.குருசரன்

முன்னாளில் நகரங்களிலும் கிராமங்களிலும் சந்தடிகுறைவாயிருந்தது. இரைச்சலைத் தணிக்க உதவுகிற மரங்கள் நிறைய இருந்தன. நாகரிகமும் சனத்தொகையும் வளர வளர இரைச்சலும் வளர்ந்து கொண்டே செல்கிறது. தொழிற்சாலைகளும், வாகனங்களும், பொது விழாக்களும், விளையாட்டுப் போட்டிகளும் இன்னும் விளம்பர அறிவிப்புகளும் என இரைச்சலின் அளவு கூடிக் கொண்டே போகின்றது. சிறிய அளவிலான விழாக்களில்கூட காலை முதல் இரவு வரை ஒலிபெருக்கிகள் பாட்டு என்ற பெயரில் இரைச்சலை வீசியடித்துக் கொண்டிருக்கின்றன. தொலைதூர பயணம் செய்யும் இரவு நேர பஸ்களில் ஓரிருவரின் விருப்பத்திற்காகப் பாட்டுகள் அல்லது வீடியோக் காட்சிகளை உரக்க ஒலிக்கவிட்டு ஏனைய பயணிகளைத் தூங்க விடாமல் செய்கின்றனர். அடுத்தவரின் நலனை அலட்சியம் செய்யும் மனப்போக்கும், இரைச்சலினால் உண்டாகும் கேடுகளைப் பற்றிய அறியாமையுமே இதற்கெல்லாம் காரணம்.

இரைச்சலின் தாக்கம் ஒரு தனி நபரின் விருப்பு வெறுப்புகளையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் பொறுத்தது. ஒருவர் வேறொன்றில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும்போது அவருடைய முதுகுக்குப் பின்னால் 'டமார்' என்று ஒரு பேரொலி எழுமானால் அவருக்குத் தூக்கி வாரிப் போடும். இதயம் படபடக்கும். அட்ரீனலீன் சுரப்பும், ரத்த அழுத்தமும், உடல் வெப்ப நிலையும் வேகமாக உயரும். திடீரென்று எழும் ஒரு பேரொலி அபாயத்தின் அறிகுறி என்பது பல கோடி ஆண்டுகளுக்கு முன்பே உயிரினங்களின் உள்ளுணர்வில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சட்டென எழுந்து ஓடவோ எதிரியைத் திருப்பித் தாக்கவோ மேற்கண்ட உடலியல் செயல்பாடுகள் உதவும். அவை தன்னிச்சையாகவே நிகழ்பவை. அவை மறைந்து உடல் இயல்பு நிலைக்குத் திரும்பப் பல நிமிடங்கள் ஆகும். ஆனால் அதே ஒலி திரும்பத் திரும்ப எழுமாயின் அது உடலுக்குப் பழக்கப்பட்டு விடும். பாதக விளைவுகள் ஏற்படாது. விமானப் பயணத்துக்குப் பயப்படுகிறவர்களுக்கு விமானங்களின் ஓசை தீய விளைவுகளை ஏற்படுத்துவதாக உளவியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

வெவ்வேறு நபர்களுக்கு இரைச்சலால் ஏற்படும் விளைவுகளின் அளவு வெவ்வேறாக உள்ளது. எனவே ஒரு சராசரி நபர் தாங்கக் கூடிய, அவருக்குத் தீங்கு விளைவிக்காத இரைச்சலின் அளவை வரையறுக்க முடியவில்லை. எனினும் சில குறிப்பிட்ட விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய அளவுகள் கணக்கிடப்பட்டுள்ளன. ஒலியின் செறிவு, அதன் ஆற்றல் உள்ளடக்கத்தின் அடிப்படையில்பெல், டெசிபெல் ஆகிய அலகுகளில் குறிப்பிடப்படுகிறது.

சாதாரணமாக 50 டெசிபல் வரை செறிவுள்ள ஒலி, தீங்கு செய்யாதது என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இன்று பெருநகரங்களில் சராசரியாக நூறு டெசிபல் வரை இரைச்சலின் அளவு உள்ளது. ஐந்தாண்டுகளில் மொத்த சனத் தொகையில் 20 சதவீதத்தினருக்கு, தாற்காலிகமான அல்லது நிரந்தரமான செவிட்டுத் தன்மையை அதிக அளவிலான இந்த இரைச்சலால் உண்டாக்க முடியும். சூழலில் இரைச்சல் அதிகமாயிருக்கும் போது ஒருவரோடு ஒருவர் இரைந்து உரத்த குரலில் பேச வேண்டியிருக்கிறது. இதன் காரணமாகக் குரல் நாண்கள் விரைவாகக் களைப்படைகின்றன. நாளடைவில் அவை சேதமடைந்து தொண்டைப் புற்று நோய்ஏற்படவும்வாய்ப்புஏற்படுகிறது.

### எரிச்சல் ஊட்டும்ஒலிகள்

அவசியப் பணிகளுக்கு இடையூறு செய்கின்ற எந்த ஒலியும் எரிச்சலை ஊட்டும். மனநிலையைப் பாதிக்கும். ஒரு குறிப்பிட்ட அதிர் வெண்ணுள்ள உரத்த ஒலியை நீண்ட நேரத்துக்கும், அளவுக்கு அதிகமாகவும் கேட்க நேரிட்டால் சில நாள்களுக்குப் பிறகு காது அந்தக் குறிப்பிட்ட அதிர்வெண் ஒலியைக் கேட்கும் திறனை இழந்து விடும். இது காதைப் பாதுகாக்க உடல் மேற்கொள்கிற ஒரு தற்காலிக நடவடிக்கைதான். சில நாள்கள் அமைதியான சூழலில் வசித்தால் காது இயல்பு நிலைக்கு மீண்டு விடும். அவ்வாறு செய்யத் தவறினால் நிரந்தரமான செவிட்டுத் தன்மை ஏற்படும்.

எலிகளைப் பெரும் இரைச்சலுள்ள சூழலில் வைத்தால் அவற்றின் வாழ்நாளும் ஆண்மையும் இனப் பெருக்கத் திறனும் குறைந்து விடுவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. இரைச்சல் மிக்க சூழலில் ஒருவர் தூங்கப் பழகி விட்டால், அதனால் அவருக்கு முழுமையான ஓய்வும் இறுக்கத் தளர்வும் கிடைக்காது. மூளைக்கு ஓய்வு கிடைக்காமல் அது விரைவாகக் களைத்து விடும். அமைதியான குடியிருப்புகளே மனிதனின் நலவாழ்வுக்கு உகந்தவை. வீடுகளுக்குள் ஓசை நுழையாமல் தடுப்பது என்பது சாத்தியமல்ல. எனவே இரைச்சல் ஏற்படாமல் தடுப்பதே நல்லது. மரங்களை நிறைய வளர்த்து, இரைச்சலைக் குறைத்து, அமைதியான சூழலையுண்டாக்கி மக்களின் மன நலத்தையும் உடல்நலத்தையும் மேம்படுத்த உதவுவதே நாகரிக சமுதாயத்தின் கடமையாகும்.

# கல்வித் திட்டத்தில் மாற்றம் தேவை

க.கனகராஜா

ஆசிரியர் என்பதன் பொருள்குற்றங்களைக் களைபவராகவும், ஆசிக்கு உரியவராகவும் இருப்பவர் என்பதாகும். எந்த ஒரு மனிதரும் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு ஆசிரியரின் உதவி தேவைப்படுகின்றது.

ஆசிரியர், மாணவனுடனான உறவு நிலையில் சில வேளைகளில் நண்பராகவும், பெற்றோராகவும், நல்லதொரு வழிகாட்டியாகவும் இருக்கிறார். இதனால்தான் மாதா, பிதாவுக்கு அடுத்தபடியாக கடவுளுக்கு முதல் குருவை வழிபடல் வேண் டும் எனக் குறிப்பிடுகின்றனர்.

அன்றைய காலங்களில் குருகுலக் கல்வி முறையில் மாணவர்கள் கல்வி கற்றனர். அதன் பின்னர் கல்வி முறை வளர்ச்சியடைந்து பாடசாலைகள் நிறுவப்பட்டன.

பாடசாலைகளின் வளர்ச்சியால் அனைவருக்குமான கல்வியும், இலவசக் கல்வி, இலவசப் பாடநூல்கள் என்பவை வழங்கப்பட்டதோடு வறிய மாணவர்களுக்கான கல்வியும் இலகுவில் கிடைக்க அவர்களுக்கு இலவச மதிய உணவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாறு பாடசாலையின் வளர்ச்சி கல்வியில் பெரும் பங்காற்றிய அதே சமயத்தில் அங்கு குறைபாடுகளும் நிலவத் தொடங்கின. இதனால் தனியார் கல்வி நிலையங்கள் தோற்றம் பெறத் தொடங்கின. பாடசாலையை விட தனியார் கல்வி நிலையங்களின் வளர்ச்சி அதிவேகமாக இருந்தது.

இந்தத் தனியார் கல்வி நிலையங்கள், முதலில் நகரப் புறங்களில் பெருமளவில் தோற்றம் பெற்று தொடர்ந்து நாட்டின் அனைத்துப் பாகங் களிலும் வளர்ச்சி பெற்றன. இதிலும் கல்வியில் போட்டி நிலை அதிகரிக்க, விசேட தேவைக்காக ஒவ்வொரு பாடத்திலும் பிரத்தியோகமான ஆசிரியர்களை அதிகளவான பணத்தைக் கொடுத்து தமது பிள்ளைகளுக்கு கல்வி புகட்ட பெற்றோர் அமர்த்தினர்.

முன்னைய காலங்களில் ஆசிரியரைத்தேடி மாணவர்கள் சென்றனர். ஆனால் இன்றைய காலத்தில் சில ஆசிரியர்கள் மாணவர்களைத் தேடிச் செல்கின்றனர். இந்தச் செயற்பாடு வட மாகாணத்தில் யாழ். மாவட்டத்திலும், வவுனியாவின் நகரப் புறங்களிலும் இருந்தன. ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு போன்ற கல்வி வலயங்களில் தனியார் கல்வி நிலையங்களின் வளர்ச்சி குறைவாகவே இருந் தது.

ஆனால் போர்க்கால சூழ்நிலையின் பின்னர் மீண்டும் குடியமர்ந்தவர்கள் தமது பிள்ளைகளின் கல்வி நிலை உயர்வடைய வேண்டும் என எண்ணினர். இதனால் பாடசாலைக்கு மேலதிகமாக தனியார் கல்வி நிலையங்களும் வன் னிப் பகுதியில் தோற்றம் பெற்றன.

ஆனால் வன்னிப் பகுதியில் கற்பிக்கும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு அந்தப் பகுதி பெற்றோர் நல்ல மரியாதையையும், அன்பையும் அள்ளி வழங்கினர். ஏனென்றால் வெளி மாவட்ட ஆசிரியர்கள் இரவு பகலாக நேரகாலம் பார்க்காது தமது சேவையை வழங்கியிருந்தனர்.

தற்போது இந்த நிலை வன்னிப் பகுதியில் கேள்விக் குறி யாகவே இருக்கின்றது. இதற்குக் காரணம் அங்கு கடமைபுரியும் ஆசிரியர்கள் சிலர் கல்வியை வியா பாரமாக ஆக்குவதே என அந்தப் பகுதி பெற்றோர் தெரிவிக்கின்றனர். ஏனென்றால் சில ஆசிரியர்கள் தமது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களை பாடசாலை முடிந்த பின்னர் தனியார் கல்வி நிலையங்களுக்கு அழைத்துக் கற்பிக்கின்றனர். இதற்கு மேலாக வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் கற்பிக்கும் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்குரிய சில ஆசிரியர்கள் வவுனியா நகர்ப்புறத்திலுள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு மேலதிக வகுப்புக்காக அழைக்கின்றனர். இதனால் ஒரு தடவை மாணவர் செல்வதற்கு பஸ் கட்டணமாக மட்டும் கணிசமான பணம் செலவாகின்றது. இதனை விட தனியார் கல்வி நிலை யத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.

நகர்ப்புறத்துக்கு அதிகளவு பணத்தை செலவழித்து அனுப்புகின்றோமே, அவர்கள் வேறு ஆசிரியர்களிடம் சென்று கல்வியைக் கற்றால், பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியருக்கு அது பிரச்சினையாக அமைகின்றது. இதனால் தமது பழிவாங்கல்களைப் பாடசாலையில் நிகழ்த்துகின்றனர். வன்னி மாவட்டங்களில் ஆசிரிய பற்றாக்குறை காணப்படுவதனால் இவ்வாறான ஆசிரியர்களோடு முரண்பாடுகளை வளர்ப்பதற்கு அந்தப் பகுதி சில அதிபர்களும் தயக்கம் காட்டுகின்றனர்.

இதைப் போல க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பரீட்சைக் காலங்களில் மேலதிக கருத்தரங்கு எனக் கூறி அதற்கும் சிலர் பணம் பறிக்கின்றனர்.

தமது பாடசாலையில் கற்பிக்க வேண்டிய பாடங்களை தனியார் கல்வி நிலையத்தில் கற்பித்து அரச சம்பளத்தையும், தனியார் கல்வி நிறுவன சம்பளத்தையும் இத்தகையோர் பெறுகின்றனர். அது மட்டுமன்றி தன்னை நம்பி வந்த மாணவர்களுக்கு பரீட்சையில் சித்தியடைவதற்கு மேல திக கருத்தரங்கு எனக் குறிப்பிட்டு அந்தக் கருத்தரங்கையும் தாமே நடத்தி பணத்தைச் சம்பாதிக்கின் றனர். இவை எந்த வகையில் நியாயமாக அமையப் போகிறது?

இதனைவிட மாணவர்களிடம் விசாரித்தால் குறிப்பிட்ட ஆசிரியர்கள் பாடசாலையில் கற்பிப்பதை விட தனியார் கல்வி நிலையத்தில் மிகவும் ஆர்வத்துடனும், கவர்ச்சியாகவும், சுவாரஸ்யமாகவும் கற்பிப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான கல்வியை வியாபாரமாக்கும் சில ஆசிரியர்களால் சேவையை நோக்கமாகக் கொண்டு செயற்படும் ஏனைய ஆசிரியர்களுக்கே இழுக்கு ஏற்படுகின்றது.

வைத்தியர், கிராம அலுவலர், பொலிஸ், இராணுவம், தீயணைப்பு, போன்ற தொழில்களை விடவும் போன்று ஆசிரி யத் தொழிலும் புனிதத் தன்மையானது. ஆசிரியத்துவத்தை நேசிப்பவர்களுக்கே அது புரியும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னராவது பாடசாலைக் கல்வித் திட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைந்தது பாடசாலை மாணவர்களிடம் பணம் பெறாமல் கற்பிக்க வேண்டும் என்ற சட்டத்தை நிறுவ வேண்டும்.

இதில் குறிப்பாக வன் னிப் பகுதியில் கிளிநொச்சி, முல் லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு போன்ற பகுதிகளின் கல்வி நிலையில் அக்கறை செலுத்துவதன் மூலம் வட மாகாணத்தின் ஒட்டுமொத்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதாக அமையும்.

## வேம்பொடுகேணி சீ.சீ.த.க.வுக்கும் மாடிக் கட்டடம்

பளை, நவ.7

வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலைக்கு 21 மில்லியன் ரூபா செலவில் வகுப்பறைத் தொகுதி மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனம் இந்தக் கட்டடத்தை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

கடந்த வருடம் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட குறித்த பகுதியில் சுவிஸ் நிறுவனம் குடியிருப்புக்களை அமைக்க முன்வந்திருந்தது. இதன்போது பாடசாலை நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டதையடுத்து பாடசாலைக் கட்டடத்துக்கென நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தீபாவளி கொண்டாட்டத்தில் கமரூன் தம்பதியர்





கொழும்பு, நவ.7

பிரிட்டனிலுள்ள சுவாமி நாராயணன் ஆலயத்தில் இடம்பெற்ற தீபாவளிப் பண்டிகையில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும், அவரது மனைவி சமந்தாவும் பங்கேற்றுள்ளனர். வடமேற்கு லண்டனிலுள்ள சுவாமி நாராயணன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட்டது.

இதில் சமந்தா தமிழர் பண்பாட்டின் பிரகாரம் சேலை அணிந்து வந்தமை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. எனினும் கமரூன் தனது வழமையான ஆங்கிலேயப் பாணியில் ஆடை அணிந்திருந்தார். இந்து பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம் அவர்கள் இருவரும் பாதணிகளை ,வெளியே கழற்றிவிட்டே ஆலயத்தினுள் பிரவேசித்தனர். (ஒ-5)

## பராமரிப்பு நிலையம் அமைக்க 6 மில்லியன் நிதி உதவி

கிளிநொச்சி, நவ.7

சமூக பராமரிப்பு நிலையம் இல்லாத கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் குறித்த நிலையங்களை அமைக்க 6 மில்லியன் ரூபாவை மாகாண சமூக சேவைகள் அமைச்சுக்கு யுனிசெவ் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்த நிதியில் கரைச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் ஒவ்வொரு சமூக பராமரிப்புநிலையங்களை அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட நிதியும் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் பிரிவு அலுவலகக் கட்டட வேலையைப் பூர்த்தி செய்வதற்கான நிதியும் (தலா 2 மில்லியன் ரூபா) வழங்கப்பட்டுள்ளன. (வ-9)

## கைத்தொலைபேசி, பணத்தைப் பறித்த வழிப்பறியர்கள்

வடமராட்சி, நவ.7

மாணவனொருவன் வசம் இருந்த 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியையும், 150 ரூபா பணத்தையும் வழிப்பறிக்காரர்கள் மூவர் பறித்துச் சென்றுள்ளனர்.

மந்திகை-கொடிகாமம் வீதியில் புலோலி மெ.மி.த.க. பாடசாலைக்கு அருகில் கடந்த சனிக்கிழமை இரவு 7.10 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கைத்தொலைபேசியையும், பணத்தையும் பறிகொடுத்த கொடிகாமம் வீதியைச் சேர்ந்த குறித்த மாணவன் பருத்தித்துறை பொலிஸில் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்துள்ளார். (ஜ-8)

# வேதன அதிகரிப்புக் கேட்டவருக்கு விழுந்தது தலையில் 'சோடாப் போத்தல் அடி'

அளவெட்டி, நவ. 7

உணவுக் கடை ஒன்றில் வேலை செய்கின்ற ஒருவர் கடை உரிமையாளரினால் சோடாப் போத்தலால் தாக்குதலுக்கு உள்ளாகி தலையில் காயமடைந்த நிலையில் யாழ்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

தீபாவளி தினத்தன்று காலை 8 மணிக்கு மல்லாகம் சந்தியில் உள்ள உணவுக் கடை ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தையா தர்மராசா (வயது-59) என்பவரே தலையில் காயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-


உணவுக் கடையின் உரிமையாளரான பெண்மணியிடம் இவர் தனக்கு சம்பளம் போதாதெனவும் சம்பளத்தை அதிகரித்து தருமாறும் பல நாள்கள் கோரி வந்துள்ளார்.

கடை உரிமையாளர் அதற்கு மறுத்து வந்துள்ளார். இதனால் சம்பவம் இடம்பெற்ற அன்றைய தினம் வேலையைச் செய்யுமாறு உரிமையாளர் பணிக்க சம்பளத்தைக் கூட்டித் தந்தால் தான் வேலையைச் செய்வேன் என்று இவர் மறுத்துள்ளார். இதன் போது இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் முற்றி ஆத்திரமடைந்த உரிமையாளரான பெண்மணி இவரின் தலைமீது சோடாப் போத்தலால் தாக்கியுள்ளார். இதனால் தலையில் காயமடைந்த நிலையில் பணியாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (எ-36)

தருவது வித்தியா

# இன்றைய நாள்


### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உங்களை அறியாமலேயே ஒரு வித படபடப்பு, தாழ்வுமனப்பான்மை ஏற்படும். தன்னம்பிக்கை குறையும். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் அதை வேறு விதமாகப் புரிந்து கொள்வார்கள். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள்.



**இடபம்:** பிரார்த்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.



**மிதுனம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி கிடைக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.



**கடகம் :** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.




**சிங்கம்:** ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.




**கன்னி:** கடன் பிரச்சினைகள் தீரும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்

**நாளை**


ஐப்பசி-22 வெள்ளிக்கிழமை 08.11.2013
திதி: பஞ்சமி காலை.09.09 வரை
நட்சத்திரம்: பூராடம் மா.5.40 வரை
சுபநேரம்: 6.05 - 7.35 வரை
இராகுகாலம்: 10.35 - 12.05 வரை




**துலாம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.



**விருச்சிகம்:** சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம்.



**தனுசு:** ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்கள் வந்து நீங்கும்.



**மகரம்:** நீண்ட நாளாக தள்ளிப்போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.



**கும்பம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைபட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.



**மீனம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்பு வட்டாரம் விரிவடையும். அரசுக் காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 3 | | | | 2 | |
| 9 | | | | 7 | | 1 | | |
| 2 | | 1 | 6 | | 8 | | 7 | |
| | | 7 | 5 | 6 | 2 | | 1 | 8 |
| | 5 | | | | | | 4 | |
| 1 | 8 | | 7 | 4 | 3 | 9 | | |
| | 6 | | 1 | | 9 | 8 | | 2 |
| | | 3 | | 5 | | | | 1 |
| | 1 | | | | 6 | | | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 8 | 3 | 1 | 5 | 4 | 2 | 9 |
| 9 | 3 | 5 | 2 | 7 | 4 | 1 | 8 | 6 |
| 2 | 4 | 1 | 6 | 9 | 8 | 5 | 7 | 3 |
| 4 | 9 | 7 | 5 | 6 | 2 | 3 | 1 | 8 |
| 3 | 5 | 6 | 9 | 8 | 1 | 2 | 4 | 7 |
| 1 | 8 | 2 | 7 | 4 | 3 | 9 | 6 | 5 |
| 7 | 6 | 4 | 1 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 8 | 2 | 3 | 4 | 5 | 7 | 6 | 9 | 1 |
| 5 | 1 | 9 | 8 | 2 | 6 | 7 | 3 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனை நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## முகப்புத்தகப் பாவனை
# தீமையே தரும்



21ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து நடைபயின்று கொண்டிருக்கும் நாம் நவீன விஞ்ஞான உலகில் நொடிக்கு நொடி மாறும் வளர்ச்சி போக்குடன் இணைந்து சென்று கொண்டிருக்கின்றோம். இதனால் நன்மை களை நாம் அனு பவித்தா லும் தீமைகளையும் தேடிக் கொள்கின்றோம். இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக பேஸ்புக் அமைகின்றது.


தனிப்பட்ட தகவல்களுடன் தொடங்கி புகைப்படங்கள், வீடியோ என பலவிதமான விவரங்களை உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ள உதவியாக இருந்தது. பேஸ்புக் இதனை பகிர்வதற்குப் பொதுவான கட்டுப்பாடுகள் இருக்கின்ற வேளையிலும் துவேசத்தை தூண்டும் தகவல்கள், ஆபாசக் காட்சிகள் மற்றும் வன்முறையைத் தூண்டும் வகையிலான தகவல்களும் தற்போது பகிரப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

இதற்குச் சிறந்தொரு எடுத்துக்காட்டாக "அண்மையில் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்றைக் குறிப்பிடலாம். மெக்சிக்கோ நாட்டில் எடுக்கப்பட்டதாகக் கருதப்படும் வீடியோவில், முகமூடி மனிதர் ஒருவர் ஒரு பெண்ணின் தலையை கொய்வது போன்றகாட்சி "உங்களில் எவரால் இந்த வீடியோவைப் பார்க்க முடியும்?" என்ற தலைப்பில் வெளி யானமை பலரை உள ரீதியாக தாக்கியுள்ளது. இதற்கு பேஸ்புக் தரப்பின் கருத்தாக மனித உரிமை மீறல், தீவிர வாத செயல்களைக் கண்டிக் கும் முகமாகவே உறுப்பி னர்கள் இதனைப் பகிர்ந்து கொள்கின்றார்கள் என்று கூறப்பட்டாலும், இதன் பாதிப்பு முழுவதும் எம்மையே வந்தடைகின் றது என்பதை மறந்து விட்டார்களா?

இதனால் எத்தனையோ மாணவர்கள் தமது படிப்பில் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு அதிக நேரத்தை பேஸ்புக்கோடு கழிப்பதை நாம் அறிவோம். இறுதியில் தம்மையே மாய்த்துக் கொள்வதையும் அறிந் திருக்கின்றோம். இதற்கு ஓர் உண்மை சம்பவத்தை உதாரணமாகக் குறிப்பிடலாம். மகா ராஷ்டிரா மாநிலத்தில்கல் லூரிமாணவி ஒருவரின் செயற்பாட்டைக் கண்டித்த பெற்றோரின் தண்டிப்பைத் தாங்க இயலாமல் "பேஸ்புக் இல் லாமல் என்னால் வாழவே முடியாது" என்று கடிதம் எழுதி வைத்து விட்டு அந்த மாணவி தற்கொலை செய்து கொண்டமை இந்தப் பேஸ்புக்கின் பின்விளைவை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறான முறையற்ற பயன்பாட்டினால் சமூ கம் சீர்கெட்டு போவதோடு அதன் பிரதிபலிப்பாக கலா சாரமும் சீர்குலைந்து போவதை நாம் காண்கின் றோம். ஒட்டு மொத்தமாக இவற்றை எடுத்துக் கொண் டால் பேஸ்புக்கினால் தீமையே கிடைக்கின் றது என்பது தெட் டத் தெளிவாக புலனாகின்றது.

*ஜெனிற்றா,*
*சாவகச்சேரி.*



## வேகம் கூடிய 'ரோபோ'

தற்போது பயன்பாட்டிலுள்ள ரோபோக்களிலே மிகவும் வேகம் கூடிய ரோபோ ஜப்பானின் ரோக்கியோ பல்கலைக்கழகத்தில் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்த ரோபோ மனிதனின் கைவிரல் அசைவுகளைப் புரிந்துகொண்டு 100 வீத வேகத்தில் தொழிற்படுவதுடன் 20 மில்லி செக்கன்களில் விரல் அமைப் புக்களை மாற்றியமைக்கும் திறமை கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.



## பிரியாத வரம்

மூன்றெழுத்தில் பிறந்த
நம் உறவுகள்
பல தரப்பட்டவை- அதில்
துன்பங்களை கண்டு
துவண்டு விழும் போது
கைகொடுக்கும்
உன்னத உறவே- நட்பு
வெற்றியில் ஏணியாய்
தோல்வியில் தோளாய்
தாங்கும் இந்த நட்பு
என் வாழ்வில் கிடைத்த
அளப்பரிய வரம்

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.


பெயர் :-......................................................

முகவரி :-....................................................

..............................................................

.................... திகதி     .................... கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

முகப்புத்தகப் (பேஸ்புக்) பாவனை

**நன்மையா?**
**தீமையா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## தாயின் அன்பு....

தாய் போன்ற தெய்வம் இல்லை
அவள் இல்லை என்றால்
யாரும் இல்லை
பாசமுடன் எமை வளர்த்து
பாரினிலே எமை
வாழவைத்து
அன்பு மொழி நவின்ற தாயே
நீ நீடூழி வாழியவே

பாசமுடன் நீர் ஊட்டிய
பாற்சோற்றை மறவோமே
எமக்காக நீ பட்ட
துயரத்தை மறவோமே
விழி போன்று எமக்கு
ஒளி தந்து காத்தாயே
மரத்துக்கு பல கிளைகள்
தாய்க்கோ
இரு கைகளாம்
அந்தக் கைகளால் நீ
எமைத் தாங்கி நின்றாயே
வாழும் வரை
உன்னை மறவோம்
என்றுமே...

*அ.தனுஷன், பண்டத்தரிப்பு.*



# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் பொலிஸார்

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இன்று முதல் நடவடிக்கை

முல்லைத்தீவு, நவ.7
கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கைகள் இன்று தொடக்கம் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.என்.பி. பண்டார தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பெருமளவு கால்நடைகள் எதுவித கட்டுப்பாடுமின்றி அலைந்து திரிவதால் இங்குள்ள விவசாயிகள் பெரும் பயிர் அழிவுகளை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ள நிலையில் கால்நடைகளின் உரிமையாளர்கள் அவற்றைப்பட்டியில் அடைத்து வளர்ப்பது அவசியமாகும்.

கடந்த காலங்களிலும் இத்தகைய கால்நடைகளினால் விவசாயிகளால் பயிரிடப்பட்ட பயிர்களுக்குப்பெரும் அழிவுகள் ஏற்பட்டன. இதுதொடர்பாக இங்கு நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டங்களில் எடுத் துக் கூறப்பட்ட போதிலும் கால்நடை வளர்ப்பாளர்கள் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குத் தவறியுள்ளனர்.

மேலும் பொது இடங்களிலும் இந்தக் கால்நடைகள் தங்குவதால் பல்வேறு பாதிப்புக்கள் தோன்றியுள்ளன.

இவை தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்துக்கும் பாதிக்கப்படுபவர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இன்று தொடக்கம் ஒட்டுசுட்டான் பொலிஸார் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளைப் பிடிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்என்றுமேலும் அவர் தெரிவித்தார்.

(க-500)


WFP World Food Programme wfp.org

**ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம்**
**விநியோகஸ்தர்கள்/சேவை வழங்குநர்களின் வருடாந்த பதிவுக்கான அழைப்பு**

உலகின் மிக வறிய நாடுகளில் குறைந்தது 80 நாடுகளிலேனும் உள்ள பசியால் வாடும் சுமார் 58 மில்லியன் சிறுவர்கள் உட்பட ஏறத்தாழ 97 மில்லியன் மக்கள் அவர்களது போஷாக்குத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள உணவு உதவிகளை வழங்கி வரும் உலகின் மிகப்பெரும் மனிதநேய அமைப்பு உலக உணவுத் திட்டமாகும். இலங்கையில் சேவையாற்றும் இவ்வமைப்பு 1968ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து அபிவிருத்தி உதவிகளையும் சுனாமி, யுத்தம் உட்பட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவரசகால உதவிகளையும் வழங்கி வருகின்றது.

பொதுவான பெறுகைத் தேவைக்கு அமைய ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம்-இலங்கை அதன் திட்ட அமுலாக்கல் நடவடிக் கைகளில் எதிர்கால சேவை வழங்கல் தேவைகளுக்கு ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்ட வணிக தரவுத் தளத்தில் பதிவு செய்து கொள்வதற்காக விநியோகஸ்தர்கள்/சேவை வழங்குநர்களிடமிருந்து பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறது.

பின்வரும் துறைகளில் அக்கறையுள்ளவர்களாகவும் கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பொருள்களையும் சேவைகளையும் வழங்கக்கூடியவர்களாகவும் உள்ள ஸ்தாபனங்கள்/தனிப்பட்டவர்கள்/கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. உணவுப் பொருள்கள் வழங்குநர்கள்: அரிசி, பருப்பு வகைகள், மரக்கறி எண்ணெய்
2. வாகன சேவை, பராமரிப்பு
3. குடிதண்ணீர் வழங்குநர்கள்
4. வளிச் சீராக்கி(Air Condition) சேவையும் பராமரிப்பும்
5. பூச்சிக் கட்டுப்பாடு /அலுவலக புகையூட்டி கிருமி ஒழிப்பு சேவை
6. தீயணைப்பு உபகரண சேவை
7. அச்சிடும் சேவைகள்
8. காகிதாதிகள் வழங்குநர்கள்
9. சிவில், கட்டட நிர்மாண வேலைகள்
10. பாதுகாப்பு சேவைகள்
11. சுத்திகரித்தல், தாதுவர் சேவை
12. போக்குவரத்து, பண்டமேற்றல் சேவைகள் - பொருள்கள், பிரயாணிகள்
13. எரிபொருள் வழங்குநர்கள்
14. விவசாய, கட்டட நிர்மாண பொருள்கள் வழங்குநர்கள்

பதிவு செய்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களையும் ஏனைய விவரங்களையும் பெறுகைப் பிரிவு, ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம், இல.02, ஜாவத்தை அவெனியு, கொழும்பு 05 என்ற முகவரியிலிருந்து அல்லது SRILANKA. PROCUREMENT @WFP.ORG உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். விளக்கங்கள் தேவைப்படும் கம்பனிகள்/சேவை வழங்குநர்கள் 0112555520 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஐக்கியநாடுகள் உலக உணவுத் திட்ட பெறுகைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பங்களை ஆங்கில மொழியில் நேரில் அல்லது தபால் மூலம் ஐக்கியநாடுகள் உலக உணவுத் திட்டம், இல.02, ஜாவத்தை அவெனியு, கொழும்பு 05 என்ற அலுவலக முகவரியில் 30-11-2013இற்குப் பிந்தாமல் சேர்க்க வேண்டும்.

எந்தவொரு விண்ணப்பங்களையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ, பாதிக்கப்படும் கம்பனிகள் அல்லது/சேவை வழங்குநர்களுக்கு எதுவித பொறுப்புக் கூறலும் இன்றி தேர்வு நடைமுறைகளை செல்லுபடியற்றதாக்கவோ ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம் உரிமையைக் கொண்டுள்ளது.

(க/13559)(5.6)


# தேசத்தின் முன்மாதிரி எங்கள் முதியோரே

## யாழ்.ஆயர் கருத்து

கொழும்புத்துறை, நவ.7
முதியோர் எம் தேசத்தின் முன்மாதிரிகள். அவர்களது ஆற்றல்கள், அனுபவங்கள், திறன்கள் தான் எமது தேசத்தின் முதுசமாகும். முதுமை என்பது தனிமையல்ல, எமது குடும்ப உறவுகளுடன் ஆன்மிக வழிகாட்டிகளாகவும், முன்மாதிரியுள்ளோராகவும் வாழ்ந்துகாட்ட வேண்டியவர்களே இவர்கள்- இவ்வாறு கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தினால் அகவொளி மண்டபத்தில் நடத்தப்பட்ட முதியோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

கியூடெக் இயக்குநர் அருட்திரு பேணாட் றெக்னோ அடிகள் தலைமையில் நடைபெற்ற விழாவில் ஆயர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று பல்வேறு இடங்களில் இருந்தும் 200க்கும் மேற்பட்ட முதியோர் இங்கு ஒன்று கூடியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. எமது சமூகத்தில் முன்மாதிரியாக வாழ்ந்து வருபவர்களை கியூடெக் நிறுவனம் வருடாவருடம் கௌரவித்து விழா எடுத்துஅவர்களைஉற்சாகப்படுத்தி வருவது பாராட்டத்தக்கது - என்றார். (ந-135)


Hatton National Bank

**அடகுப் பொருள்கள்**
**ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி கொடிகாமம்,வேலணை, மானிப்பாய், கிளிநொச்சி வடக்கு,முல்லைத்தீவு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, திருநெல்வேலி ஆகிய கிளைகளில் 15.10.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இது வரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 10.11.2013 தொடக்கம் 20.11.2013 (ஞாயிறு-புதன்) வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 7.00 வரை இல.212,214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ் கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத் தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

**ஹற்றன் நஷனல் வங்கி.**


# முன்பள்ளி சிறாருக்கான வாசிப்பு மாத போட்டிகள்

தென்மராட்சி, நவ.7
சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூலக



எல்லைக்குட்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கான சிறப்பு நிகழ்வுகளை நடத்தவுள்ளனர்.

"அறிவால் நிரம்பிய சமுதாயம் ஒன்றை உருவாக்குவோம்" என்னும் கருப்பொருளிலான சிறப்பு நிகழ்வுகள் நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு நூலக மண்டபத்தில்இடம் பெறவுள்ளது. நகரசபை தலைவர் இ.தேவசகாயம் பிள்ளையின் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு விருந்தினர்களாக நகரசபை உறுப்பினர்களான க.மயில்வாகனம், த.சுதர்சன், ந.திருக்குமரன், நகரசபை செயலாளர் கா.சண்முகதாசன், உள்ளூராட்சி திணைக்கள சனசமூக, அபிவிருத்தி அலுவலர் த.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

முன்பள்ளி சிறார்களுக்கிடையிலான கதை சொல்லும் நேரம், வர்ணம் தீட்டல், சொல் எழுத்துரு, இலக்கம் சேர்த்தல் ஆகிய போட்டிகள் இடம்பெறும்.

போட்டிகளில் வெற்றி பெறும் சிறார்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

(வ-9)


**கோழிக்குஞ்சுகள் விற்பனை**
தடுப்பூசி ஏற்றப்பட்ட ஒருநாள் நல்லின ஊர்க் கோழிக் குஞ்சுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே: 021 7200616
(29092)(2.4)

**TVகள் மலிவு விற்பனை**
எங்குமே கிடைக்காத மலிவு விலையில்
SONY Wega TVகள் 21"-14500/=
Sony, Panasonic 29"-16000/= DVD-3000/=
Box, அம்பிளிபயர் என்பன
தொ.பே: 077 044 0570
ரோஷி ரேடியோ சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
(39775)(7.6.3)

**வாழ்த்துகின்றோம்**




யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய
அதிபர் **ச.வாமதேவன்**
அவர்கள் அண்மையில் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட "பிரதீபா பிரபா" விருதினைப்பெற்றுக் கொண்டமைக்காக அவரை வாழ்த்துகிறோம். அவர் மேலும் பல விருதுகளை பெற நயினை நாகபூசணி அம்மனை வேண்டுகிறோம்.
வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/கோண்டாவில் கைலாசநாத
வேத சிவாகம அறநெறிப் பாடசாலை



அருள்மிகு
புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று
**சங்கரமூர்த்தி முருகமூர்த்தி வேல் தேவஸ்தானம்**



உலக இந்து மக்களின் முருகப் பெருமானின் விரதங்களில் ஒன்றான
கந்தசஷ்டி விரதம் 04.11.2013 தொடக்கம் 08.11.2013 வரை
நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில்
புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
செல்லையா தில்லைநாதன்
(சமாதான நீதிவான், நீர்கொழும்பு சைவத்திருமுறை அடியார் சங்கமத்தின் மூத்த உறுப்பினர்) குடும்பத்தினர் இந்த ஆலயத்திற்கு இந்த வருடம் தங்கள் உபயதினமான நாளை(08.11.2013) வெள்ளிக்கிழமை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சூரனை வழங்கவுள்ளார்கள்.
அதனையொட்டி அன்றைய தினம் பி.ப.4.00மணியளவில் சூரசங்காரம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அத்தினத்தில் அனைவரும் திரண்டு வந்து முருகவேலனின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக்கொள்கிறோம்.
ஆலய நிர்வாக சபையினர்,
புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று சங்கரமூர்த்தி, முருகமூர்த்தி வேல் தேவஸ்தானம்.
(C/13075)(12,6,3)

# யா/புனித ஜோண் பொஸ்கோவின்
# சாதனையாளர்களே!
# வாழ்க நீவீர்!!




2013 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் தமிழ் மொழிமூலப் பரீட்சையில் 190 புள்ளிகளை இரு மாணவர்கள் பெற்று மாகாண மட்டத்தில் நான்காம் இடத்தினை புனித ஜோண் பொஸ்கோ தனதாக்கிக் கொண்டதோடு அதிகூடிய எண்ணிக்கையான மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்ததையிட்டு அவர்களை மனமகிழ்வோடு பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் மாவட்ட நிலையில் 50.48% மாணவர்களைச் சித்தியடையச் செய்து முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது

**யா/ புனித ஜோண் பொஸ்கோ**

70 புள்ளிகளுக்கு மேல் 100% மாணவர்கள் சித்தியடைந்து அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெறச் செய்த இந்தப் பாடசாலையின் சிறந்த நிர்வாகத் திறமையுள்ள அதிபரின் வழிகாட்டலுடன் ஆசிரியர்களின் சிறந்த கற்பித்தலின் கீழ் மாணவர்கள் வழி நடத்தப்பட்டு இப்பாடசாலைக்கும், பாடசாலைச் சமூகத்துக்கும் மிகப் பெரிய வெற்றியை ஈட்டித் தந்துள்ளனர். கல்வி கற்பது மட்டுமன்றி பாடசாலையின் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்க வழிகாட்டப்பட்டு இந்நிலைக்கு உயர்த்திய **அதிபர். ஆசிரியர்கள். பாடசாலைச்சமூகத்தினரும்** பெருமையடைந்து நிற்கின்றனர்.

இப் பாடசாலையின் மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களும் மேன்மேலும் சகல சிறப்புகளையும் பெற்று இறை ஆசியுடன் வாழ உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

(39778)(2.6)

—வாழ்த்துவோர்:—

– பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள்.

சட்டமேதை

ஜீ.ஜீ.பொன்னம்பலம் (Q.C) அவர்களது

# 112 ஆவது பிறந்ததின நிகழ்வுகள்

தமிழர் தம் மாபெரும் தலைவர்

சட்டமேதை,

இராணி வழக்கறிஞர்

## ஜீ.ஜீ.பொன்னம்பலம்

(அமரர்)



அவர்களது 112ஆவது பிறந்த தினமாகிய நாளை (08.11.2013) வெள்ளிக்கிழமை குருநகரில் அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளன.

அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(அ/13573) (7.6.3)

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி**
நாடாளுமன்ற உறுப்பினர்
முன்னாள் தலைவர், ஆதரவாளர்
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

# எட்டாவது ஆண்டு நினைவஞ்சலி

## பிலேந்திரன் ஜேம்ஸ்



தோற்றம் : 18*08*1936
மறைவு : 07*11*2005

அன்புள்ள அப்பாவே
நீங்கள் மறைந்து
எட்டாண்டுகள்
சென்றாலும்
உங்கள் அன்பை மறவாத

இல.11 A. சென். மேரிஸ்.
முதலாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06.01.1928 | மறைவு 20.10.2012

அமரர்

## வைத்திலிங்கம் சங்கரப்பிள்ளை

திதி:வளர்பிறை பஞ்சமி(07.11.2013)

ஆண்டு ஒன்று கடந்ததையா
உமது நினைவுகள்
எம்மை விட்டகலா
தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

(39744)(12.6.3)

# மரண அறிவித்தல்

## திருமதி ரஞ்சிதமலர் யூட் ஞானச்சந்திரன்



வடமராட்சி, வதிரி மாலுசந்தியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சிதமலர் யூட் ஞானச்சந்திரன் 05.11.2013 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் ஆசீர்வாதம் யூட் ஞானச்சந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நரசிங்கம் ஞானமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற ஆசீர்வாதம் -ஆன் நல்லம்மா தம்பதியரின் மருமகளும், இந்திராதேவி, விமலகுமாரி, ஞானேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சேனாதிராஜா, சாயிபவான், யூடி ஞானேந்திரன் எஸ்சர் சந்திரமலர் ஆகியோரின் மைத்துனியும், ஞானரெட்னத்தின் சகோதரியும், சேர்லி சோபியா, யூட் டில்சான் ஆகியோரின் சிறிய தாயும், றோசான், ஞானா, துசான், நிசான் கரித்திரா ஆகியோரின் பாசமிகு பெரியதாயும், மயூரி, காயத்திரி, கீர்த்தனா, நர்மதா, அர்சனா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

மாலுசந்தி, வதிரி,
கரவெட்டி.
T.P : 077 354 3507

(29596) (7.6)

தகவல்:
யூட் டில்சான்
(மகன்)

# கந்தசஷ்டியை முன்னிட்டு செல்வச்சந்நிதியில் பெருமளவு பக்தர்கள்

வடமராட்சி, நவ. 7

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயிலில் பெருந்திரளான பக்தர்கள் தங்கி நின்று கந்தசஷ்டி விரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

தினமும் மாலையில் இடம்பெறும் கந்தசஷ்டி பூசை வழிபாடுகளில் அவர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

எதிர்வரும் 9 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு சந்நிதிமுருகன் ஆலயத்தில் இடம் பெறும் பாறணைப் பூசை வழிபாட்டை மேற்கொண்டு பக்தர்கள் கந்தசஷ்டி விரதத் தைப் பூர்த்தி செய்யவுள்ளனர். (வ-8)

# கந்தசஷ்டி விரதகால சொற்பொழிவுகள்

உடுவில் பிரதேச இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கந்தசஷ்டி விரத காலத்தை முன்னிட்டு விசேட சொற்பொழிவுகளை நடத்தவுள்ளது.

உடுவில் பிரதேச இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்பனா சுதர்ஷன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று வியாழக்கிழமை பி.ப.4.30 மணிக்கு உடுவில் முருகமூர்த்தி ஆலயத்தில் இந்து தர்மாசிரியர் நித்திய தசீதரனின் "உதித்தனன் உலகம் உய்ய" என்ற தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை பி.ப.4.30 மணிக்கு "சூரசம்ஹாரம்" என்ற தலைப்பில் பி.பகீரதனின் சொற்பொழிவு ஊரெழு வேல் முருகன் ஆலயத்தில் நடைபெற வுள்ளது. (வ-10)

♦♦♦

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் கந்தசஷ்டி விரதகால விசேட சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை பி.ப.12.30 மணிக்கு ஸ்ரீ தெட்சணகைலாய சிவன் ஆலயத்தில் (மாகியப்பிட்டி சிவனாலயம்) நடைபெறவுள்ளது.

இந்துசமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கயிலநாயகி பரந்தாமன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் "கந்தன் கருணை" எனும் தலைப்பில் என்.பாபுதரன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (வ-10)

# நற்கருணை கண்காட்சி இன்று ஆரம்பம்

யாழ்.மறை மாவட்டத்தின் மறைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் நற்கருணைக் கண்காட்சி இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதான வீதியில் உள்ள மறைக்கல்வி நடுநிலை மண்டபத்தில் தினமும் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை திவ்விய நற்கருணைக் கண்காட்சி இடம்பெறும்.

கொழும்பு உயர் மறை மாவட்டத்தால் நற்கருணைப் பக்தியின் சிறப்பை வெளிப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட கண்காட்சி இன்று மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது. உலகளாவிய ரீதியில் இந்தத் திவ்விய நற்கருணையின் வல்லமையால் இடம்பெற்ற புதுமைகள் அடங்கிய படங்கள், ஆவணங்கள் மற்றும் உள்ளூர் ஆக்கங்கள் என்பன கண்காட்சியில் இடம்பெறவுள்ளதாக யாழ். மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்திரு. அகஸ்ரின் அடிகள் தெரிவித்தார். (வ-135)

## திருத்தி வாசிக்கவும்

### கிளமென்ற் மோசேஸ்

06.11.2013 ஆம் திகதி உதயன் பக்கம் 04இல் பிரசுரமான மேற்படி அறிவித்தலில் சுலக்ஷின், றொஜிஸ்ரன், றகேஷன், றியுமின் ஜொனிவி (A.O.G திருச்சபைப் போதகர்- உடுப்பிட்டி), யூடித் கஜானி ஆகியோரின் செல்லப் பூட்டன் என்பதை பாசமிகு பேரன் எனவும், நிஷ்வினின் செல்லப் பூட்டன் எனவும் திருத்தி வாசிக்கவும்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (06.11.2013) புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு வல்லை சேமக்காலையில் நடை பெற்றது.

தகவல்: குடும்பத்தினர்.
077 3990644

(சி/3870)(10.6)

# மரண அறிவித்தல்கள்

## வீரகத்தி நடராஜா



கோண்டாவில் வடக்கை பிறப்பிடமாகவும் நவரத்தினராஜா வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நடராஜா நேற்றுமுன்தினம் (05.11.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனியர்- இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பமலரின் பாசமிகு கணவரும், சுகந்தினி, மன்மதராஜா,. கிருஷ்ணராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவரத்தினராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு.

(39780) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பிளைஸ் மரியநாயகி



4ஆம் கட்டை, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிளைஸ் மரியநாயகி (ராசமலர்) நேற்று முன்தினம் (05.11.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அந்தோனி பிளைஸ் இன் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை-அன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான அந்தோனி-றெஜினா (தங்கக்குட்டி) தம்பதியினரின் பாசமிகு மருமகளும், லூத்தம்மா, காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் பிறேமா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குணசீலன் மற்றும் புஸ்பலீலா, காலஞ்சென்ற தேவகிருபை மற்றும் அல்பிறட் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெனி, றொகான், குயின் ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜி, விமல் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், பெகின், சுஜி, றதீஸ், றதனி ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜெனிஸ்ரன், ஆஷா, பிரவீன், தனு, சௌமியா, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.11.2013) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி வழிபாடுகளின் பின் புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(39774) (12.6.3)

தகவல்:
அ.பிளைஸ்(கணவர்),
பிள்ளைகள், மருமகன்.

## சோமசுந்தர ஐயர் பாலச்சந்திர ஐயர்

(முன்னாள் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியரும், யாழ் சுப்பிரமணியம் அன்சன்ஸ் உதவிக் கணக்காளரும்)



புன்னாலைக்கட்டுவன் ஆயாகடவை ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தான ஸ்தாபக வழித்தோன்றலும், வவுனியாவில் வசித்து வந்தவருமான சோமசுந்தர ஐயர் பாலச்சந்திர ஐயர் 05.11.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராஜலக்ஸ்மி அம்மாவின் அன்புக் கணவரும், குகாநந்தசர்மா, நடராஜா சர்மா, காலஞ்சென்ற பாலகிருஷ்ண சர்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரவி சந்திரஐயர் (கனடா), காலஞ்சென்ற சந்திர மௌலிசர்மா மற்றும் தேவகி, வசந்தி, சுமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்திமதி, கந்தசாமி குருக்கள் (ஸ்ரீசித்தி விநாயகர் கோயில் குடியிருப்பு, வவுனியா), கேசவசர்மா (ஸ்ரீ கந்தசாமி கோயில் வவுனியா), வாசுதேவசர்மா (ஹற்றன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனந்தினி, சாலினி, கணேசநாதசர்மா, கனகரூபசர்மா (மலேசியா), நிசாந்தசர்மா, நிவேதிகா, வஸ்சிகா, கணநாதசர்மா, நிர்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2013) வியாழக்கிழமை வவுனியா பூந்தோட்டம் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய அமைப்பு வீதி,
பூந்தோட்டம்,
வவுனியா.

(29839) (7.6)

தகவல்
குடும்பத்தினர்.
T.P : 024 224 8521
024 567 1390

## தவறிவிட்டது

யோகேஸ்வரன் விஜயகுமார், மே/பா சு.திருமலைசாமி சர்மா, பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் என்ற விலாசமிடப்பட்டவரின் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அனைத்தும் அடங்கிய கறுப்பு நிற தோல் பை ஒன்று யாழ். மாநகரசபைக்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டு எடுத்தால் மேற் குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.

யோ.விஜயகுமார்,
224/3, ஏ (A), பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இ. 077 3693986

(39788)(2.6)

இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல்,சளி,இளைப்பு மற்றும் நுரையீரல்,சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும்,கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்)


## றோட்டறிக்கழக ஒன்றுகூடல்

யாழ்.றோட்டறிக்கழகம் நடத்தும் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள உதயன் விடுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஒன்றுகூடலில் யாழ். றோட்டறிக் கழகங்களின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.றோட்டறிக்கழகத் தலைவர் திருமதி நீலா தர்மகுலசிங்கம் அறிவித்துள்ளார். (வ)

## அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை நல்லூர் உப அலுவலகம் ஆதனப் பெயர் மாற்றம்

ஆதன இலக்கம் 1,1/1,3, கலாசாலை வீதி வடக்கு முதலாம் ஒழுங்கை வட்டாரம்-06

நல்லூர் பிரதே சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் -06, கலாசாலை வீதி, வடக்கு முதலாம் ஒழுங்கையில் உள்ள 1,1/1,3 ஆம் இலக்க ஆதனங்கள் எமது ஆதனப் பதிவேட்டில் சொந்தக்காரர் உ.கோ.முத்துத்தம்பி வித்தியாசாலை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி ஆதனங்களை சைவ வித்தியா விருத்திச் சங்கம் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்கள். இந்த ஆதனங்கள் 01.07.2012ஆம் திகதிய 9018ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சார்பில் தற்போதைய தலைவர் சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன். செயலாளர் திருச்செல்வம் செல்வ மனோகரன் என்பவர்களால் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனங்கள் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ப.வசந்தகுமார்,
தலைவர், நல்லூர் பிரதேச சபை.
06.11.2013

(சி/13584)(5.6)

## மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு, கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு, கிழக்கு மாகாண கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின் படி யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08 ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என் மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 20-02 இற்கமைய சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்கான இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண்கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு(1/4) பங்கினர் அல்லது இருபத்தைந்து (25) பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது(9) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவ் ஒன்பது (9) உறுப்பினர்களுள் இருவர் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப் பெறும் முன்மொழிவுகள் ஒன்பது (9) பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்தப்படுவதுடன் சங்க செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

### கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

| தொ.இல | கிளை.இல | கிளை பெயர் | இடங்களின் விபரம் | திகதி | நேரம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 69 | மானிப்பாய் | மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்க தலைமை காரியாலயம் | 10.11.2013 | மு.ப 10.00 மணி | இ. விஜயமோகனராஜா |
| 2 | 70 | மடத்தடி | சிவசக்தி சனசமூக நிலையம் | 10.11.2013 | மு.ப 10.00 மணி | த. கன்னதாசன் |
| 3 | 71 | சீரணி | பாரதி சனசமூக நிலையம் | 10.11.2013 | மு.ப 10.00 மணி | கு. வின்சன் ஞானதயாளன் |
| 4 | 72 | மாகியப்பிட்டி | ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலையம் | 10.11.2013 | மு.ப 10.00 மணி | கு. சஜீவன் |
| 5 | 78 | நவாலி | மதியொளி சனசமூக நிலையம் | 10.11.2013 | மு.ப 10.00 மணி | தி. பிரதீப் |
| 6 | 79 | மில்லடி | மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்க தலைமை காரியாலயம் | 10.11.2013 | மு.ப 10.00 மணி | தா. தவமன்னன் |
| 7 | 80 | சுதுமலை | யுவசக்தி சனசமூக நிலையம் | 10.11.2013 | மு.ப 10.00 மணி | பா. சிவபாலன் |
| 8 | 81 | கூழாவடி | கிளை இல – 81 இற்கு அருகில் | 10.11.2013 | மு.ப 10.00 மணி | ச. சசீந்திரன் |
| 9 | 82 | ஆனைக்கோட்டை | ஆதவன் முன்பள்ளி மண்டபம் | 10.11.2013 | மு.ப 10.00 மணி | தி. வித்தககலாநிதி |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
பணிமனை,
857, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(ஒப்பம்) வி.கே.அருந்தவநாதன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.

**கீழ்க்குறிப்பிடப்படுவோர் கிளைக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படும் தகைமையற்றவராவர்.**

01) கிளையின் தகைமை பெற்ற உறுப்பினர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
02) பதினெட்டு (18) வயதுக்குக் குறைந்தவர்.
03) உடன் முன் சென்ற மூன்று ஆண்டுகளுக்குள் ஒழுக்க சீர்கேடு சம்பந்தமான குற்றச்சாட்டில் குற்றவாளியாக்கப்பட்டவர், அல்லது அதற்கு மேற்பட்ட மாத காலத்தில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்.
04) சித்த சுவாதீனமற்றவர்.
05) கடன் இறுக்க நிர்வாகமின்மை கோரி விண்ணப்பம் செய்தவர். அல்லது அவ்வாறு தீர்ப்பும் பெற்றவர்.
06) இச் சங்கத்திடம் அல்லது வேறு ஏதேனும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திடம் பெற்ற ஏதேனும் கடனைத் தீர்ப்பதில் அல்லது வேறு எந்த விதத்திலேனும் தவறியவர்.
07) சங்கத்தின் நலத்திற்கெதிரிடையான தொழிலினை நடத்துபவர்.
08) இச் சங்கத்தில் அல்லது இச் சங்கம் உறுப்புரிமை வகிக்கும் ஏதேனும் சங்கத்தில் சம்பளம் பெறும் பணியாளர்.
(09 உறுப்பினர் என்ற முறையிலன்றி நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ சங்கத்திடம் அல்லது சங்கம் செய்துள்ள ஒப்பந்தத்தில் அல்லது ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களில் அக்கறையுடையவராக இருத்தல்.
10) கடந்த ஐந்து (5) ஆண்டுகளுக்குக் கூட்டுறவுச் சங்க விதிகளின் கீழ் தனது பதவியை அல்லது வேலையை விட்டகலவேண்டி நேரிட்டவர்.
11) கிளை பொதுச்சபை கூட்டத் திகதிக்கு முன்னர் சங்க உறுப்புரிமையை இழந்தவர்.
12)நாடாளுமன்ற, மாகாணசபை, நகரசபை அல்லது பிரதேச சபையில் உறுப்பினராக உள்ளவர்.
13) சங்கத்தின் உற்பத்தி நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு மேல் ஈடுபாடில்லாதிருப்பதைச் சம்பந்தப்பட்ட கிளைக்குழுவால் உறுதிப்படுத்தப்பட்டவர்.

(சி/13583)(6.6)

## கழிவகற்றல் முகாமைத்துவ இடமாகப் பயன்படுத்துதல்

மேற்படி விடயம் தொடர்பாக நல்லூர் பிரதேச சபையின் எல்லைப் பரப்பிற்குள் சேகரிக்கப்படும் கழிவுகளை ஏ-9 வீதியில் உள்ள சித்துப்பாத்தி இந்து மயானக் காணியின் ஒரு பகுதியில் கொட்டி முகாமை செய்வதற்காக இப்பகுதியைப் பிரதேச சபை தெரிவு செய்துள்ளது. இவ்விடயத்தில் கழிவுகளைக் கொட்டி முகாமை செய்வதற்கு ஆட்சேபனை இருப்பின் 22.11.2013 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ப.வசந்தகுமார், தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி/13680)(2.6)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா ஆறுமுகம்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா ஆறுமுகம் நேற்று முன்தினம் (05.11.2013) கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர் ஆறுமுகம் J.P (உரிமையாளர், கரன் மதுபான விற்பனை நிலையம்) அவர்களின் அன்பு மனைவியும், சறோஜினிதேவி, காலஞ்சென்ற இறஞ்சினிதேவி மற்றும் ராகினிதேவி (டென்மார்க்), யோகினிதேவி (ஜேர்மனி), ஸ்ரீதரன் (பிரான்ஸ்), கெங்காதேவி, கெங்காகரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ் சென்றவர்களான சின்னம்மா, வள்ளிப்பிள்ளை, செல்லர், முத்து, மாணிக்கம், சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தெய்வி, வள்ளி, மாணிக்கம், கதிரவேலு, செல்லம்மா ஆகியோரின் மைத்து னியும், காலஞ்சென்ற தேவரத்தினம் (பொறியியலாளர்-லங்கா சிமெந்து லிமிட்) மற்றும் அற்புதசிகாமணி (ஸ்ரீலங்கா ரெலிகொம்), திருநாவுக்கரசு (டென்மார்க்), கங்கேஸ்வரன் (ஜேர்மனி), தாரணி (பிரான்ஸ்), சகாதேவன், சியாமளா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும், அனுஷா சிறோம் ஜெயந்த், நிறோஷன் (பிரான்ஸ்), டயானா கெளரீகன், செந்தூரன், அருண், சதீஸ், அனோஜா, றொமினா, அனிஸ்ரன், அரவிந்த், அக்ஷயன், ஆரபி, அபர்ணா ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும், ரேவந்த், அஸ்மின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2013) வியாழக் கிழமை தெல்லிப்பழையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் தெல்லிப்பழை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தபாற்கந்தோர் அருகில்,
கே.கே.எஸ். வீதி,
தெல்லிப்பழை.

(39786) (10,6)

தகவல்:
பிள்ளைகள்
021 224 1516

# மாநாட்டு இலச்சினையுடன் புதிய 500 ரூபாத் தாள்

## 15 இல் ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு,நவ.7

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு புதிதாக அச்சிடப்படவுள்ள 500 ரூபா நாணயத்தாள்களில் 2013 பொதுநலவாயத்தின் இலச்சினை பொறிக்கப்படவுள்ளது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்த இலச்சினைகளுடன் 50 லட்சம் ரூபா பெறுமதியான 10 ஆயிரம் 500 ரூபா நாணயத்தாள்கள் வெளிவரவுள்ளன.

பொதுநலவாய இலச்சினையுடன் கூடிய 500 ரூபா நாணயத்தாள்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படும் என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

தற்போது புழக்கத்திலுள்ள 500 ரூபா நாணயத் தாள்களில் மேலதிகமாக 2013 பொதுநலவாயத்துக்கான இலச்சினை பொறிக்கப்படவுள்ளதுஎன்று மத்திய வங்கியின் அதிகாரியொருவர் கூறினார். (ச)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## விற்பனைக்கு

நல்ல பெரிய இன ஊர்க்கோழிக்குஞ்சுகள் (4 மாதங்கள்) விற்பனைக்கு உண்டு

(39789)(2.6) தொ.பே: 077 541 7281

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## சவரிமுத்து தோமஸ்

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.
Techniciation,
Royal Airforce of oman)

பிறப்பு: 1950.01.19
இறப்பு: 2012.11.07

தனி மனிதனாய் நின்று
சாதித்த உம் வாழ்வு
ஒரு சரித்திரம்
சிலுவைகளை நீ சுமந்து
இன்பங்களை மட்டுமே
எமக்கு விட்டுச் சென்றாய்
இறந்தும் வாழும்
எம் தெய்வமே!
விண்ணில் தெய்வம்
இருப்பினும் பக்தனை
என்றும் பிரிந்ததில்லை
அதுபோல்
உங்கள் உடலை.
உயிர்பிரிந்தாலும்
எம்மை விட்டு
நீங்கள் பிரியவில்லை.
எம்முடனே வாழ்கின்றீர்.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன்.

நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

## அறைகள் வாடகைக்கு உண்டு

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகில், பலாலி வீதியில் பல்கலைக்கழக மாணவிகள், கல்லூரி மாணவிகள், தாதிகள் (Nurse), உத்தியோகம் பார்க்கும் பெண்கள் ஆகியோருக்கான அறைகள் சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.

(சி/13779)(2.6) தொ.பே:
077 930 0148, 021 222 7069

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

# மாணவர்களுக்கான நன்கொடை வழங்கல்

## நல்லூர் பிரதேச சபை

2011 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையில்
சித்தியடைந்து பல்கலைக்கழகம் தெரிவானவர்களுக்கும்,
2012 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கான
நன்கொடை வழங்கல் - 2013

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் பாதுகாப்பில் வாழ்ந்துவரும், 2012 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் 2011 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கும் நன்கொடை வழங்குவதற்கு இச் சபையால் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தகைமையைக் கொண்ட மாணவர்கள் நல்லூர் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து போதிய ஆவணங்களுடன் 06.12.2013 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ "தலைவர்" நல்லூர் பிரதேசசபை கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ப.வசந்தகுமார்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

(சி/13581)(2.6)

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையர்க்கரசி மூத்ததம்பி



கொல்லங்கலட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், பலாலியை வசிப்பிடமாகவும், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி மூத்ததம்பி நேற்று (06.11.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நிச்சிங்கர்-சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், மூத்ததம்பியின் (முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்) அருமை மனைவியும், கணேசராணி (ஜேர்மனி), கணேசரஞ்சன், கணேசகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் கணேசராஜா (ஜேர்மனி), விமலராணி, கலைராணி ஆகியோரின் அன்பு மாமியும், கஜன், பிரகாஷ், விரவீணா, பிரசாத், மிதுஷன், மதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சின்னதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
021 790 1447

(39785) (10,6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மக்கள் வங்கி

## மீட்கப்பெறாத அடகு நகைகள் பகிரங்க ஏலவிற்பனை

மக்கள் வங்கி வன்னி பிராந்திய கிளைகளான **முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முருங்கன்** ஆகிய கிளைகளில் **1983/12/31** வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் கீழே குறிப்பிட்ட திகதிகளில் இல. 9/1/1, புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கி வவுனியா கிளையில் முற்பகல் 9.00 முதல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் னஎ அறியத்தருகின்றோம்.

### ஏல விற்பனைத் திகதி

- 23.11.2013 - சனிக்கிழமை
- 24.11.2013 - ஞாயிற்றுக்கிழமை

மேற்படி ஏலவிற்பனையை முன்னறிவித்தலின்றி ரத்துச் செய்யவோ, ஒன்று சேர்க்கவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு சகல அதிகாரமும் உண்டு.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமைச் செயலகம்,
வன்னி,
வவுனியா.

(சி/13578)
(10,6)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இசைப்பிரியா

இராணுவச் சிப்பாயே தன்னிடம் தந்தார் என்று 'சனல் - 4' ஊடகவியலாளர் கெலும் மக்ரே கூறியிருந்தார்.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரியவிடம் 'உதயன்' வினவியது. அதற்குப் பதிலளிக்கையிலேயே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சனல் - 4' இசைப்பிரியா தொடர்பில் வெளியிட்ட காணொலி கட்டமைக்கப்பட்ட பொய். அது ஒரு நாடகம். இது உலகம் முழுவதிலிருக்கும் மக்களுக்கும் தெரியும். தனது பொய் அம்பலமாகிவிட்டது என்பதற்காகவே கெலும் மக்ரே இவ்வாறு சொல்கிறார். தனது ஆவணப் படத்தின் மீதான சந்தேகத்தை இல்லாமல்செய்யவே இவ்வாறு சொல்லியிருக்கக் கூடும்.

அந்தக் காணொலியில் பாருங்கள். அதில் காட்டப்படும் பெண்ணின் முகத்தில் பயம் தெரிகின்றதா? புன்சிரிப்புத் தெரிகின்றதா? இவ்வாறு நான் கேட்கவில்லை. உலக மக்கள் கேட்கின்றனர்.

இராணுவச் சிப்பாய் தான் தந்தார் என்றால் உண்மையான ஆதாரங்கள் அவரிடம் இருக்குமானால் அதனை உரியவர்களிடம் கொடுக்கலாம் தானே.

**வெள்ளைத்துணி**

சரி, குறித்த காணொலியில் அந்தப்பெண் மீது வெள்ளைத் துணி போர்த்தப்படுகிறது. அந்த உச்சமான நடைபெற்ற போர் நேரத்தில் எப்படி வெள்ளைத் துணி அங்கு வந்திருக்கும். அதுவும் சிறிதும் கறைபடாத புத்தம்புதிய துணியாக அதுஎப்படியிருக்கும்.

**இசைப்பிரியா**

இசைப்பிரியாலவைப் பற்றி நான் சொல்ல வேண்டும். அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் பயிற்சி பெற்ற ஒரு போராளி. அதுவும் லெப்டினன்ட் கேணல் தரத்தைச் சேர்ந்தவர். அவர்களின் தொலைக்காட்சியில் வேலை செய்தவர்.

போரின் இறுதிக்கட்டத்தில் அவர்களின் தொலைக் காட்சி இருக்கவில்லை.

அப்பாவிச் சிறுவர்களையே ஒரு வாரப் பயிற்சியோடு போர்க் களத்துக்கு அனுப்பி வைத்தார் பிரபாகரன். இதற்கு எம்மிடம் ஆதாரங்கள் உள்ளன. இறுதிக் கட்டத்தில் எங்களிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று வெளியேறியவர்கள் இதற்குச் சாட்சி.

இந்த அப்பாவிச் சிறுவர்களையே இறுதிக்கட்டத்தில் போருக்கு அனுப்பிய பிரபாகரன்.பயிற்சி பெற்ற இசைப்பிரியாவைப் போருக்கு அனுப்பாமல் விட்டிருப்பாரா?

**புலம்பெயர் தமிழர்கள்**

புலம்பெயர் தமிழர்களில் 90 சதவீதமானவர்கள், நல்லவர்கள். 10 சதவீதத்தினரே எல்லாக் குழப்பமும் செய்கின்றனர்.

இதுவரை காலமும் போருக்கு ஆயுதங்கள் வாங்கப் பணம் அனுப்பியவர்கள், இப்போது ஊடகங்களை வாங்குகின்றனர்.

கெலும் மக்ரேயின் மனைவி ஒரு தமிழ்ப் பெண். அவரை வைத்தே மக்ரேயை அணுகியுள்ளனர். மக்ரே வெறும் பொம்மை தான். புலம்பெயர் தமிழர்களின் ஆட்டுவிப்புக்கு அவர் ஆடவேண்டியது தான்.

பிச்சைக்காரன் எப்போதும் புண்ணைக் காட்டியே பிச்சை எடுப்பான். புண் மாறிவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது.

அதேபோன்றுதான் 10 சதவீதமான புலம்பெயர் தமிழர்களும்.

அவர்கள் இலங்கையில் மீண்டும் போரை உருவாக்கப்பார்க்கிறார்கள். அவர்கள் பாடுபடுவது தமது சொந்த நலனுக்காகவே அன்றி தமிழ் மக்களுக்காக அல்ல - என்றார். (த-5)

### அரசுக்கு

பதவியை வழங்குவதன் மூலம் பொதுநலவாயத்தின் கொள்கைகளை விரும்பியோ விரும்பாமலோ இலங்கை அரசு பின்பற்ற வேண்டிய நிலைக்குள் தள்ளப்படும்.

கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கும் திருட்டுப் பூனை போன்று இலங்கை நடக்க முடியாது. அப்படி நடக்குமாயின் இந்த அரசிடமிருந்து தலைமைப் பதவி பறிக்கப்பட்டு, பொதுநலவாய அமைப்பிலிருந்து அது வெளியேற்றப்பட வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எச்சரித்துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்திக்கொள்ளையடிக்கும் சந்தர்ப்பத்தைத்தான் முதலில் கேட்டது. அதை மறுத்த பொதுநலவாய அமைப்பு இன்று இவர்களுக்குப் பொதுநலவாய அரசுத் தலைவர்கள், மாநாட்டை நடத்தச் சந்தர்ப்பம் வழங்கியது.

இந்தச் சந்தர்ப்பத்தைக் கேட்டு வாங்கிப் பொறியில் சிக்கிக் கொண்டு அரசு இன்று விழிபிதுங்கிப்போய் இருக்கின்றது. அரசின் உயர்பீடம் இப்போது இந்த உண்மையை மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிக்கிறது.

தேள் கொட்டு வாங்கிய திருடனைப்போல் கட்சித்தலைமை முழிக்கின்றது. ஆனால் ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, பொதுபலசேனா, ராவணபலய, தேசிய தேசபக்தி இயக்கம் போன்ற அரசின் கூட்டாளிகள் இதை உணர்ந்து பகிரங்கமாகவே கண்ணீர் வடிக்கின்றனர்.

பொதுநலவாய மாநாடு நடந்து முடிந்த பின்னர், இந்த அமைப்பின் தலைமை நாடாக இலங்கையே இருக்கப் போகிறது. இது இலங்கைக்குக் கிடைத்த விசேட வரப்பிரசாதம் அல்ல. அதுபோல் இலங்கை ஜனாதிபதிக்குத் தனிப்பட்ட முறையில் கிடைக்கும் விசேட அந்தஸ்தும் அல்ல.

இது ஒரு சம்பிரதாயம் 1976 இல் அணிசேரா நாடுகளின் மாநாடு இலங்கையில் நடைபெற்ற பின்னர் அந்த அமைப்பின் தலைமைப் பதவி இலங்கைக்குக் கிடைத்தது. அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அதற்குத் தலைவராக இருந்தார்.

1977 தேர்தலில் அவரது அரசு தோல்வியடைந்த பின்னர் அந்தப் பதவி புதிய இலங்கைப் பிரதமருக்கு கிடைத்தது. அடுத்த வருடம் நடுப்பகுதியில் இந்த அரசு வீழ்ச்சியடையும். இதுதான் நடக்கப்போகின்றது.

சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள், ஊடக சுதந்திரம் தொடர்பில் பொதுநலவாயப் பிரகடனத்தை மீறிச் செயற்பட முடியாது. சட்டத்தின் முன்னால் அரச தலைமைக்கு நெருக்கமானவர்கள் என்று கூறிக்கொண்டு சிலர் சலுகை பெறமுடியாது.

அதுபோல் ஊடகங்களில் அரசுக்கு எதிராக எழுதப்படுமானால் அந்த ஊடகங்களைத் தொலைபேசியில் அழைத்து மிரட்ட முடியாது. அதுபோல் ஆள் கடத்தல் , படுகொலை கலாசாரம் ஆகியவற்றை முன்னெடுக்க முடியாது.

தலைமைப் பதவியைக் கையில் வைத்துக்கொண்டு இந்த அரசு மாநாட்டுக்குப் பிறகு கண்ணை மூடிக்கொண்டு பால்குடிக்கும் திருட்டுப் பூனை போல் நடக்க முடியாது. அப்படி நடக்குமாயின் இந்த அரசிடமிருந்து தலைமைப் பதவி பறிக்கப்பட்டு, அந்த நாடு பொதுநலவாய அமைப்பிலிருந்து வெளியேறும் நெருக்கடி நிலைமை ஏற்படும். ஆகவேதான் பொதுநலவாய மாநாடு என்பது ஒரு பொறி. மஹிந்த ஆட்சி என்ற எலிக்கு வைக்கப்பட்டுள்ள எலிப் பொறி. இவர்களின் மொழியில் சொன்னால் மேற்கத்திய நாடுகள் ஏகாதிபத்தியவாதிகள், வெள்ளைக்காரர்கள், இந்தியர்கள் அனைவரும் சேர்ந்து வைத்துள்ள பொறி என்றார். (த-5)

### மன்மோகன் புறக்கணித்தால்

யேற்றுச் செல்லமாட்டார் என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டுக்குச் செல்வதா என்பது குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இன்னமும் முடிவெடுக்கவில்லை. இந்தியப் பிரதர் மாநாட்டைப் புறக்கணிக்க முடிவெடுத்தால், துணைக்குடியரசுத் தலைவர் அல்லது வெளிவிவகார அமைச்சர் இந்தியக் குழுவுக்குத் தலைமை தாங்குவார் என்று முன்னர் செய்திகள் வெளியாகின.

ஆனால், மன்மோகன்சிங் மாநாட்டைப் புறக்கணிக்க முடிவெடுத்தால், அவருக்குப் பதிலாக இந்தியக் குழுவுக்கு துணைக்குடியரசுத் தலைவர் தலைமை தாங்கிச் செல்லமாட்டார் என்று தெரியவந்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தே இந்தியக் குழுவுக்குத் தலைமை தாங்குவார்.

2011 ஆம் ஆண்டில் பேர்த்தில் நடந்த பொதுநலவாய மாநாட்டுக்கு, பிரதமர் செல்லாத நிலையில், துணைக் குடியரசுத் தலைவரே பங்கேற்றிருந்தார். அரசியல் நிர்ப்பந்தங்களினால், பிரதமர் மன்மோகன் சிங் மாநாட்டில் பங்கேற்க முடியாது போனால், அவருக்குப் பதிலாக துணைக்குடியரசுத் தலைவரை அனுப்புவது குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

ஆனால், பிரதமர் மன்மோகன்சிங் மாநாட்டைப் பறக்கணிப்பதன் மூலம், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கைக்கு கடுமையான சமிக்ஞை ஒன்றை அனுப்ப முற்படும் போது, துணைக் குடியரசுத் தலைவரை அனுப்பினால் இந்தியக் குழுவின் தரம் உயர்ந்து விடும்.

மேலும் துணைக்குடியரசுத் தலைவர் அரசமைப்புசார் நிலையில் உள்ளவர். அவர் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. இதனால் அவர் அரசின் சார்பாக தலைவர்களுடன் பேச்சுகளை நடத்துவதும், பிரகடனங்களை வெளியிடுவதும் சிக்கலானது.

எனவே, பிரதமர் அல்லது வெளி விவகார அமைச்சரே பொதுநலவாய மாநாட்டுக் குழுவுக்கு தலைமையேற்பது என்று உயர்மட்டக் கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரதமர் மன்மோகன்சிங், மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சு வலியுறுத்தி வருகிறது.

### முள்ளிவாய்க்கால்

ளையின் சார்பில் அமைக்கப்பட்ட இந்த நினைவு முற்றத்தை நேற்று புதன்கிழமை காலை 10.30 மணியளவில் பழ.நெடுமாறன் திறந்து வைத்தார்.

இதனை நாளை வெள்ளிக்கிழமை திறந்து வைப்பதற்கே திட்டமிடப்பட்டிருந்தது இருப்பினும் இந்தத் திறப்பு விழாவுக்குப் பொலிஸாரின் அனுமதி கோரி, சென்னை உயர் நீதிமன்றின் மதுரைக் கிளையில் உலகத் தமிழர்பேரவைப்பின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அவரின் மனுவை விசாரணைக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை எடுத்துக் கொண்ட நீதிமன்றம் பொலிஸ் அனுமதி வழங்குமாறு உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தடைவிதிக்கக் கோரி சிலர் நீதிமன்றத்தை அணுக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்தே நினைவு முற்றம் அவசரமாக நேற்றுத் திறக்கப்பட்டது. (த-5)

### பொதுநலவாய

கூடாது என்று அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இந்த மாநாட்டில் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-5)

### மன்மோகன் வருகை

கையிடம் உறுதிப்படுத்திவிட்டதா என்ற கேள்விக்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம,

**"இன்னும் இல்லை. எனினும், மாநாட்டுக்கு இன்னும் காலம் இருக்கின்றது. அதுகுறித்து பதற்றமடைய வேண்டியதில்லை. மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்பார் என்ற நம்பிக்கை இலங்கைக்கு இருக்கின்றது" என்று குறிப்பிட்டார்.**

அதேவேளை, பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதை 37 நாடுகளின் அரச தலைவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் என அரசு அண்மையில் அறிவித்தது. இந்தத் தொகை தற்போது அதிகரித்துள்ளதா என எழுப்பப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு,

"ஆம். 38 நாடுகள் தமது வருகையை உறுதிப்படுத்தியுள்ளன" என்று பதிலளித்தார் அமுனுகம.

பொதுநலவாய மாநாட்டுக்குச் செல்லுமாறு பிரதமர் மன்மோகன் சிங்குக்கு சவுத்புளொக் பரிந்துரைத்துள்ளது எனக் கூறப்படுகின்றதே என்ற கேள்விக்கு,

"ஆம். அவ்வாறுதான் செய்திகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன" என்று வெளிவிவகார அமைச்சின் செயலர் மேலும் கூறினார். (த-சி)

### காணாமற்

பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 468 பேருமாக 2 ஆயிரத்து 301 பேர் குறித்துப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆவணங்களை மன்னார் பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள் நேற்று புதன்கிழமை கொழும்பில் உள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு நேரடியாகச் சென்று கையளித்தனர்.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை, உபதலைவர் சகாயம், செயலாளர் சிந்தாந்துரை, பொருளாளர் தங்கராசா மற்றும் காணாமற்போனோரின் குடும்ப உறவுகளின் சங்கத் தலைவி திருமதி இமானுவல் உதயச்சந்திரா ஆகியோருடன் காணாமற்போனோரின் உறவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொரு மாவட்டத்தின் பிரதிநிதிகளும் நேரில் சென்று இந்த விவரங்களைக் கையளித்தனர்.

இந்த ஆவணங்களை ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் பரணகம மற்றும் செயலாளர் குணதாச ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (த-5)

### வடக்கு

கப்பட்டுள்ளது. இலங்கையின் மனித உரிமைகளுக்காக நாம் தொடர்ந்து போராடுவோம்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்பான கவலைகளை வெளிப்படுத்தும் விதத்தில், பொது நலவாய மாநாட்டுக்கு உயர்மட்டக் குழுவை அனுப்பாத ஒரே நாடு கனடாதான்.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கச் செல்லும் போது இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கும் செல்வேன் என்று நம்புகிறேன். அங்கு போருக்குப் பின்னரான நிலைமைகளைப் பார்வையிடுவதுடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசுவேன்.

கனடா திரும்பியதும் இலங்கையிலுள்ள நிலைமைகள் குறித்து எனது உணர்வுகளைக் கனேடிய அரசுக்கு வெளிப்படுத்துவேன் - என்றார். (த-5)

### இலங்கைக்கு

(விஸா) வழங்கப்பட் டுள்ளது.

இந்த மாதம் கொழும்பில் இடம்பெறும் பொதுநலவாய அரசுத் தலைவர்கள் மாநாட்டில் செய்தி சேகரிப்பதற்காக 800 வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இவர்களுள், இலங்கையின் இறுதிப்போரில் நிகழ்ந்த மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைச் சர்வதேச அரங்குக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய 'போர் தவிர்ப்பு வலயம்' 'போர்க் குற்றங்கள்' என்ற இரு ஆவணப் படங்களையும் இயக்கிய இயக்குநர் கெலும் மக்ரேக்கும் இலங்கை வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சனல் - 4 ஊடகவியலாளர் குழுவுக்கும் நுழைவிசைவு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்தியாவுக்குச் செல்வதற்கு நுழைவிசைவுக்கு கெலும் மக்ரே விண்ணப்பித்தபோதும் அவருக்கு அது வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# இணுவில் யூத் வென்றது



யாழ்ப்பாணம், நவ.7
தீபாவளியை முன்னிட்டு நந்தாவில் அம்மன் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இணுவில் யூத் அணி வெற்றி பெற்றது.

அழைக்கப்பட்ட ஆறு அணிகளுக்கிடையில், 8 பந்துப் பரிமாற்றங்களுடனான 11 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடர் நடத்தப்பட்டது.

இறுதி ஆட்டத்தில் ஆர்.வி. விளையாட்டுக் கழகமும், இணுவில் யூத் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இணுவில் யூத் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

இணுவில் யூத் அணி வீரர் கோகுலனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களை அவ்வணி பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் கோகுலன் ஆட்டமிழக்காது 7 சிக்ஸர்கள் அடங்கலாக 49 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் ஆர்.வி. விளையாட்டுக் கழகம் சார்பாக தனலக்ஷன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் 99 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஆர்.வி. விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை மட்டும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனால் 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அந்த அணி தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் ஆர்.வி விளையாட்டுக்கழகம் சார்பாக லிங்கம் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் இணுவில் யூத் சார்பாக மதன், கோகுலன் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக இணுவில் யூத் அணியின் கோகுலன் தெரிவானார்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தனும் , தாவடி சிவசக்தி சனசமூக நிலைய முன்னாள் தலைவர் சிவநாதன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிக்கான கிண்ணம் உட்பட பரிசில்களை வழங்கி வைத்தனர். (த-5)

# இரண்டு பிரிவுகளில் யாழ்.மத்தி வெற்றி

யாழ்ப்பாணம், நவ.7
சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டி கடந்த திங்கட்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் இரண்டு பிரிவுகளில் யாழ்.மத்திய கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தததது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் ஒரு கோலையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தததது.

> "-"
> 18 வயதுப் பிரிவு அணி களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# நட்சத்திர ஆட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், நவ.7
மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நட்சத்திர உதைபந்தாட்ட போட்டித் தொடரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்துக்கும், யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துக்கும், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23-8)



சிவில் நிர்வாகத் திணைக்களத்தின் ஆண்டு நிறைவு விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது வடக்கு மாகாண கராத்தே போட்டியில் வெற்றி பெற்று பதக்கங்களைப் பெற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டக் கராத்தே அணியினர் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்ட அணியினர் பொறுப்பதிகாரி மற்றும் பயிற்றுநர் சென்.சேல் விஜயராஜுடன் காணப்படுகின்றனர். (த-23)

# 13 வயது பிரிவுக்கான உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ.7
யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 13 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.



இந்தப் போட்டியில் 2001, 2002 ஆம் ஆண்டுகளில் பிறந்த மாணவர்கள் ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்ற முடியும்.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் பேர்ட்டி பணிஸ்ரருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

# பெண்கள் உதைபந்தாட்டம்; மாதகல் சென்.ஜோசப் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.7
சண்டிலிப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்கள் உதைபந்தாட்ட போட்டி கடந்த 30ஆம் திகதி புதன்கிழமை சென் ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மாதகல் சென் ஜோசப் கல்லூரி அணி சம்பியனானது. இதில் மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம், மாதகல் சென் ஜோசப் அணிகள் பங்குபற்றின.

இதில் முதலில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை கன்னியர் மடம் அணி மோதியது. இரு அணிகளும் கோல் எதனையும் போடாது சமநிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. பின்னர் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.




இதில் 3:2 என்ற கோல்கணக்கில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இறுதியாட்டத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து மாதகல் சென் ஜோசப் அணி மோதியது. இரு அணிகளும் கோல் போடும் வாய்ப்புக்களை இழந்தனர். இதனால் ஆட்டம் சமநிலையில் நிறைவடைய, சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3:2 என்ற கோல் கணக்கில் மாதகல் சென் ஜோசப் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

2ஆம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியும், 3ஆம் இடத்தை இளவாலை கன்னியர் மட அணியும் பெற்றுக் கொண்டன. (த-422)

# பூப்பந்தாட்ட போட்டிகள் 16 ,17 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், நவ.7
யாழ்.மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் மணிவதனன் ஜெயச்சித்திரா சகோதரர்கள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி, கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபன மண்டபம் ஆகியவற்றில் இடம் பெறவுள்ளன.



ஆண்களுக்கான திறந்த போட்டி, ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டம், ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டம், பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டம், பெண்களுக்கான இரட்டையர் ஆட்டம், கலப்பு இரட்டையர் ஆட்டம், 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டம், 35 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டம், 45 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டம் ஆகிய பிரிவ்களில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ள போட்டியாளர்கள் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் மோகனிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.' (த-23)

# தென்னாபிரிக்காவுக்கு செல்கிறது பாகிஸ்தான்



கிரிக்கெட் சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் அணி இம்மாத இறுதியில் தென்னாபிரிக்காவுக்குச் செல்லவுள்ளது.

திடீரென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் தொடரான இதில் இரண்டு 20/20 சர்வதேசப் போட்டிகளும், 3 ஒருநாள் சர்வ தேசப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

நவம்பர் 20ஆம் திகதி முதலாவது 20/20 சர்வதேசப் போட்டியுடன் ஆரம்பிக்கவுள்ள இத்தொடர், நவம்பர் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள ஒருநாள் சர்வதேசப் போட்டியுடன் நிறைவடைய வுள்ளது.

இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முழுமையான தொடரொன்றில் பங்குபற்றவிருந்த நிலையில், அந்தத் தொடர் குறுக்கப்பட்டு இடம்பெறுவதாலேயே இந்தத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியத் தொடரில் இடம்பெறாது போன 4 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கும், இரண்டு 20/20 சர்வ தேசப் போட்டிகளுக்கும் பதிலாக 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிக ளும், இரு 20/20 சர்வதேசப் போட்டிகளும் இத் தொடரில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், இத் தொட ரில் டெஸ்ட் போட்டிகள் எவையும் இடம் பெறமாட்டா.

**போட்டி அட்டவணை:**

| | |
|---|---|
| 1 ஆவது 20/20 சர்வதேசப் போட்டி | - நவம்பர் 20 - ஜொஹன்னர்ஸ்பேர்க் |
| 2 ஆவது 20/20 சர்வதேசப் போட்டி | - நவம்பர் 22 - கேப் ரௌண் |
| 1 ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டி | - நவம்பர் 24 - கேப் ரௌண் |
| 2 ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டி | - நவம்பர் 27 - போர்ட் எலிசபெத் |
| 3 ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டி | - நவம்பர் 30 - செஞ்சூரியன் |

# பந்தை பார்த்தாலே பயமாக இருக்கிறது



பந்தை நான் சேதப்படுத்தவில்லை, மக்கள் என்னை மோசடிக்காரன் எனச் சொல்வதைக் கேட்டால் வருத்தமாக உள்ளது என தென்னாபிரிக்காவின் டுபிளசிஸ் தெரிவித்துள்ளார்.

டுபாயில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க வீரர் டுபிளசி, பந்தைத் தேய்த்துச் சேதப்படுத்தியதாக நடுவர்கள் புகார் கூறினர்.


இதற்காகப் போட்டிச் சம்பளத்தில் இருந்து 50 சதவிகிதம் டுபிளசிச்ஸுக்கு அபராதமாக விதிக்கப்பட்டது.

இந்நிலையில் இதுகுறித்து டுபிளசிஸ் கூறுகையில், நான் ஒரு நேர்மையான வீரர் என்பது எனக்குத் தெரியும். மக்கள் என்னை மோசடிக்காரன் எனச் சொல்வதைக் கேட்டால் வருத்தமாக உள்ளது.

தற்போது பந்தை யாராவது என் மீது எறிந்தால் கூட அதைப் பார்க்கவே பயமாக இருக்கிறது. போட்டியின் போது பந்தை விதிகளுக்கு உட்பட்டுத்தான் கையாண்டேன், களத்திலிருந்த நடுவர் கூட பந்தைப் பரிசோதித்தார். தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை, ஆனால் இந்தச் சம்பவத்தில் இருந்து நல்ல பாடம் கற்றுக் கொண்டேன் என்று தெரிவித்துள்ளார். (த)

நான் ஒரு நேர்மையான வீரர் என்பது எனக்குத் தெரியும். மக்கள் என்னை மோசடிக் காரன் எனச் சொல் வதைக் கேட்டால் வருத்தமாக உள்ளது. தற்போது பந்தை யாராவது என் மீது எறிந்தால் கூட அதைப் பார்க்கவே பயமாக இருக்கிறது.

# ஜடேஜாவுக்கு மாற்று வீரர் யார்?



இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ரவீந்திர ஜடேஜாவுக்குப் பதிலாக யாரைக் களமிறக்குவது என்பது தொடர்பாக இந்திய அணி ஆராய்ந்து வருகிறது.

அண்மைக்காலத்தில் இந்திய டெஸ்ட் அணியின் முக்கிய வீரராகக் காணப்பட்ட ரவீந்திர ஜடேஜா மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடரில் பங்குபற்ற முடியாத நிலை காணப்படுகிறது. அவருக்கு ஏற்பட்ட தோள்பட்டை உபாதை காரணமாகவே அவர் இத்தொடரில் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ரவீந்திர ஜடேஜாவுக்குப் பதிலாக யாரைக் களமிறக்குவது என்ற குழப்பம் இந்திய அணிக்கு ஏற்பட்டுள்ளது.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளராகவும், 7ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரராகவும் ரவீந்திர ஜடேஜா இருந்து வந்த நிலையில், தற்போது பந்து வீச்சாளரையா, துடுப்பாட்ட வீரரையா களமிறக்குவது என்பது தொடர்பாக இந்தியா ஆராய்வதாக இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் சுழற்பந்து வீச்சாளரோடு இந்திய அணி களமிறங்க முடிவு செய்தால் அமித் மிஷ்ராவும், துடுப்பாட்ட வீரரோடு களமிறங்க விரும்பினால் ரோகித் சர்மா அல்லது அஜின்கியா ரஹானேவோடும் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சச்சின் டெண்டுல்கரின் இறுதித் தொடராக அமையவுள்ள இந்தத் தொடரின் முதலாவது போட்டி இன்று ஆரம்பிக்க வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# போல்டை முந்துவாரா




இவ்வாண்டுக்கான சிறந்த உலக மெய்வன்மை விருதுக்கான 3 வீரர்கள் அடங்கிய இறுதிப் பட்டியலில் பிரிட்டனின் மூ பராவும் இடம்பெற்றுள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளில் 2 தங்கப் பதக்கங்களையும், உலக சம்பியன் ஷிப் போட்டிகளில் இரண்டு தங்கப்பதக்கங்களையும் பெற்ற இரண்டாவது வீரராக அவர் வரலாற்றில் இடம் பிடித்திருந்தார்.

சர்வதேச மெய்வன்மைச் சம்மேளனங்களின் சங்கம் இந்த விருதுக்கான வீரர்களின் இறுதிப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்த இறுதிப் பட்டியலில் அதி வேக ஓட்டவீரர் உசைன் போல்ட் மற்றும் உக்ரைய்னின் உயரம் பாயும் வீரர் பொஹ்டன் பொண் டாரிங்கோ ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

எதிர்வரும் 16 ஆம் திகதி மொனாக்கோவில் நடைபெறவுள்ள நிகழ்வில் விருதுக்கான வெற்றியாளர்கள் அறிவிக்கப்படவுள்ளனர். (த)

# சச்சின் தான் சிறந்தவர்



லாரா, பொண்டிங்கை விட சச்சின் தான் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர் என தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வேகப் பந்து வீரரான அலன் டொனால்ட் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், சச்சின் ஓய்வு முடிவை அறிவித்தவுடன் தென்னாபிரிக்க ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

ஒவ்வொருவரும் அவரது ஆட்டத்தை காணும் ஆவலுடன் இருந்தனர். அவரது கடைசி டெஸ்ட் தென்னாபிரிக்காவில் நடக்கும் என்று நினைத்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அப்படி அமையாமல் போய்விட்டது. 24 ஆண்டு காலம் விளையாடிய அவர் இளம் வீரர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக இருந்துள்ளார். அனைத்து வகையிலும் அவர் மிகவும் பாராட்டத் தகுதியானவர். நான் பந்து வீசிய துடுப்பாட்ட வீரர்களில் டெண்டுல்கர், லாரா, பொண்டிங் சவாலாக விளங்கினார்கள் என்றார்.

# லாராவின் ஆசை நிறைவேறுமா?


Actionimages

இந்தியா, மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் வரும் 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடக்க இருக்கின்றது.

இந்தியாவின் நட்சத்திர விளையாட்டு வீரரான சச்சின் டெண்டுல்கர் இந்தத் தொடருடன் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதால் அவருக்கு பிரம்மாண்டமான வழியனுப்பு விழா ஏற்பாடு கொல்கத்தா கிரிக்கெட் சங்கத்தால் செய்யப்பட்டு வருகின்றது.

இது குறித்து மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரர் பிரையன் லாரா தனது கட்டுரையில் வெளியிட்டிருப்பதாவது,

இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் ஆகிய இரண்டு நாடுகளின் கிரிக்கெட் இடையே வரலாற்று தொடர் இருக்கும் என்று நான் நம்புகிறேன். நான் எப்போதுமே கிரிக்கெட்டை ஒரு குழுவினரின் விளையாட்டாகத்தான் பார்க்கிறேன். ஆனால் சில சமயங்களில் சில தனி மனிதர்களும் இதில் சிறப்பு கவனத்தைப் பெறுகின்றனர். அதுபோல் என்னுடைய நண்பர் சச்சின் ஓய்வு பெற இருக்கும் இந்த டெஸ்ட் தொடரிலும் அவரது முக்கியத்துவம் தனித்துத் தெரியும்.

கொல்கத்தாவும், ஈடன் கார்டனும் இந்தச் சந்தர்ப்பத்தைச் சிறப்பாக கொண்டாட உள்ளன. சச்சினின் மெழுகுச்சிலை ஒன்று ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. போட்டியைப் பார்க்க வரும் ரசிகர்களுக்கு 70,000 முகமூடிகள் வழங்கப்பட உள்ளதாகவும் கேள்விப்பட்டேன். முதல் நாள் நாணயச் சுழற்சிக்குப் பயன்படுத்தப்படும் நாணயத்தில் சச்சினின் முகம் பொறிக்கப்பட்டிருக்கும். முதன்முறையாக இங்கு வழங்கப்படும் டிக்கெட்டுகளிலும் சச்சின் முகம் அச்சிடப்பட்டுள்ளது.

இத்தகைய கொண்டாட்டங்கள் ஒருவரது கவனத்தைச் சிதற அடிக்க முடியும். பிரிவு பசாரம் என்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல் என்பதை அனுபவத்திலிருந்து கூறமுடியும். சச்சினின் கண்களில் எங்காவது கண்ணீர்த்துளி இருக்கலாம்.

இந்த விழா உண்மையில் உணர்வுகளைச் சோதிக்க முடியும். நான் எப்போதுமே ஓட்டங்களின் கணக்கீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவன் கிடையாது. ஆயினும் நான் முன்பு கூறியதையே மறுபடியும் இங்கு சொல்ல விரும்புகிறேன்.

சச்சின் இந்தப் போட்டிகளில் நன்றாக விளையாட வேண்டும். ஆனால் மேற்கிந்திய தீவுகள் வெல்லவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.


ஈடன் கார்டன் வண்ணமயமாகக் காணப்படும். ஆனால் இறுதியில் வெற்றியின் வண்ணம் எந்த அணியினரால் ஏற்படுகின்றது என்பதைப் பார்க்க ஆவலுடன் இருப்பதாகவும் அவர் கூறினார்.

# பழி தீர்த்தார் நடால்

ஒற்றையர் தரவரிசையில் முதல்-8 இடங்கள் வகிக்கும் வீரர்களும், இரட்டையரில் முன்னிலை வகிக்கும் 8 ஜோடிகளும் பங்கேற்றுள்ள ஏ.டி.பி. உலக டூர் இறுதி சுற்று டென்னிஸ் சம்பியன் கிண்ணப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது.

இதில் ஒற்றையர் பிரிவில் 'ஏ' பிரிவில் நடந்த ஒரு ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரர் ஸ்பெயினின் ரபெல் நடால் 6-3, 6-2 என்ற நேர் செட்டில் சக நாட்டவர் டேவிட் பெடரரை பந்தாடினார். இதன் மூலம் கடந்த வாரம் பாரிஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் அரை இறுதியில் பெடரரிடம் அடைந்த தோல்விக்கு நடால் பழிதீர்த்துக் கொண்டார். இன்னும் ஒரு வெற்றி பெற்றால் ஆண்டின் இறுதிக்கான முதலாம் இடத்தை நடால் உறுதி செய்து விடுவார்.

இரட்டையர் சுற்றில் 'பி' பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக்குடியரசின் ராடக் ஸ்டெபனக் ஜோடி தங்களது முதல் ஆட்டத்தில் 6-3, 5-7, 10-8 என்ற செட் கணக்கில் அலெக்சாண்டர் பெயா (பிரேசில்)-புருனே சோரஸ் (ஆஸ்திரியா) இணையை வீழ்த்தியது. இந்த ஆட்டம் 1 மணி 43 நிமிடங்கள் நீடித்தது. (400)



# மேற்கிந்தியத்தீவுகளை மடக்கியது இந்தியா



கிரிக்கெட்டின் சகாப்தமான டெண்டுல்கர் 200ஆவது டெஸ்ட் போட்டியோடு ஓய்வு பெறுவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார். மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான கடைசி டெஸ்ட் தொடரோடு அவரது சகாப்தம் முடிகிறது. டெண்டுல்கரின் பிரிவுபசார டெஸ்ட் தொடர் நேற்று தொடங்கியது.

இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் இடையேயான 2 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் நேறறு தொடங்கியது. இந்த போட்டி சச்சினுக்கு 199வது டெஸ்ட் ஆகும். மேற்கிந்தியத்தீவுகள் அணி கப்டன் டாரன் சமி நாணயச் சுழற்சியில் வென்று தனது அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்..

கிறிஸ் கெய்ல், பவெலும் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இந்திய பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசி தொடக்க வீரர்களை ஆட்டமிழக்கச் செய்தனர். ஆட்டத்தின் 11ஆவது பந்துப்பரிமாற்றத்தில் கிறிஸ் கெய்ல் ஆட்டம் இழந்தார். அவர் 18 ஓட்டத்துடன் புவனேஸ்வர் குமார் பந்தில் முரளி விஜய்யிடம் பிடி கொடுத்து ஆட்டம் இழந்தார். அப்போது அவ்வணி 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

2 ஆவது இலக்குக்காக பெவலுடன் டாரன் பிராவோ ஜோடி சேர்ந்தார். 15 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் முகமதுசமி இந்த ஜோடியை பிரித்தார். பெவல் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து பவிலியன்திரும்பினார்.

3ஆவது இலக்குக்கு பிராவோவுடன் சாமுவேல்ஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பொறுப்புடன் விளையாடியது. குறிப்பாக சாமுவேல்ஸ் சிறப்பாக ஆடினார். 30 ஆவது பந்து பரிமாற்றத்தில் மேற்கிந்திய அணி 100 ஓட் டங்களை தொட்டது. சாமுவேல்ஸ் 61 பந்தில் அரை சதத்தை எடுத்தார். இதில் 8 நான்கு ஓட்டங்களும், 2 ஆறு ஓட்டங்களும் அடங்கும். மதிய உணவு இடை வேளையின் போது அவ்வணி 2 இலக்கு இழப்புக்கு 107 ஓட்டங்களை எடுத்து இருந்தது. முகமதுசமி தனது அபாரமான பந்து வீச்சால் இந்த ஜோடியை பிரித்தார்.

சாமுவேல்ஸ் 65 ஓட்டங்களுடன்(11 நான்கு, 2 ஆறு) அவரது பந்தில் ஆட்டமிழந்தார். அப்போது அவ்வணி 138 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அவர் ஆட்டம் இழந்த அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் பிராவோ 23 ஓட்டங்களுடன் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தார் அடுத்து வந்த ராம்தீன் 2 ஓட்டங்களுடன் முகமதுசமி பந்தில் வெளியேறினார். அடுத்ததாக வந்த கப்டன் டரன் சமி 16 ஓட்டங்களில் ஓஜா பந்தில் களத்தை விட்டு வெளியேறினார். 172 ஓட்டங்களுக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 இலக்குளை இழந்து பரிதாபமான நிலையில் இருந்தது. அடு த்து வந்த வீரர்கள் இந்தியா வின் பந்து வீச்சை தாக்கு பிடிக்க முடியாமல் சொற்ப ஒட்டங்களில் ஆட்டம் இழந்ததால் அவ்வணி சகல இலக்குகளையும் இழந்து 234 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இந்திய பந்து வீச்சாளர்கள் தரப்பில் அதிக பட்சமாக முகமதுசமி 4 இலக்குகளையும், அஸ்வின் 2 இலக்கினையும் கைப்பற்றினார்கள்.

பின்னர் இந்திய அணி முதல் இன்னிங்சை விளையாடியது. தொடக்க வீரர்களாக தவான், விஜய் களம் இறங்கி ஆடினார்கள் இருவ ரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இறுதியில் இந்திய அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இலக்கு இழப்பின்றி 37 ஓட்டங்களைப் பெற்றது. தவான், 21 ஓட்டங்களுட னும், விஜய் 16 ஓட்டங்களு டனும் களத்தில் இருந்தனர். இன்று போட்டியின் இரண்டாவது நாளாகும். (400)

**French Classes பிரெஞ் வகுப்புகள்**

af French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Francaise de Jaffna (AF) மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. இன்றே (தொலைபேசி மூலமும்) அனுமதிகளைப் பெறுவது சிறந்தது.

மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில் வரவும்

61, Kachcheri-Nallur Road, Jaffna

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 09.11.2013 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. மாலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

வாரநாள் (செவ்வாய், வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் 07.11.2013

1. காலை 09.00-11.00 2. காலை 11.00-01.00

குறிப்பு: பயிற்சியில் இணைந்துகொள்ள அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை

SAAMSON Language School 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.